www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2009
ரூ. 7.00





“மூன்றாவது அணி
ஆட்சியமைத்தால்...
நம்ம கட்சி மீண்டும்
‘வரலாற்றுத் தவறை’
செஞ்சுடக் கூடாது.
நாற்காலிய
விட்டுடக் கூடாது.

# போலி கம்யூனிஸ்டுகளின் பதவிப் பித்து!

படிப்பகம்

www.padippakam.com

# "வழக்குரைஞர் போராட்டத்தை ஆதரிப்போம்! போலீஸ் ராச்சியத்தை முறியடிப்போம்!"

## — தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்-ஆர்ப்பாட்டம்

அரசியல் புரோக்கர் சு.சாமி மீது அழுகிய முட்டை மோதி உடைந்ததும்; அதனை முகாந்திரமாக்கிக் கொண்டு, ஈழப் போரை நிறுத்தக் கோரிப் போராடி வந்த தமிழக வழக்குரைஞர்கள் மீது ஏவிவிடப்பட்ட திட்டமிட்ட கொலைவெறித் தாக்குதலையும்; லத்திக் கம்புகளுக்கு முன் செல்லாக்காசாகிப் போன செங்கோலின் 'அதிகாரத்தையும்' பிப்-19 இல் நாடே கண்டது.

இதனைத் தொடர்ந்து "இத்தாக்குதலை நடத்த உத்தரவிட்ட போலீசு அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்யவேண்டும்;



திருச்சியில்...

சென்னை மாநகர போலீசு ஆணையர் உள்ளிட்ட 15 அதிகாரிகளைத் தற்காலிக பணிநீக்கம் செய்யவேண்டும்" என்ற கோரிக்கைகளை முன்வைத்து, நீதிமன்றப் பணிகளைப் புறக்கணித்து வழக்குரைஞர்கள் போராடி வந்தனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய இரு போலீசு அதிகாரிகளைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து, வழக்குரைஞர்கள் நீதிமன்றப் புறக்கணிப்பைத் திரும்பப் பெற்றுள்ளனர்.

நீதிமன்ற வளாகத்தில் சட்டவிரோதமாகப் புகுந்து நூற்றுக்கணக்கான வழக்குரைஞர்ளையும் அவர்களுடைய வாகனங்களையும், நீதிபதிகளையும், நீதிமன்றச் சொத்துக்களையும் நொறுக்கி ரவுடித்தனம் செய்ததற்கு இதுதான் தண்டனை என்றால், இனி இரண்டென்ன, மூன்று-நான்கு போலீசு அதிகாரிகளை தற்காலிகப் பணிநீக்கத்திற்குத் தயார் செய்து கொண்டு யார் மண்டையையும் இவர்கள் பிளப்பார்கள்!

இது ஒரு போலீசு இராச்சியம் என்பது அம்பலமாகிவிட்டது! போலீசு இராச்சியம் என்பது வழக்குரைஞர்களின் பிரச்சினை மட்டுமல்ல; நம் அனைவரின் பிரச்சினை!

நீதிமன்றத்தில் தொடங்கிய இப்பிரச்சினை, நீதிமன்றத்துக்குள்ளேயே முடங்கிப்போய்விடக் கூடாது என்ற வகையில் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள், இப்பிரச்சினையின் அடிநாதமாய் அமைந்துள்ள சட்டபூர்வ பாசிசத்தை விளக்கி இலட்சக்கணக்கான துண்டுபிரசுரங்கள் மற்றும் பேருந்து, இரயில், தெருமுனைப் பிரச்சாரங்கள் வாயிலாக மக்கள் மத்தியில் கொண்டு சென்றன.

சு.சாமி என்கிற ஒட்டுண்ணி முட்டையடிபட்டதற்காக உயர் நீதி மன்றத்தையே ரத்தகாடாக்கிய காக்கிச் சட்டை கிரிமினல் கும்பலைக் கண்டித்தும்; தமிழக வழக்குரைஞர்களை "மாமாப்பயல்கள்" என இழிவுபடுத்தித் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு பேட்டியளித்திருந்த சு.சாமியைக் கைது செய்யக்கோரியும் கடந்த 26.02.09 அன்று திருச்சியில் புத்தூர் தலைமை அரசு மருத்துவமனை எதிரில் பு.மா.இ.மு. தலைமையில் அணிதிரண்ட அனைத்துக் கல்லூரி மாணவர்கள் எழுச்சிகரமான மறியல் போராட்டத்தை நடத்தினர்.

பார்ப்பனத் திமிர் பிடித்த இந்த சகுனி சு.சாமிக்குத் துடைப்பம், செருப்பு, அழுகின முட்டை கொண்டு 'ஆறுகால பூசை'யும் நடத்தினர், இம்மாணவர்கள்.

சு.சாமி படத்தின் மீது விழுந்த பூசையைத் தன் மீது விழுந்த அடியாகக் கருதி, ஆத்திரங்கொண்ட போலீசு போராடிய மாணவர்களை வலுக்கட்டாயமாக அள்ளிக் கொண்டு சென்றது. போலீசின் இந்த அடாவடித்தனத்தைக் கண்டித்து திருச்சி மாவட்ட வழக்குரைஞர் சங்கத்தில் உடனடியாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, வழக்கு எதுவும் பதிவு செய்யாமல் மாணவர்களை விடுவித்தது, போலீசு.

மறியல் போராட்டம் மட்டுமல்ல; பல இடங்களில் இவ்வமைப்பினர் பிரசுரம் கொடுத்ததைக்கூட 'சட்டம்-ஒழுங்கு பிரச்சினை'யாக்கியது, போலீசு. பொன்னேரியில் போலீசை வெறிநாயாகச் சித்தரித்த பேனரை பிடித்து பிரச்சாரம் செய்த தொழிலாளிகள் 5 பேரை சிறையிலடைத்தது தொடங்கி, மாநிலக் கல்லூரியில் வாயிற்கூட்டம் நடத்திய பு.மா.இ.மு. மாணவர்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டது வரை பல அடக்குமுறைகளைச் சந்தித்த போதும் சோர்வுறாமல் தமக்கேயுரிய போர்க்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்




மதுரையில்...



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 6**

ஏப்ரல் 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## மூன்றாவது அணி:
# போலி கம்யூனிஸ்டுகளின் பதவிப்பித்து!

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், கொள்கைக்கான கூட்டணி என்பதெல்லாம் காலாவதியாகி, இத்தனை தொகுதிகள் கொடுத்தால் இந்தக் கூட்டணி; இல்லையேல் அந்தக் கூட்டணி என்பதாக ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாதம் நாடெங்கும் நாறுகிறது. கூட்டணிக் குழப்பமே நாட்டின் மையமான அரசியலாக மாற்றப்பட்டு, கடந்த ஐந்தாண்டுகளில் இக்கட்சிகளும் ஆட்சிகளும் அடித்த கொள்ளைகள், அடக்குமுறைகள், துரோகங்கள் அனைத்தும் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன.

ஈழத் தமிழ் மக்கள் மீது சிங்கள-இந்திய அரசுகள் நடத்திவரும் கொடூரமான போரை எதிர்த்து சவடால் அடித்துவந்த திருமாவளவன் 2 சீட்டுக்காக கருணாநிதியிடம் பம்மிப் பதுங்கிவிட்டார். மருத்துவர் அண்ணன் ராமதாசு, அன்புச்சகோதரி பாசிச ஜெயலலிதாவின் காலடியில் விழுந்து கிடக்கிறார். தமிழினவாதக் குழுக்களோ, காங்கிரசு துரோகிகளை தேர்தலில் வீழ்த்துவது என்ற பெயரில் பாசிச ஜெயா-பா.ஜ.க.வுக்கு மறைமுகமாகச் சேவை செய்யக் கிளம்பிவிட்டனர். இப்பிழைப்புவாதிகளின் துரோகங்கள் மூடிமறைக்கப்பட்டு, ஈழவிவகாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஓட்டுச்சீட்டு சந்தர்ப்பவாதக் கூட்டணியே தமிழகத்தின் மையமான அரசியலாக்கப்பட்டு வருகிறது.

மறுபுறம்,காங்கிரசும், பா.ஜ.கவும் கடந்த தேர்தலில் வென்ற தொகுதிகளை மீண்டும் கைப்பற்ற முடியுமா என்பதே கேள்விக்குறியாகி விட்டது. தமிழகத்தில் முன்பு காங்கிரசு - தி.மு.க. கூட்டணியிலிருந்த பச்சோந்தி ராமதாசின் பா.ம.க.வும் இடது-வலது போலி கம்யூனிஸ்டுகளும் கூட்டணியிலிருந்து வெளியேறி ஜெயலலிதாவுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளனர். ஆந்திராவில் நடிகர் சிரஞ்சீவியின் கட்சி காங்கிரசின் வாக்கு வங்கிகளைச் சிதறடித்து விடும் என்று கூறப்படுகிறது. உ.பி.யில் முலயம்சிங், பீகாரில் லல்லுபிரசாத் யாதவ் - ராம் விலாஸ் பாஸ்வான் ஆகியோர் காங்கிரசுக்கு அற்பமான இடங்களை மட்டுமே ஒதுக்கியுள்ளனர். மகாராஷ்டிராவில், சரத்பவார் கட்சியும் காங்கிரசும் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள போதிலும், இன்னமும் தொகுதிப் பங்கீட்டில் கழுத்தறுப்புகள் நீடிக்கின்றன. இதேபோல, மே.வங்கத்தில் திரிணாமுல் காங்கிரசுடன் காங்கிரசு கட்சி கூட்டணி கட்டிக் கொண்டுள்ள போதிலும், தொகுதிப் பங்கீட்டில் நாய்ச் சண்டை தொடர்கிறது.

காங்கிரசின் நிலைமை இப்படியிருக்க, பா.ஜ.க.வின் நிலைமையோ அதைவிடக் கேவலமாக உள்ளது. பா.ஜ.க.வில் நாற்காலியைப் பிடிப்பதற்கான கோஷ்டிச் சண்டை புழுத்து நாறுவது ஒருபுறமிருக்க, ஒரிசாவில் பா.ஜ.க.வுடன் கூட்டணி கட்டிக் கொண்டிருந்த பிஜு ஜனதா தளம் இப்போது பா.ஜ.க.வைக் கை கழுவி விட்டது. மகாராஷ்டிராவில் சிவசேனாவும், பா.ஜ.க.வும் கூட்டணிக் கட்டிக் கொண்டாலும் தொகுதிப் பங்கீட்டில் இழுபறிகள் நீடிக்கின்றன. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் மக்களிடம் நிலவும் அதிருப்தி காரணமாகவும், கட்சியில் புழுத்து நாளும் கோஷ்டி சண்டைகள் காரணமாகவும் மீண்டும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் சுருங்கி விட்டன.

இப்படி பா.ஜ.க.வும் காங்கிரசும் பலவீனப்பட்டுப் போயுள்ள நிலையில், அவற்றுக்கு மாற்று என்ற பெயரில் காங்கிரசு - பா.ஜ.க.வுடன் கூட்டணி சேராத பிழைப்புவாதக் கட்சிகளைக் கொண்ட மூன்றாவது அணியை இடது-வலது போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்கியுள்ளனர். 'இந்த மூன்றாவது அணியிலுள்ள கட்சிகள் மொத்தத்தில் 100-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றுவிட்டால், நாடாளுமன்ற தொங்கு நிலை ஏற்பட்டு, இந்த அணியின் ஆதரவு இல்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்படும். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு உருவாகும் புதிய கூட்டணியால் இந்த அணியே ஆட்சியில் அமரும்' என்று போலி கம்யூனிஸ்டுகள் வாக்கு சதவீத கணக்கு போடுகின்றனர்.

இதனால் தற்போதைய தேர்தல் கூட்டணியை விட, தேர்தலுக்குப் பிறகு உருவாகும் கூட்டணிதான் பெருத்த எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது. ஒன்று, போலி கம்யூனிஸ்டுகள் மற்றும் மூன்றாவது அணியிலுள்ள கட்சிகளின் ஆதரவோடு காங்கிரசு ஆட்சி அமைவது; இரண்டு, காங்கிரசின் ஆதரவோடு போலி கம்யூனிஸ்டுகள் மற்றும் மூன்றாவது அணியிலுள்ள கட்சிகளின் ஆட்சி அமைவது; மூன்று, பா.ஜ.க.வுக்குக் கூடுதல் இடங்கள் கிடைத்தால் மூன்றாவது அணியிலுள்ள கட்சிகள் அதனுடன் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி கட்டிக் கொண்டு ஆட்சியமைப்பது என்கிற வாய்ப்புகளே நிலவுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

இதிலே, பா.ஜ.க., காங்கிரசு மட்டுமின்றி, மூன்றாவது அணியுடனும் கூட்டணி சேராமல், தனி ஆவர்த்தனம் செய்கிறார் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவி மாயாவதி. அதேசமயம், மூன்றாவது அணியுடன் நட்பும் பாராட்டுகிறார். பா.ஜ.க. - காங்கிரசு அல்லாத மூன்றாவது அணி ஆட்சியமைக்க வாய்ப்பு கிடைத்தால், தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணியில் தன்னையே பிரதமராக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார். அவர் மட்டுமல்ல; போலி கம்யூனிஸ்டுகளும் மூன்றாவது அணியிலுள்ள கட்சிகளின் தலைவர்களும் தேர்தலுக்குப் பிந்தைய இழுபறியில் தாமும் பிரதமராகி விடலாம் என்று நப்பாசையுடன் கணக்கு போடுகின்றனர்.



போலி கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதக் கூட்டணி: காங்கிரசு-பா.ஜ.க.வுக்கு மாற்றாகுமா?

மூன்றாவது அணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியமைப்பது கடினம்தான் என்றாலும், ஒருவேளை காங்கிரசு ஆதரவு ஆட்சிமைக்க வாய்ப்பு கிடைத்தால், அல்லது தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணியில் காங்கிரசுக்கு ஆதரவளிக்க நேர்ந்தால், இடதுசாரிகள் இம்முறை மைய அரசில் பங்கேற்க வேண்டும் என்று உபதேசித்திருக்கிறார், பழம் பெரும் சி.பி.எம். தலைவரான ஜோதிபாசு. இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் எந்த ஆட்சி அமைந்தாலும் அந்த ஆட்சியை வெளியிலிருந்து கண்காணித்து நெறிப்படுத்தும் வேலையை மட்டும் செய்து கொண்டிராமல், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில், அந்த ஆட்சியில் பங்கேற்கும் கூடுதல் பொறுப்பையும் இடதுசாரிகள் ஏற்க வேண்டும் என்றும், 1996-இல் நடந்ததைப் போல 'வரலாற்றுத் தவறை'ச் செய்து விடக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

1996-இல் சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவரும் மே.வங்க முதல்வருமான ஜோதிபாசுவைப் பிரதமராக்க மூன்றாவது அணியின் கட்சிகள் பரிந்துரைத்த போது, சி.பி.எம். கட்சித் தலைமை அதை ஏற்காமல் 'வரலாற்றுத் தவறு' என்று சாடி, தடுத்து நிறுத்தி விட்டது. அப்போதைய சி.பி.எம். கட்சித் திட்டத்தில், மாநில அரசில் சி.பி.எம். கட்சி பங்கேற்கலாம் என்ற விதி இருந்தபோதிலும், மைய அரசில் பங்கேற்பது பற்றி குறிப்பாக எந்த விதியும் வகுக்கப்படவில்லை என்று அப்போது கட்சித் தலைமை தனது நிலையை நியாயப்படுத்தியது. பின்னர் 2000-வது ஆண்டில் நடந்த கட்சியின் சிறப்புப் பேராயத்தில் இந்த விதி திருத்தப்பட்டு, மைய அரசிலும் பங்கேற்கலாம் என்று மாற்றப்பட்டது. அதைக் காட்டியே இப்போது ஜோதிபாசுவும் மீண்டும் அந்த வரலாற்றுத் தவறைச் செய்து விடக் கூடாது என்று கட்சிக்கு வழிகாட்டுகிறார். இதை வரவேற்று பக்கமேளம் வாசிக்கத் தொடங்கிவிட்டார், சி.பி.எம்.மின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான யெச்சூரி. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை நடத்தி புரட்சி செய்யப் போவதாக நாடகமாடி வந்த சி.பி.எம். கட்சி, கடைசியில் மைய அரசிலும் பங்கேற்று நாற்காலி சுகம் தேடும் இழிந்த நிலைக்குச் சென்று விட்டது.

எந்தக் கூட்டணிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பில்லை என்றும், மீண்டும் நாடாளுமன்ற தொங்கு நிலைதான் ஏற்படும் என்றும், தேர்தலுக்குப் பிறகு மீண்டும் ஒரு புதிய கூட்டணி உருவாகி நிலையான ஆட்சி அமையும் என்றும் முதலாளித்துவ அரசியல் நோக்கர்களும் போலி கம்யூனிஸ்டுகளும் மதிப்பீடு செய்கின்றனர். ஆனால் தொங்கு நிலையானாலும் தொங்கா நிலையானாலும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக மூடுதிரையின் பின்னே, அதிகார வர்க்க-போலீசு-இராணுவ-நீதித்துறை அடங்கிய அரசு எந்திரம் இருந்து கொண்டு நிரந்தரமாக நிர்வாகத்தை நடத்தி வருகிறது. அதைக்கொண்டு ஆளும் வர்க்கங்கள் சட்ட ரீதியாகத் தமது அடக்குமுறை-சுரண்டலை நடத்தி வருகின்றனர். இத்தகைய அரசியலமைப்பு முறை தொடர்வதற்குத் தடையாகி நாடாளுமன்ற அராஜகம் முற்றினால், ஆளும் வர்க்கங்கள் பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவவும் தயங்காது. உலகெங்கும் முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியின் தர்க்க ரீதியான தவிர்க்க முடியாத அங்கமாகவே இது தொடர்கிறது. ஆகவே, தொங்கு நிலையில் இருப்பது நாடாளுமன்ற அமைப்பு முறை மட்டுமல்ல; முதலாளித்துவ ஜனநாயக அரசியலமைப்பு முறை முழுவதும்தான்.

இத்தகைய கேடுகெட்ட முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையைத்தான் இப்போலி கம்யூனிஸ்டுகள் முட்டுக் கொடுத்து தூக்கிப் பிடிக்கின்றனர். அழுகி நாறும் முதலாளித்துவ அமைப்பு முறைக்குள்ளேயே தீர்வுகளைத் தேடி, நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, வகுப்புவாத சக்திகளை வீழ்த்துவது என்ற பெயரில் காங்கிரசுக்கு வால் பிடித்துச் சென்றனர். தேர்தலுக்குப் பின்னரும் வகுப்புவாத சக்திகள் அதிகாரத்துக்கு வருவதைத் தடுப்பது என்ற பெயரில் காங்கிரசை உள்ளிருந்தோ, வெளியிலிருந்தோ ஆதரிக்கவும் அவர்கள் தயாராக உள்ளனர்.

இப்போலி கம்யூனிஸ்டுகள் காங்கிரசுடன் முரண்பட்டு நிற்பதாகக் காட்டிக் கொண்ட அணுசக்தி ஒப்பந்தம் மட்டுமல்ல; அந்நிய நாடுகளுடனான எந்தவொரு ஒப்பந்தத்தையும் விவாதித்து, வாக்கெடுப்பு நடத்தி நாடாளுமன்ற ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறுவதற்கு இந்திய நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது. அமெரிக்காவுடனான இராணுவ மற்றும் அணுசக்தி ஒப்பந்தம் மட்டுமல்ல; உலக வங்கி-ஐ.எம்.எஃப் மற்றும் உலக வர்த்தகக் கழகம் ஆகியவற்றுடனான ஒப்பந்தங்களும் இப்படித்தான் இந்திய நாடாளுமன்றத்துக்கு மேலானதாக, அதன் வாக்கெடுப்பு-விவாதத்துக்கு வராமலேயே நடைமுறைப் படுத்தப் படுகின்றன. அந்நிய நாடுகளுடனான துரோகத்தன

www.padippakam.com

மான ஒப்பந்தங்களை எதிர்த்து முறியடிக்கும் அதிகாரமே இல்லாத நாடாளுமன்றம், நாட்டுக்கும் மக்களுக்கும் துரோக மிழைத்து வரும் ஓட்டுக் கட்சிகள்- இவை பற்றிய உண்மை களை மக்கள் அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே தேர்தல் நாடகம் முதல் நம்பிக்கை வாக்கெடுப்பு, வெளி நடப்பு முதலான கூத்துக்கள் நடக்கின்றன.

காங்கிரசுடனான தேர்தல் அரசியல் கூட்டு வைத்துக் கொள்வதற்காகவும் மதச்சார்பின்மை போலி நாடகமாடுவ தற்காகவும் மட்டுமே ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. வகுப்புவாத சக் திகளை எதிர்ப்பதாக இப்போலி கம்யூனிஸ்டுகள் பித்தலாட் டம் செய்து வருகின்றனர். மற்றபடி, பாபர் மசூதி இடிப்பு முதல் சேது சமுத்திர திட்ட எதிர்ப்பு வரை எல்லா விவகாரங்களிலும் இந்துத்துவா கும்பலுடன் சமரசப் போக்கைக் கடைபிடிப்பதே இப்போலி கம்யூனிஸ்டுகளின் கொள்கையாக உள்ளது. மும் பை, குஜராத், ஒரிசா என மதச் சிறுபான்மையினருக்கு எதிராக இந்துவெறி பயங்கரவாதிகள் நடத்திய படுகொலை-அட்டூழி யங்களுக்கு எதிராக அறிக்கைகள்-அடையாள எதிர்ப்புக்கு மேல் இப்போலிகள் வேறெதுவும் செய்யவில்லை. அதே போல, மதச்சார்பின்மை நாடகமாடி முஸ்லிம் ஆதரவாளர் களாகத் தம்மைக் காட்டிக் கொண்டு, ஓட்டுக்காக இஸ்லாமிய மதவெறியர்களின் நிலையைச் சந்தர்ப்பவாதமாக ஆதரிக்கும் இப்போலி கம்யூனிஸ்டுகளும் அதன் இடது சாரி அரசும் வங் கதேச மருத்துவரும் எழுத்தாளருமான தஸ்லிமா நஸ்ரீனை நாடு கடத்தின.

தனியார்மயம்-தாராளமயம்-உலகமயமாக்கம் எனும் ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்கத்துக்கு மனிதமுகம் கொடுப்பது என்கிற தோரணையோடு, மாற்றுக் கொள்கை என்ற பெயரில் மறைமுக ஆதரவளிப்பது; மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் சிங்கூர்-நந்திகிராம விவசாயிகளிடமிருந்து விளைநிலங்களைப் பிடுங்கி அவர் களை ஒடுக்கி, பன்னாட்டு-உள்நாட்டுத் தரகு முதலாளி களுக்குத் தாரை வார்ப்பது; சிறு வணிகர்களை ஒழிக்கும் ரிலையன்ஸ், வால்மார்ட் முதலான ஏகபோகங்களுக்கு நடை பாவாடை விரிப்பது- என்று பலநூறு வழிகளில் இப்போலி கம்யூனிஸ்டுகள் மக்கள் விரோத-நாட்டு விரோத நடைமுறை யைக் கொண்டுள்ளனர். மொத்தத்தில், போலி கம்யூனிஸ்டுக ளுக்கும் ஆளும் வர்க்க கூட்டணிக் கட்சிகளுக்குமிடையே அடிப்படையில் வேறுபாடு ஏதுமில்லை. ஐக்கிய முற்போக் குக் கூட்டணி, தேசிய ஜனநாயகக் கூட்டணி, மதச்சார்பற்ற மூன்றாவது அணி, இடது சாரி கூட்டணி என்ற வேறுபாடுகள் இருந்தாலும், நாட்டு விரோத-மக்கள் விரோத மறுகாலனி யாதிக்க கூட்டணி ஒன்று மட்டுமே ஓட்டுக் கட்சிகளிடம் உள்ளது. இதனால்தான் எந்தவொரு ஓட்டுக் கட்சிக்கும் அவற் றின் கூட்டணிக்கும் ஆதரவு அலை வீசவில்லை. எதிர்ப்பு அலையுமில்லை. ஓட்டுக் கட்சிகளும் முன்னிறுத்திப் பேச முக் கியமான விசயமோ, கொள்கையோ இல்லை.

போலி கம்யூனிஸ்டுகளின் மூன்றாவது அணியில் பங் கேற்கும் கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்து வெறி பா.ஜ.க. வுடன் மாறிமாறி கூட்டுச் சேர்ந்தவைதான். தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் எனும் ஏகாதிபத் திய மறுகாலனியாக்கத்துக்கு விசுவாசமாகச் சேவை செய்ப வைதான். சந்திரபாபு நாயுடு, நவீன் பட்நாயக் ஆகியோர் அப் பட்டமான ஏகாதிபத்திய அடியாட்களாகச் செயல்பட்டு, மக் கள் போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கியவர்கள். பாசிச ஜெயலலிதாவோ பார்ப்பன பாசிசத்தையும் தமிழின எதிர்ப்பையும் தனது சித்தாந்தமாகவே கொண்டுள்ளவர். மக் களால் வெறுத்தொதுக்கப்படும் இத்தகைய கழிசடை அரசி யல் சக்திகளுக்கு மதச்சார்பற்ற முற்போக்கு அலங்காரம் செய்து மீண்டும் இச்சக்திகள் அரசியல் அரங்கில் வேரூன்ற மூன்றாவது அணியின் மூலம் போலி கம்யூனிஸ்டுகள் ஏற் பாடு செய்து தருகின்றனர். அதன் மூலம் இம்மக்கள் விரோத பாசிச சக்திகளை மக்கள் நலனில் அக்கறை கொண்ட முற் போக்கு சக்திகளாகக் காட்டி மக்களை ஏய்த்து வருகின்றனர்.

அனைத்துலக முதலாளித்துவத்தின் பெருந்தோல்வி- பொருளாதாரச் சரிவின் காரணமாக எழும் நெருக்கடிகளின் சுமைகளை ஏகாதிபத்தியவாதிகள் உழைக்கும் மக்கள் மீது சுமத்திவருவதை எதிர்த்து ஏகாதிபத்திய நாடுகளிலேயே மக் கள் போராட்டங்கள் வெடித்துப் பரவுகின்றன. முதலாளித்து வத்தை எதிர்த்து சோசலிசமே ஒரே தீர்வு என்று மக்கள் போராடி வரும் நிலையில், இந்தியாவிலும் அத்தகைய போராட்டங்களைக் கட்டியமைக்க வேண்டிய சூழலில், மனித முகம் கொண்ட மாற்றுப் பொருளாதாரத் திட்டம் என்ற பெய ரில், ஏகாதிபத்திய மறுகாலனியாக்கத்துக்கு விசுவாசமாக இப் போலி கம்யூனிஸ்டுகள் செயல்பட்டு வருகின்றனர். மைய அரசில் தாமும் பங்கேற்பதன் மூலம், மக்கள் போராட்டங்க ளைத் திசை திருப்பி நாடாளுமன்றத் தேர்தல் மூலம் இன்றைய முதலாளித்துவ அமைப்பிற்குள்ளேயே தீர்வுகாண முடியும் என பிரமையூட்டி மக்களை மோசடி செய்து வருகின்றனர்.

இப்படி நாடாளுமன்ற மோசடி ஜனநாயகத்தின் மீது நம் பிக்கையூட்டி, பாசிச-பிழைப்புவாத சக்திகளுக்கு முற் போக்கு அலங்காரம் செய்து சந்தர்ப்பவாத கூட்டணி கட்டி மக் களை ஏய்த்து வரும் இப்போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப் படுத்தி தனிமைப்படுத்தாமல், மறுகாலனியாக்கத்துக்கு எதி ரான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவே முடியாது. எந்த அதிகாரமோ, உரிமையோ இல்லாத உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சிக்கு ''ரப்பர் ஸ்டாம்ப்''பாகச் சீர ழிந்து விட்ட நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தில், மறு காலனியாதிக்கத் தாக்குதலுக்குத் தீர்வு காணவும் முடியாது. போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்து, நாடாளுமன்ற அரசியலமைப்பு முறைக்கு வெளியே, மக்கள் போராட்டங்க ளின் வழியே ஓர் அரசியல் புரட்சியைச் சாதிப்பதன் மூலம் மட்டுமே இம்மறுகாலனியாதிக்கத்தை முறியடிக்க முடியும். பதவிப்பித்து கொண்ட இப்போலி கம்யூனிசத் துரோகிகளைத் திரைகிழித்து தனிமைப்படுத்துவதன் மூலம் மட்டுமே, இத்த கைய போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும் முடியும். •

**மதச்சார்பற்ற மூன்றாவது அணியின் யோக்கியதை: பார்ப்பன-பாசிச ஜெயாவுடன் கூட்டு.**



www.padippakam.com

# போலீசின் நீதிமன்றத் தாக்குதல்:

# பஞ்சு மிட்டாய் தீர்ப்பு

**நீதிமன்றத் தாக்குதல் மீதான உயர்நீதி மன்றத் தீர்ப்பு போலீசை மட்டுமல்ல, வழக்குரைஞர் சங்கத்தின் பிழைப்புவாத தலைமையையும் காப்பாற்றி விட்டது.**

பிப்ரவரி 19 உயர்நீதி மன்றத் தாக்குலுக்கு எதிராக தமிழக வழக்குரைஞர்கள் ஒரு மாத காலமாக நடத்தி வந்த நீதிமன்றப் புறக்கணிப்பு இடை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத் தாக்குதலுக்குப் பொறுப்பான இரு போலீசு அதிகாரிகளை (ராமசுப்பிரமணியம், விசுவநாதன்) தற்காலிகப் பணி நீக்கம் செய்வதாக, 18.3.09 அன்று முகோபாத்யாயா தலைமையிலான சென்னை உயர்நீதிமன்ற பெஞ்சு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, நீதிமன்றப் புறக்கணிப்பைக் கைவிடுவதாக வழக்குரைஞர் சங்கங்களின் கூட்டுப் போராட்டக்குழு 20.3.09 அன்று மாலை அறிவித்திருக்கிறது. புறக்கணிப்பு கைவிடப்பட்ட போதிலும் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும் வரையில் பிற வடிவங்களிலான போராட்டங்கள் தொடரும் என்றும் போராட்டக்குழு கூறியிருக்கிறதே தவிர, என்ன விதமான போராட்டங்கள் நடத்தப்படும் என்பது குறித்து விளக்கவில்லை.

போராட்டங்களில் வெற்றி-தோல்வி சகஜம்தான்; பிழைப்புவாத சங்கத் தலைமைகள் போராட்டத்துக்குத் துரோகமிழைப்பதும் சகஜம்தான். எனினும், இந்தத் தலைமையால் ஒரு தோல்வியை வெற்றியாகச் சித்தரிக்க முடிந்திருக்கிறது. ஆகப்பெரும்பான்மையான வழக்குரைஞர்கள் இதனை ஒரு வெற்றி என்று நம்பவில்லை; எனினும், இந்த முடிவை எதிர்க்கவும் இல்லை. திசை தெரியாமல் தொடர்ந்து கொண்டிருந்த இந்தப் போராட்டம், வழக்குரைஞர்கள் மத்தியில் தோற்றுவித்திருந்த ஆயாசம் காரணமாக, வழக்குரைஞர் சங்கத்தின் பிழைப்புவாதத் தலைமை எளிதாகத் தப்ப முடிந்திருக்கிறது.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற நாளிலிருந்து எழுப்பப்பட்டுவரும் அடிப்படையான கேள்விகள் இரண்டு. ''யாருடைய அனுமதியின் பேரில் உயர்நீதிமன்றத்திற்குள் போலீசு படை நுழைந்தது? யாருடைய உத்தரவின் பேரில் தடியடி நடத்தப்பட்டது?'' என்ற இந்த இரு கேள்விகளுக்கும் கருணாநிதி அரசோ போலீசு அதிகாரிகளோ இதுவரை பதில் அளிக்கவில்லை.

மேற்கூறிய இரு கேள்விகளுக்கும் அரசு பதிலளிக்க வேண்டுமென்றும், இந்தப் பதிலின் அடிப்படையில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கான விசாரணையைத் தொடங்குவோமென்றும் முகோபாத்யாயா தலைமையிலான பெஞ்சு 19.2.09 அன்று உத்தரவில் கூறியிருந்தது. ஆனால், 18.3.09 அன்று நடைபெற்ற விசாரணையிலும் அரசு இந்தக் கேள்விக்கு பதிலளிக்கவில்லை. நீதிபதிகளும் மையமான இந்தக் கேள்விக்கான பதிலென்ன என்று கேட்காமல் தந்திரமாகத் தவிர்த்து விட்டு, தற்காலிகப் பணி நீக்க உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றனர்.

மிகவும் மேம்போக்காக வழங்கப்பட்டுள்ள இந்த தற்காலிகப் பணிநீக்க உத்தரவை இடைநிறுத்தம் செய்யக் கோரி இரு போலீசு அதிகாரிகளும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர். 'போராட்டத்தை மீண்டும் கிளப்பிவிட வேண்டாம்' என்ற காரணத்துக்காக வேண்டுமானால், உச்சநீதி மன்றம் இதற்குத் தடையாணை வழங்காமல் இருக்கலாம். மற்றபடி, இது ரத்து செய்வதற்கென்றே தயாரிக்கப்பட்ட கண்துடைப்பு உத்தரவு. இவ்வழக்கு விசாரிக்கப்பட்ட முறையே அதனை நிரூபிக்கிறது.

18.3.09 அன்று இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் நடைபெற்ற உரையாடல்கள் வாசகர்களுக்கு அதிர்ச்சியூட்டக்கூடியவை. மூத்த வழக்குரைஞர்களின் வாதங்களையெல்லாம் கேட்டபிறகு, ''இரண்டு பேரை சஸ்பெண்ட் செய்கிறேன். ஆனால் முழு சம்பளத்துடன்தான் சஸ்பெண்ட் செய்வேன்'' என்றிருக்கிறார் முகோபாத்யாயா. இதனை வழக்குரைஞர்கள் ஏற்கவில்லை. பிறகு, ''நான் இவர்களை சஸ்பெண்ட் செய்தால், நீங்கள் முட்டை வீசிய வழக்குரைஞர்கள் மீது பார் அசோசியேசன் சார்பில் நடவடிக்கை எடுப்பீர்களா?'' என்று பேரம் பேசியிருக்கிறார். ''அதை விசாரிக்கத்தான் 5 நீதிபதிகள் பெஞ்சு போட்டிருக்கிறீர்களே. அந்த விசாரணையை எதிர்கொள்கிறோம்'' என்றிருக்கின்றனர் வழக்குரைஞர்கள். பிறகு ''நான் என்ன உத்தரவு போட்டாலும், நீங்கள் நீதிமன்றத்துக்குள் சத்தமோ முழக்கமோ போடக்கூடாது'' என்று கோரியிருக்கிறார். அதன் பின் வந்ததுதான் இந்த உத்தரவு. ஒரு கட்டைப்

**வழக்குரைஞர்களின் போராட்டத்தால்தான் வழக்குகள் தேங்கிக் கிடப்பதாக அரசு நடத்திய பொய்ப் பிரச்சாரத்தை முறியடிக்கும் விதமாக சென்னையில் பெண் வழக்குரைஞர்கள் நடத்திய சட்ட உதவி முகாம்.**





படிப்பகம்

www.padippakam.com

பஞ்சாயத்தைக் காட்டிலும் கேவலமான முறையில் நடத்தப் பட்டிருக்கும் இந்த விசாரணையும் தீர்ப்பும் போராட்டத்தை முடிப்பதற்காகத் திட்டமிட்டே நடத்தப்பட்டிருக்கும் நாடகம் என்பதை சந்தர்ப்ப சூழ்நிலைகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

ஐந்து நாட்களுக்கு முன்னர், இதே உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறை வேறுவிதமாக இருந்தது. புதிதாகப் பொறுப்பேற்ற தலைமை நீதிபதி கோகலேயிடம் 13.3.09 அன்று இவ்வழக்கை விசாரிக்குமாறு வழக்குரைஞர்கள் கோரியபோது, ''இதற்கென்ன அவசரம்?'' என்று கேட்டார் கோகலே. பிறகு, ''இதனை நான் விசாரிக்க முடியாது, விடுப்பில் சென்றிருக்கும் முகோபாத்யாயா வந்த பிறகு, அவர்தான் விசாரிக்க வேண்டும்'' என்றார். நீதிமன்ற மரபுகளுக்கு மாறாக, கோகலேயின் திமிர்த்தனத்துக்கு நீதிமன்ற அறைக்குள்ளேயே வழக்குரைஞர்கள் எதிர்ப்புக் காட்டி எள்ளி நகையாடினர்.



அனைத்துச் சலுகைகளோடும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள போலீசு அதிகாரிகள் ராமசுப்பிரமணியம் (இடது) மற்றும் விசுவநாதன்.

''16-ஆம் தேதி முதல் நீதிமன்றங்கள் இயங்கும். வக்கீல் வராவிட்டாலும் கட்சிக்காரர்களின் முறையீட்டைக் கேட்டு நீதிபதிகள் தீர்ப்பளிப்பார்கள்'' என்று அறிவித்தார் கோகலே. வழக்காடிகள் ஆஜராகாவிட்டால் நீதிபதிகள் வழக்கை தள்ளுபடி செய்வார்கள் என்று அறிவிக்கை வெளியிட்டார் உயர்நீதிமன்றப் பதிவாளர். வக்காலத்துகளைத் திரும்பப் பெற்று வழக்குகளிலிருந்து விலகிக் கொள்வதாகவும், பதிவாளரின் அறிக்கை சட்டவிரோதமானது என்றும் அறிவித்தனர் வழக்குரைஞர்கள். ''இனி உயர்நீதிமன்ற நீதிபதிகளை மை லார்ட், யுவர் ஆனர் என்று அழைக்க மாட்டோம் என்றும் 'மிஸ்டர் ஜட்ஜ்' என்றே அழைப்போம்'' என்றும் அறிவித்தனர். மதுரை உயர்நீதி மன்றத்துக்குச் சென்ற தலைமை நீதிபதியை வக்கீல்கள் சீந்தக் கூட இல்லை. கோகலேயின் உரையைக் கேட்பதற்குக் கூட வக்கீல்கள் யாரும் இல்லாததால், நீதிமன்ற ஊழியர்களுக்கு கருப்பு கோட்டுமாட்டி உட்கார வைத்து பத்திரிகைகளுக்குப் படங்கள் வழங்கப்பட்டன.

16.3.09 திங்களன்று ஒன்றிரண்டு வழக்குகளில் வழக்காடிகள் நேரில் ஆஜராகிப் பேசியதையும், அவற்றில் நீதிபதிகள் பிறப்பித்த இடைக்கால உத்தரவுகளையும் காட்டி, வக்கீல்கள் இல்லாமலேயே நீதிமன்றங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்ற தோற்றம் பத்திரிகைகள் மூலம் திட்டமிட்டே உருவாக்கப்பட்டது.

மொத்தத்தில் நீதித்துறைக்கும் வழக்குரைஞர்களுக்கும் இடையிலான முறுகல் நிலை தீவிரமடைந்திருந்தது. போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோதும், நீதிமன்றத்தின் மூலமே நிவாரணம் பெற்று விடலாம் என்று கருதிய மூத்த வழக்குரைஞர்களின் மயக்கத்தையும் தனது நடவடிக்கைகள் மூலம் தெளிவித்து விட்டார் கோகலே. ''இனி நீதிமன்றத்தை நம்பிப் பயனில்லை; இங்கே நீதி கிடைக்காது'' என்று முன்னாள் அட்வகேட் ஜெனரல்களே பகிரங்கமாக அறிவிக்கும் நிலை, ஏற்பட்டது. ஜெயா தொலைக்காட்சியில் தோன்றிய மூத்த வழக்குரைஞர்கள் இந்த அரசின் சட்டவிரோத நடவடிக்கைகளை அம்பலமாக்கத் தொடங்கியிருந்தனர். புறக்கணிப்பு போராட்டத்தை உடைத்து கோர்ட்டுக்குள் சென்ற தி.மு.க., காங்கிரசு வழக்குரைஞர்கள் ஆங்காங்கே சங்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். இந்த முயற்சியும் தோல்வியைத் தழுவியது. புதுக்கோட்டையில் கருணாநிதியின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. எதுவும் செய்ய இயலாத மாவட்ட தி.மு.க.வின் அடியாட்படை தி.மு.க. வழக்குரைஞர்களையே தாக்கியது.

சேலத்தில் நடைபெற்ற கீழமை நீதிமன்ற வழக்குரைஞர் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுவில் கலகம் எழுந்தது. சும்மா நீதிமன்றத்தைப் புறக்கணித்து விட்டு வாசலில் உண்ணாவிரதம் உட்கார்ந்து என்ன பயன்? பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் புதிய போராட்ட முறைகளில் இறங்க வேண்டும் என்ற கருத்து இளம் வழக்குரைஞர்களிடையே வலுப்பெறத் தொடங்கியது. சென்னைப் பேரணி என்ற முடிவு தலைமையின் மீது திணிக்கப்பட்டது. உயர்நீதி மன்ற சங்கத்தலைமையும் வேறு வழியின்றிப் பின் தொடர வேண்டியதாயிற்று.

மிகவிரைவாக ஏற்பட்டு வந்த இந்த மாற்றங்கள் நீதித்துறை மாயையிலிருந்து வழக்குரைஞர்கள் மென்மேலும் விடுபடும் போக்கை துரிதப்படுத்தின. நீதித்துறையின் உண்மையான யோக்கியதையை அம்பலப்படுத்தி, வழக்குரைஞர்களே ஊருக்கு ஊர் அதன் மீது 'முட்டை எறியும்' அபாயம் அதிகரித்திருந்தது. மார்ச் 19 பேரணிக்கு, போலீசு மூலம் அரசு உருவாக்கிய பல தடைகளையும் மீறி பல்லாயிரக்கணக்கான வழக்குரைஞர்கள் மறுநாள் சென்னை நோக்கி வருகிறார்கள் என்பதும் தெளிவாகி விட்டது.

இந்தப் பேரணிக்குப் பின் வழக்குரைஞர்கள் நடத்தவிருக்கும் போராட்டங்கள் நீதிமன்றத்தைச் சுற்றி வராது என்பதும், வீதிக்குச் செல்லும் என்பதும் ஏறத்தாழ தெளிவாகிவிட்டது. உயர்நீதி மன்றத்தின் வாயிலில் நடைபெறும் உண்ணாவிரதத்தில் வழக்குரைஞர்கள் ஆற்றும் உரைகள் போலீசுக்கு எதிரான கண்டனம் என்பதிலிருந்து மெல்ல மெல்ல மாறி, நீதிபதிகளுக்கும் நீதித்துறைக்கும் எதிரான கண்டனமாக மாறத் தொடங்கியிருந்தன. அடுத்த கட்டமாக, ''சட்டத்தின் ஆட்சி, நீதிமன்றத்தின் புனிதம், நீதிபதிகளின் நேர்மை என்ற மாய்மாலங்களை நம்பாதீர்'' என்று வழக்குரைஞர்களே மக்கள் மன்றத்தில் மேடை போட்டுப் பேசத்தொடங்கினால்? ''கடவுள் இல்லை'' என்று பூசாரிகளே பிரச்சாரம் செய்வதற்கு ஒப்பானது அது.


படிப்பகம்

www.padippakam.com

நாறிப்போன நாடாளுமன்ற அமைப்பு முறைக்கும், ஊழலில் புழுத்த நிர்வாக எந்திரத்துக்கும் மாற்றாகவும் ஜனநாயகத்தின் இறுதி நம்பிக்கையாகவும் தூக்கித் துதிபாடப்படும் நீதித்துறையை வழக்குரைஞர்கள் ரோட்டில் போட்டுப் புரட்டி எடுத்தால், அதன் காரணமாக 'ஜனநாயகத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்து' அரசுக்கோ ஆளும் வர்க்கத்துக்கோ புரியாததல்ல.

பிழைப்புவாத சங்கத்தலைமையோ வேறுவிதமான ஆபத்தை எதிர்கொண்டிருந்தது. 'நீதிமன்றத்தைப் பூட்டுவோம்' என்று பால் கனகராஜும், 'இடித்துத் தள்ளுவோம்' என்று பிரபாகரனும் போட்டி போட்டுக் கொண்டு உண்ணாவிரதப் பந்தலில் சவடால் அடித்தனரெனினும், தமது காலடியில் நிலம் நழுவிக்கொண்டிருந்ததை அவர்கள் அறியாமல் இல்லை. இனி இந்தப் போராட்டத்துக்கு அவர்களால் தலைமை தாங்க இயலாது. அவர்களுடைய தலைமையைத் தூக்கியெறியும் வலிமையுள்ள ஒரு மாற்றுத் தலைமை வழக்குரைஞர்கள் மத்தியில் உருவாகிவிடவில்லை என்றாலும், அவர்கள் மதிப்பிழந்து தூக்கியெறியப்படும் ஆபத்து சமீபித்துக் கொண்டிருந்தது.

நீதிமன்றப் படிக்கட்டுகளிலும், சட்டத்தின் பொந்துகளிலும் தமது சொந்த வீட்டைப் போன்ற பரிச்சயத்துடன் உலவி வந்த ''பார் அசோசியேஷனின்'' மூத்த வழக்குரைஞர்களுக்கோ இது பலத்த அடி. நீதிமன்றம் அவர்களைக் கைவிட்டு விட்டது. மக்கள் மன்றத்துக்குச் செல்வதோ அவர்களுக்குப் பரிச்சயமற்றது, கொஞ்சம் கவுரவக் குறைவானதும் கூட. நீதிமன்ற வளாகத்தில் புகுந்து போலீசு அடித்த அடியில், இளம் வழக்குரைஞர்கள் மத்தியில் அவர்கள் செலுத்தி வந்த அறிவார்ந்த தலைமையும், கவுரவமும் உதிர்ந்து விட்டது. ஏதேனும் ஒரு அற்புதம் நிகழ்வதற்காகக் காத்திருப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய இயலாத நிலையில் அவர்கள் இருந்தார்கள்.

போராடும் இளம் வழக்குரைஞர்களிடம் கோபம் எவ்வளவு இருந்ததோ, அதற்கு சரிவிகிதத்தில் சங்கத் தலைமையின் மீதான அவநம்பிக்கையும், நீண்ட போராட்டம் தோற்றுவித்த களைப்பும் மிகுந்திருந்தது. அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வகையிலான மாற்றுத் தலைமையெதுவும் உருவாகவுமில்லை. அறிவுத்துறையினருக்கே உரிய கட்டுப்பாடின்மை,

**ஒரு கட்டைப் பஞ்சாயத்தைக் காட்டிலும் கேவலமான முறையில் நடத்தப்பட்டிருக்கும் நீதிமன்ற விசாரணையும் தீர்ப்பும் போராட்டத்தை முடிப்பதற்காகத் திட்டமிட்டே நடத்தப் பட்டிருக்கும் நாடகம் என்பதை சந்தர்ப்ப சூழ்நிலைகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.**

அத்தகைய தலைமையொன்று உருவாவதற்குத் தடையாகவும் இருந்தது.

இந்தச் சூழலில் சர்வரோக நிவாரணியாக வந்ததுதான் இரு போலீசு அதிகாரிகள் தற்காலிகப் பணிநீக்கம் என்ற உத்தரவு.

உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுகணமே பால்கனகராஜ், பிரபாகரன் ஆகியோரின் ஆதரவாளர்கள் தயாராக வைத்திருந்த வெடியைக் கொளுத்தி நீதிமன்ற வாயிலில் வெற்றியைக் கொண்டாடிவிட்டனர். கூட்டுப் போராட்டக் குழுவைக் கலந்து பேசாமலேயே, போராட்டம் வெற்றி என்று இருவருமே தொலைக்காட்சிகளுக்குப் பேட்டியும் கொடுத்து விட்டனர்.

மறுநாள் நடைபெற்ற கண்டனப் பேரணியின் தலைப்பகுதியில் வெற்றிப் பேரணி என்று எழுதிய பானரைப் பிடித்து, போராட்டத்தின் தலையைச் சீவினர். என்ன வெற்றியை இந்தப் பேரணி சாதித்தது என்பதை விளக்காமல், பேரணி நடத்தியதே வெற்றி என்று ஆர்ப்பரித்தனர். அவசரம் அவசரமாக மாலையில் கூடிய கூட்டுப் போராட்டக் குழு, நீதிமன்றப் புறக்கணிப்பைக் கைவிடுவதாக அறிவித்தது. மிகுந்த ஆக்ரோசத்துடன் தொடங்கிய போராட்டம், அசட்டுத்தனமாக முடிந்தது.

## பு.ஜ.இதழ்கள் பறிப்பு-எரிப்பு! தி.மு.க. வழக்குரைஞர்களின் ரவுடித்தனம்!

வழக்குரைஞர் போராட்டம் தொடர்பாக தமிழ்நாடு-பாண்டிச்சேரி கீழமை நீதிமன்ற வழக்குரைஞர்கள் கூட்டமைப்பின் மாநிலக் கூட்டம் கடந்த 11.3.09 அன்று சேலம் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. அப்பொழுது, பு.ஜ. விற்பனைக் குழுவைச் சார்ந்த இரு பெண் தோழர்கள் ''வழக்குரைஞர் மீதான தாக்குதல் - அம்பலமானது போலீசின் உண்மை முகம், தி.மு.க.வின் பொய்முகம்'' என்ற தலைப்பிட்ட மார்ச் மாத பு.ஜ. ஏட்டை வழக்குரைஞர்கள் மத்தியில் விற்பனை செய்தனர்.

அப்போது, தண்ணியடித்து தள்ளாடியபடி வந்திருந்த தி.மு.க. பிரமுகரும், சேலம் நீதிமன்ற அரசு வழக்குரைஞரும், இக்கூட்டமைப்பின் துணைத்தலைவருமான மூர்த்தி மற்றும் தி.மு.க. சார்பு வழக்குரைஞர் மணிவண்ணன், பிரபுராம் ஆகியோர் ''நீங்க யாரு? வன்முறையைத் தூண்ட வந்தீங்களா? நீங்களெல்லாம் என்ன அட்வகேட்டா? பிரசுரமோ, புத்தகமோ இங்கே வினியோகிக்கக் கூடாது'' என அத்தோழர்களை மிரட்டி பு.ஜ. இதழ்களைப் பிடுங்கி எரித்தனர்.

கீழ்த்தரமான இச்செயலை கண்டு ஆத்திரமுற்ற அவ்விருபெண் தோழர்களும் அக்கும்பலை எதிர்த்து நின்றதோடு, மற்ற வழக்குரைஞர்கள் மத்தியில் அவர்களை அம்பலப்படுத்தினர்.

''வழக்குரைஞர் போராட்டத்தையும் இக்கூட்டத்தையும் சீர்குலைக்கத்தான் உள்ளூர் தி.மு.க. எம்.எல்.ஏ ஆ. இராஜா வீசிய எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு இவர்கள் இப்படி முரட்டுத்தனமாக நடந்து கொண்டு வம்பு செய்கின்றனர். கூட்டம் முடியும்வரை பிரச்சினை வேண்டாம்'' என மற்ற வழக்குரைஞர்கள் அப்பெண் தோழர்களைச் சமாதானம் செய்தனர்.

''வழக்குரைஞர் போராட்டம் தொடரும்'' என்ற அறிவிப்போடு அந்தக் கூட்டம் முடிந்தது. அப்போது தோழர்கள் கொண்டு வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பு.ஜ. ஏடுகளும் விற்றுத் தீர்ந்திருந்தன. கருங்காலி கும்பலின் சூழ்ச்சிகளும் தவிடுபொடியாயின.



படிப்பகம்

www.padippakam.com

வரலாறு காணாத தாக்குதல் என்றும் மிகவும் தவறான முன்னுதாரணம் என்றும் சித்திரிக்கப்பட்ட பிப்ரவரி 19 நீதிமன்றத் தாக்குதலுக்கு எதிராக வழக்குரைஞர்கள் நடத்திய போராட்டத்திற்கு தலைமை இழைத்திருக்கும் துரோகம், மிகவும் தவறான இன்னொரு முன்னுதாரணத்தை உருவாக்கியிருக்கிறது. அனுமதியின்றி நீதிமன்ற வளாகத்தில் ஆயுதப்படையை இறக்கி, வக்கீல்கள், நீதிபதிகள் அனைவரையும தாக்கி ரவுடித்தனம் செய்ததற்கு போலீசுக்கு வழங்கப்பட்டிருக்கும் தண்டனை என்ன? இரண்டு அதிகாரிகளுக்கு தற்காலிகப் பணிநீக்கம். இதுதான் இதற்கு விலை என்றால் மிகவும் மலிவான விலையில் நீதிமன்றத்தை அவர்கள் வீழ்த்தி விட்டார்கள் என்றே பொருள்.

போலீசார் பார்க்காத பணிநீக்கமா? பத்து நாள் பணிநீக்கம். பிறகு அவர்களுடைய தியாகத்துக்குப் பரிசாகப் பதவி உயர்வு வழங்கப்படும். என்கவுன்டர் கொலைகளை நிகழ்த்துவதற்காக போலீசார் சிலர் தம்மைத் தாமே காயப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதைப் போல, இனி இரண்டு அதிகாரிகளை தற்காலிகப் பணிநீக்கத்துக்குத் தயார் செய்து வைத்துக் கொண்டு போலீசார் எந்த நீதிமன்றத்திலும் புகுந்து அடிக்கலாம். அடிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்தத் தற்காலிகப் பணிநீக்க உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தவுடனே, போலீசுக்காகப் பரிந்து களம் இறங்கியிருக்கிறார் கருணாநிதி. சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு இதுதான் நிலை என்றால், இனி யாரும் சட்டத்தை நிலைநாட்ட மாட்டார்கள் என்று அங்கலாய்த்திருக்கிறார் முன்னாள் டி.ஜி.பி தேவாரம். ஐ.பி.எஸ் அதிகாரிகள் சங்கமும் இவர்களுக்கு ஆதரவாகக் களம் இறங்கியிருக்கிறது. இவையெல்லாம் போலீசார் மீது ஏதோ அதி பயங்கரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தடுப்பதற்காகவும் திட்டமிட்டே அரங்கேற்றப்படும் காட்சிகள்.

உண்மையில் போலீசின் எந்தக் குற்றமும் அத்துமீறலும் விசாரணைக்கு உட்படுத்தப்படவே இல்லை. அத்துமீறி நுழைந்ததற்கு விளக்கமில்லை, நடவடிக்கையும் இல்லை. நீதிமன்றத்தில் புகுந்து வக்கீல்களை ஏன் கைது செய்யவேண்டும் என்ற கேள்விக்கு விளக்கமில்லை. தடியடி நடத்துமுன் அறிவிப்பு செய்யப்படவில்லை. 4 மணிநேரம் இடைவிடாமல் தாக்குதல் நடத்தியும் இந்தத் தடியடிக்கு சட்டப்படி பெற்றிருக்க வேண்டிய மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலைப் பெறவில்லை. ரவுடித்தனம் செய்த போலீசார் அங்க அடையாளங்களுடன் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட போதும் அவர்கள் மீதுகூட நடவடிக்கை இல்லை. மண்டை உடைந்த வழக்குரைஞர்கள் கொடுத்த புகார்களுக்கு எஃப்.ஐ.ஆர் கூடப் போடப்படவில்லை. இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்யுமாறு உயர் நீதி மன்றம் போட்ட உத்தரவு இதுவரை அமல்படுத்தப்படவே இல்லை. மொத்தத்தில் போலீசில் அடி வாங்கிய ஒரு சாதாரண மனிதன் கோர்ட்டுக்குப் போய் பெற்றிருக்கக் கூடிய நீதி கூட வக்கீல்களுக்குக் கிடைக்கவில்லை.இந்த 'இல்லை'களின் பட்டியல் வெகு நீளமானது. மொத்தத்தில் இது முழுமையான போலீசு ஆட்சி என்பதற்கு மேல் இதில் சொல்வதற்கு எதுவும் இல்லை.




**வழக்குரைஞர்கள் சென்னையில் நடத்திய பேரணியில், ''கனம் நீதிபதி அவர்களே, இது நீதித்துறையின் மீது நடத்தப்பட்ட தடியடியல்ல; லத்திதான் நீதித்துறையைக் கட்டுப்படுத்துகிறது'' என அறிவிக்கும் பதாகை.**

ஈழத்தில் போர்நிறுத்தம் கோரி வழக்குரைஞர்கள் நடத்திய போராட்டம்தான் இப்பிரச்சினையின் துவக்கப்புள்ளி என்ற போதிலும், இந்தத் தாக்குதலின் மூர்க்கத்தனத்தையும், அதனைத் தொடர்ந்து கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வரும் வழக்குரைஞர் போராட்டத்தின் உறுதியையும் ஈழப்பிரச்சினை தீர்மானிக்கவில்லை. நீதித்துறையின் சுதந்திரம், புனிதம் என்ற கற்பிதங்களோ, அல்லது தாக்குதலின் விளைவாகத் தோன்றிய கோபம் மட்டுமோ இப்போராட்டத்தை உந்தித் தள்ளவில்லை. தங்களுடைய தொழிலில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போலீசை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் வழக்குரைஞர்களுக்கு போலீசு இராச்சியம் என்பது அன்றாடம் சந்திக்க வேண்டிய சொந்தப் பிரச்சினையாக இருக்கிறது என்பதையே இப்போராட்டத்தில் அவர்கள் காட்டிய உறுதி விளக்குகிறது.

மெல்ல மெல்ல சட்டபூர்வமாகவே பாசிச மயமாகிவரும் அரசு எந்திரத்தின் மிக முக்கியமான அங்கமாக இருக்கும் போலீசு படை, எந்த அளவுக்கு கேள்விக்கு இடமற்றதாக ஆகி விட்டது என்பதையும், எந்த அளவுக்கு சமூகத்துக்கு மேலானதாகத் தன்னை நிறுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் இத்தாக்குதல் விளக்குகிறது. போலீசார் நடத்திய ரவுடித்தனங்களுக்காகவோ, நீதிபதிகளே தாக்குதலுக்கு ஆளாக நேர்ந்ததற்காகவோ, மாநகர ஆணையரோ, டி.ஜி.பி.யோ சம்பிரதாயமாகக் கூட வருத்தம் தெரிவிக்கவில்லை. மாறாக, வக்கீல்களுக்குப் போட்டியாக போலீசார் நடத்திக் காட்டிய எதிர் போராட்டமும் ஐ.பி.எஸ் - ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சங்கங்கள் விட்ட அறிக்கைகளும் போலீசு இராச்சியம் சமீபித்து விட்டதை உறுதி செய்தன.

நீதித்துறையின் நடத்தையும் இதனை வழிமொழிந்தது. அரசு எந்திரம் குறித்த புரிதல் இல்லாமல், நீதித்துறையின் அதிகாரம் குறித்த பிரமைகளுக்குப் பலியாகியிருந்த வழக்குரைஞர்களுக்கு நீதிபதிகளின் மவுனம் அறிவொளியூட்டியது. தாக்குதல் நடைபெற்றவுடனே உச்சநீதிமன்றத்துக்குப் பறந்தார் வழக்குரைஞர் வைகை. 'எண்ணெய் சட்டியிலிருந்து தப்பிக்க அடுப்பில் குதித்திருக்கிறோம்' என்பது அங்கே போனபிறகுதான் அவருக்குப் புரிந்தது போலும். பிறகு மீண்டும் எண்ணெய்


படிப்பகம்

www.padippakam.com

சட்டிக்கே திரும்பி வந்ததை வெடி வெடித்து கொண்டாடினார்கள் சங்கத்தலைவர் பால் கனகராஜின் ஆதரவாளர்கள்.

உச்சநீதி மன்றத்தைக் காட்டிலும் சென்னை உயர்நீதிமன்றம் அரசியல் சட்டத்தின் உணர்வில் அச்சுப்பிசகாமல் நடந்துகொள்ளும் என்று தமிழக வழக்குரைஞர்கள் கருதவில்லை. ஆயினும், வாங்கிய அடியின் வலியுணர்ச்சியோ, தன்மான உணர்ச்சியோ அல்லது குறைந்த பட்சம் தங்களை அடியிலிருந்து பாதுகாத்த வழக்குரைஞர்கள் மீதான நன்றியுணர்ச்சியோ நீதிபதிகளின் மூளையில் வேலை செய்யும் என்றும் அதன் விளைவாக தமக்கு நீதி கிடைக்கக் கூடும் என்றும் நம்பினார்கள். அதுவும் பொய்த்தது. வாயை மூடிக்கொண்டிருந்தால் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள், வாயைத்திறந்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் இரண்டையும் நீதியின் தராசில் நிறுத்துப் பார்த்ததில் மவுனத்தின் எடை அதிகமாக இருப்பதை நீதிபதிகள் புரிந்து கொண்டனர். அது மட்டுமல்ல, தங்களது செங்கோல் வெறும் அடையாளக் கோல்தான் என்பதும் லத்திக்கோலின் வழியாகத்தான் அதன் அதிகாரம் செலுத்தப்படுகிறது என்பதும் அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும். அதிகார மயக்கத்தில் ஒருவேளை அவர்கள் மறந்திருக்கக் கூடும் என்பதால், அரசியல் சட்டத்தில் எழுதப்படாத அந்த உண்மையை 19-ம் தேதியன்று போலீசார் நீதிபதிகளுக்கு நினைவு படுத்தியிருந்தனர். எனவேதான் ''யார் என்னை அடித்தார்கள், என்னுடைய அனுமதியில்லாமல் எப்படி என்னை அடிக்கலாம்?'' என்ற கேள்விகளுக்கு விடை தேடும் விபரீத முயிற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை.

தன்னுடைய செல்வாக்கு குறித்து துதிபாடிகள் உருவாக்கிய பிரமையிலிருந்து குணமாகாத கருணாநிதி, 'உண்ணாவிரதம்' என்று அறிவித்துப் பார்த்தார். ஜெகத்ரட்சகனைத் தவிர வேறு யாரும் கண்ணீர் விடவில்லை. 'ஆம்புலன்சில் வருகிறேன்' என்றார். தடுக்க ஆளில்லை. 'இரண்டு கண்கள்' என்ற வசனமோ எடுபடவில்லை. வேலைநிறுத்தத்தை உடைக்கும் முயற்சி தோல்வியடைந்தது. சோனியாவைத் தீயிலிருந்து பாதுகாக்கும் முயற்சியோ, கருணாநிதியின் கொடும்பாவி தீக்கிரையாவதில் முடிந்தது. வாயை மூடிக்கொண்டு போலீசின் பின்னால் பதுங்கிக் கொள்வதுதான் எதிர்வரும் தேர்தலுக்கும் தனது எதிர்காலச் சந்ததிக்கும், இந்திய ஜனநாயகத்துக்கும் நல்லது என்று தெளிந்த கருணாநிதி, இப்பிரச்சினை குறித்து போலீசு அதிகாரிகளுடன் மட்டுமே பேசினார்.

ஈழப்பிரச்சினையில் கருணாநிதிக்கு எதிராகச் சவடால் அடித்த எதிர்க்கட்சிகளும் உயர்நீதிமன்றப் பிரச்சினையில் போலீசுக்கு எதிராக வாய்திறக்கவில்லை. மார்க்சிஸ்டுகளோ கருணாநிதிக்கு ஒரு கண்டனத்தைத் தெரிவித்து விட்டு, நீதிமன்றம் செல்லுமாறு வழக்குரைஞர்களுக்கு அறிவுறுத்தினர். போலி கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கங்கள் வழக்குரைஞர்களுக்கு ஆதரவாக ஒரு அறிக்கை கூட விடவில்லை. ஜனநாயகத்தின் காவலர்ளாகத் தம்மைச் சித்தரித்துக் கொள்ளும் பத்திரிகைகளோ 'ஒழுங்கின்' காவலர்களாக அவதாரமெடுத்திருந்தனர். காவல்துறையே திக்குமுக்காடிப் போகுமளவுக்கு ஆதரவைச் சொரிந்தனர்.

அரசாங்கம், நிர்வாக எந்திரம், நீதித்துறை, ஊடகங்கள் ஆகிய அனைவரும் போலீசு இராச்சியத்தின் காவலர்களாக அணிவகுத்து நிற்க, வழக்குரைஞர்கள் தன்னந்தனியாகப் போராடிக்கொண்டிருந்தனர். இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவம் குறித்து மற்றவர்கள் புரிந்து கொள்வது இருக்கட்டும், அனைத்திந்திய வழக்குரைஞர் சங்கத்தலைமைக்கும், பிற மாநில வழக்குரைஞர்களுக்கும் கூட இது உரைக்கவில்லை. மொத்தத்தில் இது தமிழ்நாட்டின் பிரச்சினையாகவும், ஈழத் தமிழர் தொடர்பான பிரச்சினையாகவும் மட்டுமே கருதப்பட்டு ஒதுக்கப்பட்டு விட்டது.

போலீசுக்கு எதிரான தன்னியல்பான கோபம்தான் தமிழக வழக்குரைஞர்களை வழிநடத்தியதே தவிர, தாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் போராட்டம் தோற்றுவித்திருக்கின்ற அரசமைப்பு நெருக்கடியை வழக்குரைஞர்கள் பலர் புரிந்து கொள்ளவில்லை. அவ்வாறு புரிந்திருப்பின், போலீசு அராஜகத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தை, போலீசு ஆட்சிக்கு எதிரான மக்கள் போராட்டமாக மாற்றும் திசையில் அவர்கள் நகர்ந்திருக்க முடியும். இரு அதிகாரிகளுக்கு எதிரான தற்காலிகப் பணி நீக்கம் என்ற இந்த உத்தரவை, உந்து பலகையாகப் பயன்படுத்திக் கொண்டு போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றிருக்க முடியும். நாடாளுமன்ற போலி ஜனநாயகத் தேர்தல் கூச்சலை ஊடறுத்துக் கொண்டு ஜனநாயகம் குறித்த உண்மையான கேள்விகளை எழுப்பியிருக்க முடியும்.

எனினும் இவையனைத்தும் சாத்தியங்கள் மட்டுமே. இதனை சாதிப்பதற்கு ஏற்ற தலைமை வழக்குரைஞர்களுக்கு இல்லை. நாள் ஆக ஆக, போராட்டம் தமது பிடிக்குள் அடங்காமல் விரிந்து சென்று விடுமோ என்ற அச்சம் காரணமாகத் தலைமை சரணடைந்து விட்டது. எனினும் இது முடிவு அல்ல. குனிந்து கும்பிடுபவர்களை மண்டியிடுமாறும், மண்டியிடுபவர்களை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்குமாறும் போலீசு ஆட்சி மிரட்டும். அந்த மிரட்டல் புதிய போராட்டத்துக்கான தூண்டுதலை வழங்கும்.

**போலீசில் அடி வாங்கிய ஒரு சாதாரண மனிதன் கோர்ட்டுக்குப் போய் பெற்றிருக்கக் கூடிய நீதி கூட வக்கீல்களுக்குக் கிடைக்கவில்லை. மொத்தத்தில் இது முழுமையான போலீசு ஆட்சி என்பதற்கு மேல் இதில் சொல்வதற்கு எதுவும் இல்லை.**

**வழக்குரைஞர்களின் போராட்டத்துக்குப் போட்டியாக அரசு - உயர் போலீசு அதிகாரிகள் தூண்டிவிட்டு நடத்திய கீழ்நிலை போலீசார் குடும்பத்தினரின் உண்ணாவிரதம்.**




● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

## நீதிமன்றத் தாக்குதல் பற்றிய ஸ்ரீகிருஷ்ணா கமிசன் அறிக்கை:

# கருப்பு அங்கிக்குள் காக்கிச் சட்டை புத்தி

"யாருடைய உத்தரவின் பேரில் போலீசு படைகள் உயர் நீதி மன்றத்திற்குள் நுழைந்தன? எந்த அதிகாரியினுடைய உத்தரவின் பேரில் அன்று தடியடி நடத்தப்பட்டது?" என்ற அடிப்படையான இரு கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் தவிர்த்து விட்டு, போலீசு நடவடிக்கையை நியாயப்படுத்தும் ஒரு 'திரைக்கதை'யை இடைக்கால அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா.

"பிப்ரவரி 19 அன்று நடைபெற்ற தடியடியைப் புரிந்து கொள்ள ஜனவரி 29 -இலிருந்து தொடங்க வேண்டும்" என்று கூறி ஈழத்தில் போர் நிறுத்தம் கோரி நாம் நடத்திய போராட்டங்கள், அந்தப் போராட்டத்தின் போது குறிப்பிட்ட சில வழக்குரைஞர்கள் நீதிமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக போலீசினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை விவரிக்கிறார். பிப். 19 அன்று முட்டை வீச்சு சம்பவம் தொடர்பாக சில வழக்குரைஞர்களை போலீசு கைது செய்ததாகவும், அந்தக் கைது நடவடிக்கையைப் பிற வழக்குரைஞர்கள் எதிர்த்ததாகவும், பொறுமையைக் கடைப்பிடித்த போலீசைச் சீண்டி, அவமானப்படுத்தி ஆத்திரமூட்டியதாகவும், கல்லெறிந்ததாகவும்... இத்தகைய சூழ்நிலையில் வழக்குரைஞர் கும்பலைக் கலைக்க தடியடி அவசியமாகத்தான் இருந்திருக்கிறது என்றும் கூறுகிறார் கிருஷ்ணா.

"அந்தத் தடியடியில் போலீசார் வரம்பு மீறிவிட்டார்கள்" என்று குறிப்பிடும் ஸ்ரீகிருஷ்ணா, "படையினர் அவ்வாறு வரம்பு மீறுவதைத் தடுக்க ஆணையரும் போலீசு அதிகாரிகளும் முயன்ற போதிலும் அவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை" என்றும் கூறுகிறார்.

மாறாக "தடியடி நடத்த உத்தரவிட்டது யார் என்பதை வீடியோவிலிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை" என்று கூறி அந்தப் பிரச்சினையை அத்தோடு முடித்துக் கொள்கிறார்.

அன்றைய சம்பவம் குறித்து கிருஷ்ணாவின் அறிக்கையில் கண்டுள்ள பல விவரங்கள் பல பிழையாகவும் முரண்பாடாகவும் இருக்கின்றன. அவற்றை நாம் ஆதார பூர்வமாக நிரூபிக்க இயலும். இருப்பினும், அந்த விவரங்களுக்குள் செல்வதைக் காட்டிலும், இத்தகைய ஒரு தலைப்பட்சமான அறிக்கையை எழுதும்படி நீதிபதியைத் தூண்டிய சிந்தனைப் போக்கு எது என்பது குறித்துத்தான் நாம் அதிகமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கருதுகிறோம்.

"வழக்குரைஞர்கள் எல்லோரும் சட்டப்படிதான் நடக்கிறார்களா, அவர்கள் தவறே செய்யாதவர்களா, போலீசு மட்டும்தான் தவறு செய்ததா, போலீசை மட்டும்தான் தண்டிக்க வேண்டுமா, போலீசு - வக்கீல் இருதரப்பினரில் அதிகம் தவறு செய்தது யார்?" என்ற கேள்விகளை விசாரிப்பதற்காக இந்தக் கமிஷன் நியமிக்கப்படவில்லை. 19-ஆம் தேதி நடைபெற்ற கொலை வெறித் தாக்குதலை உலகமே பார்த்திருக்கிறது. "அத்தகைய ஒரு சட்டவிரோத நடவடிக்கைக்கு சட்டப்படி யார் பொறுப்பு?" என்ற கேள்விக்கு விடை தேடத்தான் இந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. ஆனால் கமிஷனோ, "காவல்துறை இந்த அளவு ஆத்திரம் கொள்வதற்கு வழக்குரைஞர்கள் எப்படி காரணமாக இருந்திருக்கிறார்கள்?" என்ற கேள்வியை எடுத்துக் கொண்டு ஆராய்ந்திருக்கிறது. இதைத்தான் இந்து, எக்ஸ்பிரஸ் முதலான பத்திரிகைகள் இத்தனை நாட்களாக இங்கே எழுதிக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிக்கையைப் பாராட்டி இன்று இந்து நாளேடு எழுதியுள்ள தலையங்கம் இப்படித் தொடங்குகிறது "சில சமயங்களில் சூழல் தான் எல்லாமுமாக இருக்கிறது. அந்த வகையில் 19-ஆம் தேதி நடைபெற்ற சம்பவங்களை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதற்கான பார்வையை உச்ச நீதிமன்றத்துக்கு ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் வழங்கியிருக்கிறது."

ஊடகங்களின் பார்வையை தீர்மானிக்கும் அரசியல் கருத்துகள் அவர்களை அவ்வாறு எழுதத் தூண்டலாம். ஆனால் ஒரு நீதிபதியின் பார்வையும் அப்படித்தான் இருக்கும் என்றால், அந்த இடத்தில் 'சட்டத்தின் ஆட்சி' முடிவுக்கு வந்துவிடுகிறது. இந்த அணுகுமுறைதான் நீதிவழங்கும் முறை என்று ஆகிவிட்டால், இந்திராவின் கொலையால் ஆத்திரம் கொண்ட இந்துக்கள், சீக்கியர்கள் மீது நடத்திய தாக்குதல் முதல் எல்லாத் தாக்குதல்களுக்கும் சூழலின் மீது பழி போட்டு தப்பித்துக் கொள்ளலாம்.

ஸ்ரீகிருஷ்ணா குறிப்பிடுவதைப் போல ஜனவரி 29 முதல் சிலவழக்குரைஞர்கள் வரம்புமீறி நடந்து கொண்டதும், அதை தலைமை நீதிபதி கட்டுப்படுத்த தவறியதும்தான் போலீசின்

**போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்ட நீதிமன்ற வளாகத்தைப் பார்வையிடும் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா (வலமிருந்து மூன்றாவது).**




படிப்பகம்

www.padippakam.com

வெறித்தனத்துக்குக் காரணமாக இருந்தது என்பதை ஒரு வாதத் துக்காக ஒப்புக்கொள்வோம். இந்த ''ஆய்வு முறை'ப்படி, ''சிங்கள இராணுவம் நடத்தும் இனப்படுகொலையும், அதற்கு இந்திய அரசு துணை நிற்பதும்தான் இலங்கை வங்கி மீது கல்லெறியும் அளவு கோபத்தை தமிழகத்தின் வழக்குரைஞர் களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது'' என்ற நியாயத்தை நீதிபதி ஒப்புக் கொள்வாரா?

அப்படி நடக்கவில்லை. அந்த வழக்குரைஞர்கள் மீது எல்லா அத்துமீறல்களுக்கும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக் கிறது. ஏனென்றால், அதுதான் சட்டபூர்வமான அணுகுமுறை.

''வக்கீல்கள் போலீசை ஆத்திரமூட்டினார்கள், கல்லெறிந் தார்கள் - அதன் விளைவுதான் தடியடி'' என்ற போலீசு சார் பில் விளக்கம் சொல்கிறார் கிருஷ்ணா. இதே விளக்கத்தை ஆணையர் சொல்லட்டுமே. ''வக்கீல்கள் இப்படி நடந்து கொண் டதால் நான்தான் தடியடிக்கு உத்தரவிட்டேன்'' என்று ஒப்புக் கொள்ளட்டுமே. அல்லது ''என்னுடைய ஆட்கள் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை. வக்கீல்களின் நடவடிக்கைகளால் ஆத்திரம் கொண்டு பாய்ந்து விட்டார்கள்'' என்று சொல்லட் டுமே. வெறியாட்டம் ஆடிய போலீசார் மீதும் வழக்கு போடட்டும், கல்லெறிந்த வக்கீல்கள் மீதும் வழக்கு போடட் டும். தாக்கியது யார், தற்காத்துக் கொண்டது யார் என்பதை நீதிமன்றத்தில் பேசிக்கொள்வோம். போலீசு ஏன் பம்முகிறது?

போலீசின் நியாயத்தை கிருஷ்ணா பேசுகிறார். அரசு பேசு கிறது. ஊடகங்கள் பேசுகின்றன. ஆனால் போலீசு அதிகாரி கள் மட்டும் பேச மறுக்கிறார்கள். ''போலீசை நாங்கள் அனுமதிக் கவில்லை'' தலைமை நீதிபதி கூறிவிட்டார். ''வேறு யாரிடம் அனுமதி பெற்றீர்கள்?'' என்ற கேள்வியை தன் முன் ஆஜரான ஆணையரிடம் கேட்க வேண்டும் என்று ஸ்ரீகிருஷ்ணாவுக்குத் தெரியவில்லயாம்! நாடகம் என்றாலும் மிகவும் தரம் தாழ்ந்த நாடகம் இது.

*(மனித உரிமை பாதுகாப்பு மையம் 07.03.09 அன்று வெளியிட்ட ஸ்ரீகிருஷ்ணா கமிசன் குறித்த அறிக்கை சுருக்கித் தரப்பட்டுள்ளது.)*

## அனைத்துலக மகளிர் தினம்:

# பெண்ணுரிமைக்கான போராயுதம்!

அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் நாளன்று திருச்சியில் செயல்பட்டு வரும் பெண்கள் விடுதலை முன் னணி, ''ஈழத்தில் தமிழ் இன அழிப்புப் போர் மற்றும் பெண் கள், குழந்தைகள் மீதான வன்முறைகளை எதிர்ப்போம்! இந்திய அரசின் இராணுவ - ஆயுத உதவிகள், வர்த்தக, தூதரக உறவுகளைத் துண்டிக்கப் போராடுவோம்'' எனும் முழக்கத் துடன் உழைக்கும் பெண்களை அணிதிரட்டி ஆர்ப்பாட் டத்தை நடத்தியது.

திருச்சி மாவட்ட பெண்கள் விடுதலை முன்னணி தலை வர் தோழர் நிர்மலா தலைமையில், பாலக்கரை பிரபாத் திரை யரங்கம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ம.க.இ.க. தோழர் ராஜா மற்றும் பு.ஜ.தொ.மு. மாநில பொதுச் செயலாளர் தோழர் சுப. தங்கராசு ஆகியோர் எழுச்சியுரை யாற்றினர். ம.க.இ.க. மையக் கலைக்குழு மற்றும் பெ.வி.மு.வினர் நடத்திய ஈழத்தின் அவலம் குறித்த நாடகம், பொதுமக்களின் மனசாட்சியை உலுக்கும் விதமாக அமைந்தது.

விருத்தாசலத்தில் ''புதிய ஜனநாயகம் பெண்கள் வாச கர் குழு''வினர் அரங்குக் கூட்டமொன்றை நடத்தினர். தோழர் புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்லூரி மாணவி தமிழ் முல்லை, ஓய்வு பெற்ற ஆசிரியை இராஜலெட்சுமி அம் மாள் ஆகியோர் பல் வேறு அரங்குகளில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் அவற்றை எதிர் கொள்வது குறித்தும் உரையாற்றினர்.

''பெண்களின் உழைப்பைச் சுரண் டும் உலகமயமாக்க லுக்கு எதிராக; நாளுக்கு நாள் அதி கரித்து வரும் பெணகள் மீதான வன்முறை தாக்குதலுக்கு எதிராகப் போராட பெண்கள் ஓர் அமைப்பாக அணிதிரள வேண்டுமென''ப் பேசிக் கூட்டத்தை நிறைவு செய்தார், தோழர் கலைமதி.

சென்னை மாவட்ட பெண்கள் விடுதலை முன்னணி யினர் அடித்தட்டு உழைக்கும் மக்கள் நிறைந்த குரோம் பேட்டையில் திறந்தவெளி அரங்கில் மகளிர் தினக் கூட்டத்தை நடத்தினர்.

பெண்களே பங்கேற்று நடத்திய நாடகங்களும், வாசித்த கவிதைகளும், பாடிய புரட்சிகரப் பாடல்களும், அரங்கில் காட் சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களும் பெண்கள் விடு தலை குறித்த சித்திரத்தைக் கொடுத்தன.

''மகளிர் சுய உதவிக் குழு என்ற மாய வலையிலிருந்து பெண்கள் மீண்டு வரவேண்டும்'' என விளக்கி உரையாற்றி னார் பெ.வி.மு. சென்னை மாவட்டத் தலைவர் தோழர் உஷா. ''இத்தகைய கூட்டங்களில் பெண்களைவிட ஆண்கள்தான் அதிகம் கலந்து கொள்ள வேண்டுமென்று'' நையாண்டியாய் பேசிய தோழர் துரை. சண்முகம் ஆணாதிக்கத்தின் ஆணி வேரை அடையாளம் காட்டினார்.

மதுரையில் ம.க.இ.க., பு.மா.இ.மு. அமைப்புகளைச் சார்ந்த பெண் தோழர்கள் இணைந்து வடக்கு மாசி வீதியிலுள்ள மணி யம்மை மழலையர் பள்ளியில் அரங்குக் கூட்டத்தை நடத் தினர்.




சிவகங்கை ம.க.இ.க. தோழர் குரு சாமி மயில்வாகனன், மதுரை மாவட்ட ம.உ.பா. மையச் செயலர் லயனல் அந்தோணி ராஜ் மற்றும் தோழர் எழில் மாறன் ஆகியோர் உரையாற்றினர்.

– பு.ஜ. செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com

## செந்தட்டி தாழ்த்தப்பட்டோர் படுகொலை:

# இந்து மதம் கேட்ட நரபலி!

### தாழ்த்தப்பட்டோருக்கு வழிபாட்டு உரிமையை மறுக்கும் இந்து மதத்தைப் புறக்கணிப்போம்!


திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள செந்தட்டி கிராமத்தில், பெரும்பான்மையாக யாதவர்களும், கணிசமான அளவில் செட்டியார்களும், தாழ்த்தப்பட்டோரும் உள்ளனர். பெரும்பான்மையாக இருப்பதாலேயே யாதவ சாதி வெறியர்கள் சாதித் தினவெடுத்து திமிருடன் நடந்து வந்துள்ளனர்.

கடந்த மார்ச் ஆறாம் தேதியன்று தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பரமசிவன், ஈஸ்வரன் ஆகிய இருவரையும் யாதவ சாதி வெறியர்கள் மறைந்திருந்து தாக்கிக் கொடூரமாக வெட்டிக் கொன்றனர். மேலும், யாதவ சாதிவெறியர்களின் கொலை வெறியாட்டத்தில் படுகாயமடைந்த சுரேஷ் என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாகவே, இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்டோரின் மீது திட்டமிட்டு சாதிய மேலாதிக்கத்தை ஏவி யாதவ சாதிவெறியர்கள் ஒடுக்கி வருகின்றனர். செந்தட்டி ஊரிலிருக்கும் முப்பிடாதி அம்மன் கோவிலில் மூன்று சாதி மக்களும் சேர்ந்துதான் கோவில் விழாவை நடத்துவது வழக்கம். கடந்த 2003-இல் குடமுழுக்கு நடைபெற்ற பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் தீர்த்தம் எடுத்துக் கொண்டு உள்ளே வருவதை யாதவ சாதியினர் தடுத்துள்ளனர்.

கடந்த வருடம் தாழ்த்தப்பட்டோருக்குச் சொந்தமான சுடலை மாடசாமி கோயில் திருவிழாவின் போது பாடப்பட்ட பாடல்கள் பிடிக்கவில்லை என்று கூறி, மின் இணைப்பை துண்டித்து ஆதிக்க சாதியினர் ரவுடித்தனம் செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 2008-இல் முப்பிடாதி அம்மன் கொடை விழாவை யாதவ சாதியினர் நடத்தும்முன், கணக்கு-வழக்குகளை முறைப்படி நேர் செய்ய வேண்டும் என்று தாழ்த்தப்பட்டோர் கோரிக்கை வைத்தனர். பிறகு, இரு தரப்பினரும் தனித்தனியே விழா நடத்திக் கொள்ளலாம் என அனைவரும் ஒப்புதல் அளித்து, மாவட்ட போலீசு துணைக் கண்காணிப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் முன்னிலையில் கைச்சாத்து(ஒப்பந்தம்) இடப்பட்டுள்ளது.

**யாதவ சாதிவெறியர்கள் நடத்திய குரூரமான படுகொலைக்கு எதிராக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு, குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி போலீசாரிடம் வாதிடும் தாழ்த்தப்பட்டோர்.**



ஆதிக்க சாதியினர் கொடைவிழாவை நடத்தி விட்ட நிலையில், மார்ச் 10-ஆம் தேதி தமது கொடைவிழாவை நடத்தத் திட்டமிட்டு தாழ்த்தப்பட்டோர் மனுக் கொடுத்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர்கள் முற்பட்டபோது, இதனை எதிர்த்து யாதவர்கள் நடைபாதைகளில் முட்களை வெட்டிப் போட்டு யாதவ சாதிவெறியர்கள் இடையூறு செய்துள்ளனர். தாழ்த்தப்பட்டோர் ஒருவரின் வளர்ப்பு நாயை வெட்டிக் கொன்று குரூரத்தனத்தைக் காட்டினர். மேலும், தாழ்த்தப்பட்டோரை சமூக விலக்கம் செய்து ஊரில் உள்ள செட்டியார் கடைகளில் அவர்களுக்குப் பலசரக்கு விற்பதை நிறுத்திவிட்டனர்.

இந்நிலையில், யாதவ சாதிப் பெண் ஒருவர் வந்தபோது, புதர்க்காட்டில் மலம் கழித்துக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் எழுந்து நிற்கவில்லை என்ற அற்ப காரணத்தை முன்வைத்து இக்குரூரக் கொலைகளை செய்துள்ளனர். படுகொலைத் தாக்குதல் நடப்பதற்கு முன்பே தாழ்த்தப்பட்டோர் வீடுகளுக்குச் சென்று மிரட்டியுள்ளனர்.

சங்கரன்கோவிலில் இருந்து ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த கருப்பசாமி என்பவரை வழிமறித்து தாக்கியுள்ளனர். அவர் தப்பி ஓடிவிட்டதால் அவருக்கு பின்னால் வந்த ஈஸ்வரன், பரமசிவம், சுரேஷ் ஆகியோரை தாக்கியுள்ளனர். ஈஸ்வரனின் கழுத்தை வெட்டித் துண்டாக்கி தலையை அறுத்தெடுத்து, இரண்டு துண்டுகளாகப் பிளந்துள்ளனர். பரமசிவத்தின் கை வேறு கால் வேறாக வெட்டித் துண்டாக்கி வீசியெறிந்துள்ளனர். இந்த வெறிச்செயலுக்கு பழிவாங்கும் உள்நோக்கம் மட்டும் காரணமல்ல. ''இனி தாழ்த்தப்பட்டோர் யாராவது சம உரிமை கேட்டால் ஆதிக்கசாதி குரூரமாகப் பழிதீர்க்கும்'' எனும் பீதியில் தாழ்த்தப்பட்டோர் அனைவரும் அஞ்சி நடுங்க வேண்டும் எனும் சாதிவெறிதான் வெட்டுப்பட்டு இறந்தவர்களையும் கண்டம் துண்டமாய்க் கூறுபோட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோரைக் கொன்றொழிப்பது மட்டுமின்றி, பீகார் சாதிவெறி நிலப்பிரபுக்களைப் போல அந்த வட்டாரமெங்கும் ஆதிக்க சாதி வெறி பயங்கரத்தை நிலைநாட்டும் நோக்கத்தோடுதான் இப்படி கண்டம்துண்டமாக வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

போலீசும், ஓட்டுக் கட்சிகளும், பத்திரிகைகளும், கோவில் கொடை தகராறு மட்டுமே இந்த பிரச்சினைக்கு காரணம் என்று கூறி இதன் பின்னணியில் உள்ள ஆதிக்க சாதிவெறியை மறைக்க முயலுகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

தம்மை மிகவும் பிற்படுத்தப்பட்டோராக அங்கீகரிக்கக் கோரி அரசிடம் கெஞ்சும் ஆதிக்க சாதியினர், சம உரிமை கோரும் தாழ்த்தப்பட்டோரை ஆண்ட சாதித் திமிரில் இவ்வாறு வெட்டிக் கொல்வதை 'சமூக நீதி' காவலர்களோ அல்லது இந்து ஒற்றுமை பேசும் ஆர்.எஸ்.எஸ் கும்பலோ கண்டிப்பதே இல்லை.

சி.பி.ஐ; சி.பி.எம்; கட்சிகளையும், புதிய தமிழகம் கிருஷ்ணசாமியையும் தவிர வேறெந்த தலித் தலைவர்களும் இக்கொடுமைக்கெதிராகக் குரல் கொடுக்கவில்லை. கிருஷ்ணசாமியோ, உயிர்நீத்தவர்களுக்கு கூடுதல் நிவாரணம் வழங்கக் கோரியுள்ளார். மேலும், இந்தப் படுகொலையைச் செய்தவர்கள் சாதி மோதலை உருவாக்குவதற்காகத் திட்டமிட்டுக் கூலிப்படை துணையுடன் இதனைச் செய்துள்ளதாகச் சொல்கிறார். இதன் மூலம், இந்த படுகொலைதான் அங்கு சாதி மோதலை உருவாக்கியுள்ளது போன்ற கருத்தை உருவாக்கி, ஆதிக்க சாதி வெறியை மறைக்க முயலுகிறார்.

செந்தட்டி மட்டுமல்லாமல், தமிழகத்தின் பல கிராமங்களிலும் கோவில் வழிபாட்டுரிமை கோரும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஆதிக்க சாதியும் அரசும் கைகோர்த்து ஒடுக்குமுறையை ஏவிவிடுகின்றன. இதே வட்டாரத்தில் இருக்கும் படர்ந்தபுளி கிராமத்தில், கோவில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டதால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊரைக் காலி செய்துவிட்டு மலையில் குடியேறிய சம்பவம் சில மாதங்களுக்கு முன் நடந்தது.

மக்களின் உரிமை போராட்டங்களின் போது சட்டம்-ஒழுங்கு பேசும் போலீசோ, இங்கு ஆதிக்க சாதியினரின் ஏவல்நாயாக வலம் வருகிறது. யாதவ சாதியைச் சேர்ந்த சிலரை பெயரளவில் கைது செய்துவிட்டு, இன்னும் மூன்று தாழ்த்தப்பட்டோரைப் படுகொலை செய்ய யாதவ சாதிவெறியர்கள் திட்டமிட்டிருப்பதாகப் பீதி கிளப்பி, ஒடுக்கப்பட்டோரின் அடுத்தக்கட்ட போராட்ட முயற்சிகளைப் போலீசு தடை செய்துள்ளது. பச்சைப் படுகொலைகள் செய்த சாதி வெறியர்கள் வெற்றிக் களிப்புடன் வலம் வரும் போது, உரிமைக்காக போராடிய ஒடுக்கப்பட்ட மக்களோ சங்கரன் கோவில் காந்திநகர் சமுதாயக் கூடத்தில் அகதிகளைப் போல தஞ்சம் புகுந்துள்ளனர்.

• குமார்

# அயோத்தி ராமனா? அய்யோ பாவ ராமனா?

**மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், பா.ஜ.க. கும்பல் வழக்கம் போல அயோத்தி பிரச்சினையைக் கையிலெடுத்து இந்துமத வெறியைப் பரப்ப முயற்சிக்கிறது. இந்நிலையில் ராமனுக்காகவோ அல்லது ராமன் கோவில் கட்டுவதற்காகவோ பா.ஜ.க. துரும்பைக் கூட அசைக்கவில்லை என பா.ஜ.க.வின் அரசியல் நாடகத்தைத் திரைகிழித்து, ராமஜென்ம பூமியின் தலைமைப் பூசாரி சத்யேந்திரதாஸ் பேட்டியளித்துள்ளார். "தெகல்கா" ஆங்கில வார ஏட்டில் நிருபர் அஜித் சாகியின் கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள பதில்கள் இவை:**

**பா.ஜ.க. ராமன் கோவில் பிரச்சினையில் பின்வாங்கவில்லை; கோவில் கட்டுவதில் உறுதியாக உள்ளது என எல்.கே. அத்வானி கூறியுள்ளாரே?**

அவர் புளுகுகிறார். ராமன் கோவில் விவகாரத்தை பா.ஜ.க. அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே பயன்படுத்தியுள்ளது. ராமனுக்காகவோ அல்லது கோவில் கட்டுவதற்காகவோ அவர்கள் துரும்பைக் கூட அசைக்கவில்லை. இந்த விவகாரத்தில் பா.ஜ.க.வும், விஷ்வ ஹிந்து பரிசத்தும் சம்பந்தப்பட்டுள்ளவரை, ஒருபோதும் பிரச்சனை தீராது.


**ஆனால், ராம ஜென்ம பூமியை விடுவிக்கத்தானே பாபர் மசூதி இடிக்கப் பட்டது?**

பாபர் மசூதியை இடித்தது குழந்தை ராமனுக்கு (மசூதிக்குள் வைக்கப்பட்டிருந்த ராமன் பொம்மை) துயரத்தையே உருவாக்கியுள்ளது. பாபர் மசூதி இருந்தவரை அம்மசூதி, ராமன் சிலையை வெயிலிலும் மழையிலும் பாதுகாத்து வந்தது. ஆனால், இப்போதிருக்கும் தற்காலிகக் கூரையில் மழைத் தண்ணீர் ஒழுகுகிறது. மழைத் தண்ணீரில் இருந்து சிலையைப் பாதுகாக்க நான் ஒரு குடையை வைக்க வேண்டியதாயிற்று. பாபர் மசூதி இருந்தவரை ராமன் சிலை பட்டாடைகளுடன் ஜொலித்தது. இன்றோ கந்தலாடை உடுத்திப் பிச்சைக்காரனைப் போல நிற்கிறது. மசூதி தகர்ப்புக்கு முன்பு ராமனைப் பக்தர்கள் மிக அருகில் சென்று தரிசிக்க முடியும். ஆனல் இன்று, குறைந்தபட்சம் 16 மீட்டர் தள்ளி நின்றுதான் பக்தர்கள் கும்பிட வேண்டும். வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துவிட்டது. பாதுகாப்புப் படையின் புண்ணியத்தால் கோவிலுக்கு வருபவர்கள் சுற்றிச் சுற்றி நெடுந்தூரம் நடந்துவர வேண்டியுள்ளது. போலீசுத்துறை ஒவ்வொரு பக்தரையும் தீவிரமாகப் பரிசோதிக்கிறது. சாதாரண பூசைப் பொருட்களைக்கூட கொண்டுவர யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. பஜனைப் பாடல்களோ, ராமகாதையோ ஒலிப்பதில்லை. ஒலி பெருக்கிகள் கூட மவுனமாகிவிட்டன. முதல்முறை வருபவர்கள் மறுமுறை வரக்கூடாது என முடிவு செய்து விடுகின்றனர். பாபர் மசூதி இருந்தவரை இப்படியெல்லாம் நடந்ததில்லை. ஆயிரக்கணக்கானோர் வந்து சென்றனர். ஆனால் பாபர் மசூதியை இடித்ததன் மூலம் குழந்தை ராமனின் கோவிலை ராமபக்தர்கள் சிதைத்துவிட்டனர்.

**எப்போது ராமர் கோவில் கட்டப் படும் என எண்ணுகிறீர்கள்?**

எப்போது இந்துக்களின் உணர்வுகளும் முஸ்லீம்களது உணர்வுகளும்

**இந்துவெறி பா.ஜ.க.வின் அரசியல் நாடகத்தைத் திரைகிழிக்கும் ராமஜென்ம பூமியின் தலைமைப் பூசாரி சத்யேந்திர தாஸ்.**





படிப்பகம்

www.padippakam.com

இவ்விசயத்தில் ஒன்றுபடுகிறதோ, அப்போதுதான் அது கட்டப் படும். எப்போது இரு மதத்தவரின் மனதிலும் ''உலகிலேயே சிறந்த நாடு நம் இந்தியா'' எனும் கவிஞர் இக்பாலின் வரிகள் பதிகின்றதோ அப்போது.

**அயோத்தியில் விஷ்வ இந்து பரிஷத்துக்கு ஆதரவு எப்படி இருக்கிறது?**

பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு ஒன்றிரண்டு பழைய ஆட் களைத் தவிர வேறு எந்த சாதுக்களோ, மடாதிபதிகளோ விஷ்வ இந்து பரிஷத்தில் சேரவில்லை. அவர்கள் மதத்தின் பெயரால் இந்தியர்களைத் தவறாக வழிநடத்துகின்றனர் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். அவர்கள் தில்லி அரியணையைக் கைப்பற்றுவதற்காக ராமனின் நாமத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

**இதனால் நீங்கள் இந்துத்துவா சக்திகளிடையே எதிரிகளை சம்பாதிக்கவில்லையா?**

அவர்கள் என்னைத் தலைமை அர்ச்சகர் பதவியிலிருந்து நீக்கப் பலமுறை முயன்றார்கள். எனக்கு ராமனின் மீது பக்தி யில்லை என்றும் சொல்லிப் பார்த்தார்கள். பைசாபாத் ஆணை யரிடம் என்னை நீக்கச் சொல்லி மனுக் கொடுத்தனர். ஆனால் மசூதி இடிப்பு வழக்கு முடியும் வரை தற்காலிகக் கோவிலில் எந்தவொரு மாற்றமும் செய்யக் கூடாது என வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற இடைக்காலத் தீர்ப்பு, எனது தலைமை அர்ச்சகர் பதவியைக் காப்பாற்றி வருகிறது.

**யார் ராமர்கோவிலை நிர்வகிக்கின்றனர்?**

பைசாபாத் ஆணையாளர்தான் பொறுப்பாளர். எல்லா காணிக்கைகளும் ஒரு வங்கிக் கணக்கில் போடப்படும். அதி லிருந்து ஒரு பகுதி ''குழந்தை ராமனின்'' பராமரிப்புக்குச் செல விடப்படும். அதுவும் நான் ஊடகங்களில் முறையிட்டதற்குப் பிறகு, சில நேரங்களில் மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையில் தான் கிடைக்கிறது. மீதமுள்ள பணத்தைத் தொடமுடியாது.

**அயோத்தி முஸ்லீம்களைப் பற்றி உங்களது கருத்து என்ன? அவர்களில் ஒருவர் பாபர் மசூதியை மீட்க வேண்டும் என்று வழக்கு தொடுத்துள்ளாரே?**

அவர்கள் அயோத்தியின் உண்மையான குடிமக்கள். நமது சிலைகளுக்கு மாலைகட்டிக் கொடுப்பதும், துணிகளைத் தைத் துத் தருவதும் அயோத்தி முஸ்லீம்கள்தான். இந்த முஸ்லீம் கள் கொடியவர்களாக இருந்தால், எங்கள் விழாவுக்கு அவர் கள் கொடுக்கும் பட்டாசுகளில் ஒரு வெடிகுண்டைச் சேர்த்து வைத்து அனுப்பி இருக்க முடியுமே! ஆனால் அவர்கள் இது வரை அப்படி செய்யவில்லை; இனியும் அப்படிச் செய்யப் போவதில்லை.

**இந்தப் பிரச்சனைக்கு என்னதான் தீர்வு?**

இந்தப் பிரச்சனைக்கு அரசியல்வாதிகள் என்றைக்கும் தீர்வு காணப் போவதில்லை. இந்து ஒருவரையும், முஸ்லீம் ஒருவ ரையும் தேர்வுசெய்து அவர்களிருவரும் பேசி இதற்கு ஒரு தீர்வு காணச் சொல்லுங்கள். அதனை அனைவரும் ஏற்றுக் கொள் வார்கள் என உறுதி கூறுங்கள். அந்த மட்டில் சுலபமானதுதான்.

*இந்துவெறியர்கள் கடவுள் ராமன் மீது பற்றோ, பக்தியோ கொண்டவர்களல்ல. ராமனை வைத்து 'இந்து'க்களை அணி திரட்டிக் கொண்டு முஸ்லிம்களைத் தாக்கி அரசியல் அதிகா ரத்தைக் கைப்பற்றி, இந்துவெறி பாசிச பயங்கரத்தை நிறுவு வதே அவர்களின் நோக்கம். அதனால்தான் ராமன் பொம் மையை அம்போவென விட்டுவிட்டு ராமன் கோயிலைக் கட்டப்போவதாக இன்னமும் வெறியூட்டி வருகிறார்கள். இந்துவெறியர்களின் முகவிலாசத்தையும், மத நம்பிக்கைக் கும் மதவெறிக்கும் உள்ள வேறுபாட்டையும் உலகுக்கு உணர்த்திவிட்டு, கடவுள் ராமன் பொம்மை அயோத்தியில் பிச்சைக்காரனாக நின்று கொண்டிருக்கிறது.* •

> **அயோத்தி முஸ்லீம்கள் கொடியவர்களாக இருந்தால், எங்கள் விழாவுக்கு அவர்கள் கொடுக்கும் பட்டாசுகளில் ஒரு வெடிகுண்டைச் சேர்த்து வைத்து அனுப்பி இருக்க முடியுமே! ஆனால் அவர்கள் இதுவரை அப்படி செய்யவில்லை; இனியும் அப்படிச் செய்யப் போவதில்லை.**

**இயல்பான மதச்சார்பின்மை: இந்துக்களுக்கு தனிச்சிறப்பான கண்ணாடி வளையல் மற்றும் வழிபாட்டுக்கான பொருட்களை விற்கும் அயோத்தியிலுள்ள முஸ்லிம் கடை. (மேல் படம்). அயோத்தி ராமஜென்ம பூமி அருகே இந்து சன்னியாசிகளுக்கு ''பாதரட்சை''களை தயாரித்து விற்கும் முஸ்லிம்:**







படிப்பகம்

www.padippakam.com

# வருண் காந்தியை மட்டுமல்ல, ஆர்.எஸ்.எஸ். கும்பலையே தடை செய்!

## பா.ஜ.க. வேட்பாளர் வருண் காந்தியின் முசுலீம் விரோத பேச்சு விதிவிலக்கானதல்ல.


''நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும்.....'' என்றொரு பழமொழி சொல்வார்களே, அதற்கு முற்றிலும் பொருத்தமானது பாரதீய ஜனதா கட்சி. அந்தக் கட்சி எவ்வளவுதான் தன்னை நவீனமாகக் காட்டிக் கொண்டாலும், அந்தக் கட்சியின் தலைவர்கள் எவ்வளவுதான் மேன்மக்களாக இருந்தாலும், அக்கட்சியாலும் அதன் தலைவர்களாலும் முசுலீம்களுக்கு எதிரான விஷத்தைக் கக்காமல் அரசியல் வாழ்வில் ஒரு நொடிப் பொழுதைக்கூடக் கழிக்க முடியாது.

உத்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள பிலிபிட் மக்களவைத் தொகுதியில் பாரதீய ஜனதா கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வருண் காந்தி, மார்ச் முதல் வாரத்தில் அத்தொகுதியில் நடந்த ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், ''இது (காங்கிரசின் சின்னமான) கையல்ல; இது (பா.ஜ.க.வின் சின்னமான) தாமரையின் சக்தி; இது தேர்தலுக்குப் பிறகு முசுலீம்களின் தொண்டையை அறுத்து விடும்'' (ஆதாரம்: தி ஹிந்து, 24.03.2009, பக்.10) எனப் பேசியதோடு, ''சுன்னத்'' செய்வது போன்ற செய்கையையும் காட்டி முசுலீம்களை இழிவுபடுத்தியிருக்கிறான். மேலும், ''யாராவது ஒருவர் இந்துக்களை நோக்கி ஒரு விரலை நீட்டினாலும், அந்தக் கையை வெட்டுவேன் என கீதையின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்'' என்றும் (ஆதாரம்: தி ஹிந்து, 18.03.2009, பக்.1) வருண் காந்தி ஊளையிட்டுள்ளான்.

நேரு குடும்பத்தின் வாரிசான வருண் காந்தி, பார்ப்பதற்கு வெள்ளையும் சொள்ளையுமாகத் தெரிந்தாலும், அவன் வாயைத் திறந்தாலே முசுலீம்களுக்கு எதிரான வக்கிரமும், இந்து மதவெறிக் கொழுப்பும்தான் பொங்கி வழியும் எனப் பல பத்திரிகையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவனது இந்து மத வெறி பிடித்த பேச்சைப் பத்திரிகையாளர்கள் ஒளி-ஒலிப்பதிவு செய்ய முயன்றபோதெல்லாம் இந்து மதவெறிக் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். எனினும், இத்தாக்குதல்களுக்கு அஞ்சாமல் தனியார் தொலைக்காட்சியைச் சேர்ந்த நிருபர் ஒருவர், மிகவும் இரகசியமான முறையில் வருண் காந்தியின் பொதுக் கூட்ட பேச்சை ஒளிப்பதிவு செய்து, கவிஞன் என்ற போர்வையில் உலவி வரும் அம்மிருகத்தை இந்திய மக்களின் முன் அம்பலப்படுத்திவிட்டார்.

இந்தியத் தேர்தல் ஆணையம் வருண் காந்தியின் பொதுக் கூட்ட உரை தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு எதிரானது எனக் குற்றஞ்சுமத்தி, இதற்கு விளக்கம் அளிக்குமாறு வருண் காந்திக்கும் பா.ஜ.க.விற்கும் தாக்கீது அனுப்பியது. ''தனது பொதுக்கூட்ட உரையை யாரோ திருத்தி வெளியிட்டு உள்ளதாகவும், இது தனது எதிரிகளால் பின்னப்பட்ட சதி'' என்றும் விளக்கம் கொடுத்து, வருண் காந்தி தப்பித்துக் கொள்ள முயன்றான். இந்தியத் தேர்தல் ஆணையம் வருண் காந்தியின் பித்தலாட்ட விளக்கங்களை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதோடு, அவன் மீது மூன்று குற்ற வழக்குகளைத் தொடுத்திருக்கிறது. இந்த வழக்குகளைத் தள்ளுபடி செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உ.பி. உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டதோடு, இந்தக் குற்ற வழக்கை நடத்துவதற்கான முகாந்திரம் இருப்பதாகத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

''வருண் காந்தியை பிலிபிட் தொகுதியின் வேட்பாளராக நிறுத்த வேண்டாம்'' எனத் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டதை, பா.ஜ.க. ஒதுக்கித் தள்ளிவிட்டதன் மூலம் அக்கட்சி வருண் காந்திக்குக் கொம்பு சீவிவிட்டுள்ளது. அத்வானி இப்பிரச்சினை பற்றி மௌனம் சாதிப்பதன் மூலம் வருண் காந்திக்கு ஆதரவு காட்டி வருகிறார். ராஜ்நாத் சிங் போன்ற அக்கட்சியின் தலைவர்கள் தேர்தல் ஆணையம் எங்களுக்கு எப்படி ஆலோசனை வழங்கலாம் எனக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள். சிவசேனை, விசுவ இந்து பரிசத் போன்ற வானரக் கூட்டங்களோ வருண் காந்தி பேசியதில் ஒரு தவறும் இல்லை என வம்படி செய்து வருகின்றன.



சாக்கடை வாயைத் திறந்து இந்துவெறியூட்டும் பாசிசக் குலக் கொழுந்து வருண் காந்தி

''வருண் காந்தியை வேட்பாளராக நிறுத்த வேண்டாம்'' எனத் தேர்தல் ஆணையம் வழங்கிய ஆலோசனையை, ஏதோ வருண் காந்தியின் குடியுரிமையையே பறித்து விட்டது போல ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஊதிப் பெருக்கி வருகிறது. இப்பிரச்சினையில் இந்து மதவெறி அமைப்புகள், அவற்றின் ஆதரவாளர்கள் ஆகியோரின் கருத்து என்னவாக இருக்கும் என்பதை தினமணி தலையங்கமாக (25.03.2009) வடித்துக் கொடுத்துள்ளது.

''வருண் காந்தியின் மீதான குற்றச்சாட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு நிரூபிக்கப்படும் முன்பே, அவரை வேட்பாளராக நிறுத்தாதீர்கள் எனத் தேர்தல் ஆணையம் ஆலோசனை கூறுவது வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் இருக்கிறது. ......ஜகதீஷ் டைட்லர் போன்ற சீக்கியர் படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களெல்லாம் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அமைச்சர்களாகும்போது, வருண் காந்திக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு களம் இறங்குகின்றன ஊடகங்கள்.....'' என தினமணி புலம்பித் தீர்த்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

கோவை குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட சில முசுலீம்கள் நிரபராதிகள் எனத் தெரிந்திருந்தும், அவர்களுக்குப் பிணை கூட வழங்காமல், விசாரணை என்ற பெயரில் 9-10 ஆண்டு காலம் அவர்கள் சட்டவிரோதமாகத் தண்டிக்கப்பட்ட பொழுது; அக்குண்டு வெடிப்பில் தொடர்புடையதாகக் கருதப்பட்ட பல முசுலீம்கள், தங்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனை காலத்தைவிட அதிகமான ஆண்டுகளைச் சிறையில் கழிக்க நேரிட்ட பொழுதெல்லாம், தினமணிக்கு இப்படிப்பட்ட 'நியாய' உணர்ச்சி பொங்கி வழிந்ததில்லை.



**வருண் காந்தியின் இந்துவெறியூட்டும் தேர்தல் பிரச்சாரத்தைக் கண்டித்து டெல்லியில் காங்கிரசு கட்சியின் சிறுபான்மைப் பிரிவு நடத்தும் கொடும்பாவி எரிப்புப் போராட்டம்.**

''தேர்தலுக்குப் பிறகு முசுலீம்களின் தொண்டைக் குழியை தாமரை அறுக்கும் எனப் பேசிய வருண் காந்திக்கு வேட்பாளராக நிற்கும் தகுதியுண்டா?'' என அறத்தின் அடிப்படையில் இப்பிரச்சினையைப் பார்க்க முடியாத அளவிற்கு தினமணியின் கண்களை இந்துமதவெறி மூடி மறைக்கிறது.

சீக்கிய இனப்படுகொலையில் ஈடுபட்ட காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஜகதீஷ் டைட்லர் மட்டுமல்ல; பல முசுலீம் எதிர்ப்புக் கலவரங்களுக்கும், படுகொலைகளுக்கும் தளகர்த்தாக்களாகச் செயல்பட்ட அத்வானி, நரேந்திர மோடி, கல்யாண் சிங், பால் தாக்கரே உள்ளிட்ட பல இந்து மதவெறிக் கிரிமினல்களும் கூடத்தான் சட்டத்தால் தண்டிக்கப்படாததோடு, அரசின் பாதுகாப்போடு சுற்றி வருகிறார்கள். ''அவர்களையும் தேர்தலில் போட்டியிடத் தடை செய்; வருண் காந்தியையும் தடை செய்'' என தினமணி கூறியிருந்தால், அதனின் நடுநிலைமையை மெச்சியிருக்கலாம். ஆனால், தினமணியோ ''நீ மட்டும் யோக்கியமா?'' என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம், இந்து மதவெறிக் கும்பலின் கிரிமினல் குற்றங்களுக்கு நியாயம் கற்பிக்க முயலுகிறது.

**''வருண் காந்தியை வேட்பாளராக நிறுத்த வேண்டாம்'' எனத் தேர்தல் ஆணையம் வழங்கிய ஆலோசனையை, ஏதோ வருண் காந்தியின் குடியுரிமையையே பறித்து விட்டது போல ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஊதிப் பெருக்கி வருகிறது.**

பா.ஜ.க., ''வருண் காந்தியின் பேச்சு கட்சியின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை'' எனத் தேர்தல் ஆணையத்திற்கு விளக்கம் அளித்திருக்கிறதாம். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது என்பதற்கு இதைவிட நல்ல எடுத்துக்காட்டு வேறெதுவும் இருக்க முடியாது. ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பலின் பிறப்பும் சரி, அவ்வமைப்புகளின் இயக்கமும் சரி, ஆதிக்க சாதி வெறி - முசுலீம் எதிர்ப்பு இந்து மத வெறி" அரசியலைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்வானி, நரேந்திர மோடி போன்ற அக்கட்சியின் ''தீவிரவாத''த் தலைவர்கள் மட்டுமல்ல, தவறான கட்சியில் இருக்கும் சரியான நபராக திராவிடக் கட்சிகளால் முன்நிறுத்தப்பட்ட ''மிதவாதி'' வாஜ்பாயியும், முசுலீம்களுக்கு எதிரான விஷத்தைக் கக்குவதில் சளைத்தவரல்ல.

வருண் காந்தியாவது தனது பேச்சை யாரோ திருத்தி வெளியிட்டிருப்பதாகத் தான் கூறி வருகிறார். ஆனால், வாஜ்பாயியோ புளுகுவதில் எல்லோரையும் மிஞ்சியவர். வாஜ்பாயி பிரதமராக இருந்த பொழுது, குஜராத் கலவரத்தையடுத்து நடந்த பா.ஜ.கட்சியின் கோவா மாநாட்டில் முசுலீம்களுக்கு எதிரான விஷத்தைக் கக்கினார். அவரது பேச்சு நாடாளுமன்றத்தில் சர்ச்சைக்குள்ளானபொழுது, ''தான் அப்படி பேசவில்லை'' எனப் புளுகியதோடு, தனது பேச்சை தானே திருத்தி ஒரு ஒலித்தகட்டை வெளியிட்டு, நாடாளுமன்றத்தையே ஏமாற்றினார். இப்படிப்பட்ட யோக்கியசிகாமணிகள் நிறைந்த அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.

நியாயமாகப் பார்த்தால், சுதந்திரத்துக்கு முன்னும், பின்னும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் தலைமை தாங்கி நடத்திய முசுலீம் எதிர்ப்பு கலவரங்கள், படுகொலைகளுக்காக, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. உள்ளிட்டு அதன் சகோதர அமைப்புகள் அனைத்தையும் அரசியல் அரங்கிலோ, பண்பாட்டு அரங்கிலோ செயல்பட முடியாதவாறு தடை செய்திருக்க வேண்டும். அக்கட்சியின் 'தேசிய'த் தலைவர்கள் தொடங்கி உள்ளூர் ராம.கோபாலன் வரை, இந்து மத வெறி பாசிசக் கும்பலின் தளபதிகள் பலரின் குடியுரிமைகள் அனைத்தையும் பறித்து, அவர்களுக்கு ஆயுள் தண்டனையோ, தூக்கு தண்டனையோ வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால், இந்து மதவெறிக் கும்பலை எதிர்கொள்வதில், 'மதச்சார்பற்ற' இந்திய அரசின் சட்டங்களோ மொன்னையாக இருக்கின்றன. அச்சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் பெற்ற போலீசு - நீதிமன்றங்கள் இரண்டும் இந்து மதவெறிக் கும்பலின் இளைய பங்காளிகளாக நடந்து வருகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

தேர்தல் ஆணையம் தொடுத்துள்ள வழக்கில் தனக்குப் பிணை வழங்க வேண்டும் எனக் கோரி தில்லி உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்தார், வருண் காந்தி. இவ்வழக்கில் அவருக்குப் பிணை வழங்கத் தனக்கு அதிகாரம் உள்ளதா என்பதைக் கூட ஆராயாத தில்லி உயர்நீதி மன்றம், மார்ச் 27 முடிய வருண் காந்திக்குத் தற்காலிகப் பிணை வழங்கி, சர்ச்சைக்குரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

இதே போன்று ஒரு வழக்கு சிவசேனாவின் தலைவர் பால் தாக்கரேவுக்கு எதிராக நடந்த பொழுது, அவருக்குச் சட்டப்படி வழங்க வேண்டிய சிறை தண்டனையைக் கூட அளிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. மாறாக, ''பால் தாக்கரே ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடவும், ஓட்டுப் போடவும் கூடாது'' எனத் தடை விதித்து, எறும்புக் கடியைப் போல ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்திய அரசின் மதச்சார்பின்மை கிழிந்து கந்தலாகி விட்டது என்பதை குஜராத் முசுலீம் படுகொலையின் பின் உலகமே தெரிந்து கொண்டு விட்டது. இப்படிப்பட்ட நிலையில், வருண் காந்திக்கு எதிராகத் தேர்தல் ஆணையம் தொடுத்துள்ள வழக்கு, இந்திய அரசின் நிர்வாணத்தை மறைக்கும் சல்லாத் துணியாகத்தான் பயன்படுமேயொழிய, அதற்கு மேல் தேர்தல் ஆணையத்தின் நடுநிலைக்கு முக்கியத்துவம் அளிக்க முடியாது.

''நேரு குடும்பத்தில் பிறந்த வருண் காந்தி இப்படிப் பேசலாமா?'' என்பது சில அப்பாவிகளின் அங்கலாய்ப்பு. வருண்காந்தியின் ''தோப்பனார்'' சஞ்சய் காந்தி, அவசர நிலை காலத்தில் முசுலீம்களுக்கு எதிராகப் போட்ட ஆட்டமெல்லாம், ஆர்.எஸ்.எஸ். கும்பலையே கொஞ்சம் அசர வைத்திருக்கும். தலைநகர் தில்லியின் துருக்மான் கேட் பகுதியிலுள்ள முசுலீம் குடியிருப்புகளைச் சட்டவிரோதமாக இடித்துத் தள்ளியதில் தொடங்கி முசுலீம் ஆண்களுக்கு வலுக்கட்டாயமாக குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தது உள்ளிட்டு, சஞ்சய் காந்தி மீது சுமத்தப்பட்ட பல கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படாமலேயே அமுக்கப்பட்டன. அப்படிப்பட்ட கிரிமினலின் தப்பாத வாரிசு என்பதை நிரூபித்திருக்கிறான், வருண் காந்தி.

• குப்பன்

# அந்நிய முதலீட்டுக்கு அபாரச் சலுகை!

மக்களின் கவனம் நாடாளுமன்றத் தேர்தல் கூத்துக்களை நோக்கித் திசை திருப்பிவிடப்பட்டிருக்கும் நேரமாகப் பார்த்து, அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையில் முக்கியமான மாற்றத்தை மிகவும் கமுக்கமாக முடிவு செய்து அறிவித்திருக்கிறது, காங்கிரசு கூட்டணி அரசு. இம்மாற்றம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதித்திருந்தால்கூட, அதற்கு எந்தவொரு ஓட்டுக்கட்சியும் முட்டுக்கட்டை போட்டிருக்கமாட்டார்கள். எதிர்க்கட்சிகள் என்ற முறையில் பா.ஜ.க.வும், போலி கம்யூனிஸ்டுகளும் முணுமுணுத்திருப்பார்களேயொழிய, அந்நிய முதலீட்டுக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டுவருவதில் மன்மோகன் சிங்குக்கு வேறு தலைவலி எதுவும் ஏற்பட்டிருக்காது. எனினும், மன்மோகன் சிங் கும்பலோ அந்த வாய்ப்பைக்கூட நாடாளுமன்றத்திற்குத் தராமல், அமைச்சரவையை மட்டும் கூட்டி முடிவெடுத்து இம்மாற்றத்தை அறிவித்து விட்டது.

மறுகாலனியாதிக்கச் சூழலில் நாடாளுமன்றத்திற்கு ''ரப்பர் ஸ்டாம்ப்'' என்ற மதிப்புமிக்க தகுதியைத் தருவதற்குக்கூட ஆளும் கும்பல் தயாராக இல்லை என்பதை மன்மோகன் சிங் மீண்டும் எடுத்துக் காட்டிவிட்டார். இப்படிப்பட்ட நிலையில், 15-ஆவது நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பணிகள் சூடாக நடைபெறுவதைப் பார்த்து வாயால் சிரிக்க முடியாது.

1991 முதற்கொண்டு தனியார்மயம்-தாராளமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும்கூட, தொழிற்துறையின் சில பிரிவுகளில் அந்நிய மூலதனம் நுழையத் தடை விதிக்கப்பட்டிருந்தது; சில பிரிவுகளில் இவ்வளவு சதவீதத்திற்கு மேல் அந்நிய மூலதனம் போடக் கூடாது என வரம்பு விதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தடைகளைக் காட்டித்தான் இந்தியா சுயசார்பான தொழில் கொள்கையைப் பின்பற்றுவதாக ஆளும் கும்பல் வீராப்புக் காட்டி வந்தது. அந்நிய முதலீட்டுக் கொள்கை தொடர்பாக, தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள மாற்றம் இந்த சுயசார்பு நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது.

இந்திய முதலாளியும், அந்நிய முதலாளியும் இணைந்து நடத்தும் கூட்டு நிறுவனத்தில், (குறைந்தபட்சம்) 51 சதவீதப் பங்குகள் இந்திய முதலாளி வசம் இருந்து, அந்நிறுவனத்தை நிர்வகிக்கும் உரிமையும் இந்திய முதலாளியிடம் இருக்கும் பட்சத்தில், அந்நிறுவனம் இந்திய நிறுவனமாகக் கருதப்படும். தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள மாற்றத்தின்படி, இந்த இந்திய நிறுவனம் தனது விரிவாக்கத் திட்டங்களுக்காக அந்நிய மூலதனத்தைப் பெற்றால், அம்மூலதனம் அந்நிய மூலதனமாகக் கருதப்படாமல் உள்நாட்டு மூலதனமாவே கருதப்படும். இந்த இந்திய நிறுவனம் சகோதர நிறுவனத்தைத் தொடங்குவதற்காக வெளிநாடுகளில் மூலதனத்தைத் திரட்டினால், அம்மூலதனமும் அந்நிய நேரடி மூலதனமாகக் கருதப்படாமல் உள்நாட்டு மூலதனமாகவே கருதப்படும். இந்த இந்திய நிறுவனம் வேறொரு நிறுவனத்தில் முதலீடு செய்வதற்காக வெளிநாடுகளில் மூலதனத்தைத் திரட்டினாலும், அப்படி முதலீடு செய்யப்படும் மூலதனமும் அந்நிய நேரடி முதலீடாகக் கருதப்படாமல், உள்நாட்டு முதலீடாகவே கருதப்படும். வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்டு இயங்கும் இந்திய நிறுவனங்கள் கொண்டு வரும் மூலதனமும் அந்நிய நேரடி மூலதனமாகக் கருதப்படாமல் உள்நாட்டு மூலதனமாகக் கருதப்படும்.

நேற்று வரை அந்நிய மூலதனமாக வகைப்படுத்தப்பட்ட இந்த இனங்கள் இன்று சுதேசி மூலதனமாக உருமாற்றம் அடைந்திருப்பதோடு, இந்த திடீர் சுதேசி மூலதனம் தொழில் துறையின் எந்தப் பிரிவிலும் எவ்விதத் தடையுமின்றி நுழையும் சலுகையையும் பெற்றுவிட்டது. தாராளமயம் நடைமுறைக்கு வந்து ஏறத்தாழ 17-18 ஆண்டுகள் கழித்து, நரியைப் பரியாக்க வேண்டிய அவசியம் இந்திய அரசுக்கு ஏன் வந்தது?

ஆண்டொன்றுக்கு 3,000 கோடி அமெரிக்க டாலர் அளவிற்கு வெளி


படிப்பகம்

www.padippakam.com



**ஹீரோ ஹோண்டா நிறுவன முதலாளிகளுடன் கூடிக் குலாவும் வர்த்தகத் துறை அமைச்சர் கமல்நாத்: தரகு முதலாளிகளின் நலனைக் காப்பதே அமைச்சுப் பணி!**

நாட்டு முதலீடுகளைக் ககவர்ந்திழுக்க வேண்டும் என்பது இந்திய அரசின் இலக்காம். ஆனால், பல்வேறு முயற்சிகள் எடுத்த பின்னும் 2007-08-இல் கூட இந்த இலக்கை எட்ட முடியாமல் போனதாம். உலகப் பொருளாதார வீழ்ச்சியை அடுத்து, 2007-08-இல் வந்த அளவிற்குக்கூட 2008-09 இல் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதல் போட முன்வராததால், வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுக்கும் நோக்கத்தோடு இப்புதிய மாற்றத்தைச் செய்திருப்பதாக இந்திய அரசு கூறி வருகிறது.

இந்த நொண்டிச் சாக்கைக் கூறுவதன் மூலம் சில உண்மைகளை மூடி மறைத்துவிட முயலுகிறது, இந்திய அரசு. அந்நிய மூலதனம் நுழைவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த துறைகளில்கூட சட்ட விரோதமான வழிகளில் பன்னாட்டு நிறுவனங்கள் புகுந்து, அந்த இந்திய நிறுவனங்களை அந்நிய நிறுவனங்களே ஆட்டிப் படைத்து வந்ததை முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே ஒப்புக் கொள்கின்றனர். குறிப்பாக, வீட்டுமனைத் துறையிலும், தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களிலும் அந்நிய மூலதனம் சட்ட விரோதமாக நுழைந்து இலாபம் ஈட்டியதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. நியாயமாகப் பார்த்தால்,இந்திய அரசு இந்த தில்லுமுல்லுகளுக்காக தரகு முதலாளிகளையும் அவர்களின் ஏகாதிபத்திய கூட்டாளிகளையும் தண்டித்துச் சிறையில் அடைத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, இந்தத் திருட்டுத்தனத்தைச் சட்டபூர்வமானதாக மாற்றி விட்டார், மன்மோகன் சிங்.

இதற்கும் மேலாக, இந்தியாவில் நுழையும் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை உள்நாட்டு முதலீடாகக் கருத வேண்டும்; இதன் மூலம், சுதேசி மூலதனத்திற்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் அந்நிய மூலதனத்திற்கும் வழங்க வேண்டும் என அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக வர்த்தகக் கழகத்தின் மூலம் இந்தியாவை நிர்ப்பந்தித்து வந்தது. அமெரிக்காவின் இந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் விதமாக அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார், மன்மோகன் சிங்.

இந்தியாவின் சில்லரை வணிகத் துறையில் எப்பொழுது கால் பதிக்கலாம் எனக் காத்திருக்கும் அமெரிக்காவின் வால்-மார்ட் நிறுவனம், ''ரிலையன்ஸ் ப்ரஷ்''ஷோடோ அல்லது பிர்லாவின் ''மோர்'' நிறுவனத்தோடோ கூட்டணி கட்டிக் கொண்டு, இந்தியாவெங்கும் பிரம்மாண்டமான பலசரக்குக் கடைகளைத் திறந்து நடத்துவதற்கு இனி எந்தத் தடையும் இருக்காது. இது போல, அந்நிய மூலதனம் நுழைவதற்குத் தடையோ வரம்போ விதிக்கப்பட்டிருந்த வீட்டுமனை வியாபாரம், விவசாயம், விமானப் போக்குவரத்து முதலான துறைகள் மட்டுமின்றி, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளாகக் கருதப்படும் தொலைத்தொடர்பு, ஆயுதத் தளவாட உற்பத்தி போன்றவற்றிலும் அந்நிய மூலதனம், இந்திய முதலாளிகளோடு கைகோர்த்துக் கொண்டு நுழைந்து விடும்.

ஆனாலும், மன்மோகன் சிங் கும்பலோ சில்லரை வணிகம், வீட்டுமனைத் தொழில், விவசாயம், தொலைதொடர்பு, ஆயுதத் தளவாட உற்பத்தி முதலான துறைகளில் அந்நிய மூலதனம் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளையோ, வரம்புகளையோ மயிரளவிற்குக்கூட நீக்கவில்லை என இன்னமும் கூறிக்கொண்டு திரிகிறது. மைய அரசு மேலே குறிப்பிட்ட துறைகளில் அந்நிய மூலதனம் நுழைவதற்குப் போடப்பட்டுள்ள தடைகளையும் வரம்புகளையும் நீக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், இந்தத் தடைகளை வெறும் காகிதப் பூச்சாண்டியாக மாற்றிவிட்டது என்பதே உண்மை.

''இந்திய முதலாளியும் அந்நிய முதலாளியும் கூட்டுச் சேர்ந்து நடத்தும் நிறுவனங்களை நிர்வகிக்கும் அதிகாரம் இந்திய முதலாளியின் கையில் இருக்கும்வரை எதற்கும் கவலைப்படத் தேவையில்லை; இந்தக் கூட்டு நிறுவனங்களை அந்நிய முதலாளிகள் கைப்பற்றிக் கொள்வதை அரசு ஒரு போதும் அனுமதிக்காது'' என சுதேசி வேடம் போடுகிறார் மன்மோகன் சிங். ஆனால், முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள்கூட அரசின் வீராவேசத்தை நம்ப மறுக்கிறார்கள். இத்தகைய கூட்டு நிறுவனங்களில் ஜூனியர் பங்குதாரர்களாக இருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள்தான் சட்டத்தின் கண் முன்னாலேயே இந்த இந்திய நிறுவனங்களின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தி வருவதாகவும், குறிப்பாக காப்பீடு துறையில் இதற்குப் பல உதாரணங்களைக் காட்ட முடியும் என்றும் அவர்கள் அம்பலப்படுத்துகிறார்கள். அந்நிய மூலதனத்தை உள்நாட்டு மூலதனம் போலக் கருதுவதற்காக அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியத் தொழில் துறையைக் கைப்பற்றும் போக்கை இன்னும் துரிதப்படுத்துவதாகவே அமையும்.

சீனா உள்ளிட்ட பல்வேறு ஏழை நாடுகள், தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார தேக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் நாடுகளின் தொழில் மற்றும் நிதித் துறைகளைக் கைப்பற்றிக் கொள்வதைத் தடுக்கும் பொருட்டு தொழில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஆனால், மன்மோகன் சிங்கோ அதற்கு எதிர் திசையில் இந்தியாவைப் பிடித்துத் தள்ளுகிறார். ஒரு அமெரிக்க அடிமை நாட்டின் பிரதமராக இருக்கும்பொழுது, இந்திய நாட்டு மக்கள் அவரிடமிருந்து இத்துரோகத்தைத் தவிர வேறெதைப் பெற முடியும்?

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# உண்மையை எழுதினால் உயிர் இருக்காது!

## ராஜபக்சேவின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்தும் சிங்களப் பத்திரிகையாளர்கள்கூட இலங்கை அரசால் நரவேட்டையாடப்படுகின்றனர்.

இலங்கையில் சிங்கள இனவெறி அரசின் அடக்குமுறைக்கும், கொலைவெறித் தாக்குதலுக்கும் பத்திரிகையாளர்கள் கூடத் தப்பவில்லை. அரசின் இனவெறியையும், பாசிச நடவடிக்கைகளையும் எதிர்த்து எழுதும் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும், கடத்திக் கொல்லப்படுவதும் அங்கு தொடர்கதையாகியுள்ளது. கிளிநொச்சியைப் பிடிப்பதற்கான போர் தொடங்கியதிலிருந்து இதுவரை முக்கியமான பத்திரிகையாளர்கள் பதினாறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை. பலர் எவ்விதக் குற்றச்சாட்டுகளுமின்றி கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் ''சண்டே லீடர்'' என்ற பத்திரிகையின் ஆசிரியர் லசாந்தா விக்கிரமதுங்கா அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது எழுத்துக்கள், உலக அரங்கில் இலங்கை அரசைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தன. லசாந்தா கொல்லப்படுவதற்கு முன்பு எழுதி வைத்திருந்த ஒரு கட்டுரையில், தான் இலங்கை அரசால் கொல்லப்படப் போவது நிச்சயம் என்றும், ஏற்கெனவே தான் இரு முறை தாக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அவரது மரணத்திற்குப் பிறகு ''சண்டே டைம்ஸ்'' என்ற பத்திரிக்கையில் தலையங்கமாக வந்த அந்தக் கட்டுரையில், தனது சொந்த மக்கள் மீதே குண்டு வீசிக் கொல்லும் அரசு — உலகிலேயே இலங்கை அரசு ஒன்றுதான் என்று கடுமையாகச் சாடியுள்ளார்.



ராஜபக்சேவின் இரகசிய கொலைப் படையால் கொன்றொழிக்கப்பட்ட ''சண்டே லீடர்'' பத்திரிகையின் ஆசிரியர் லசாந்தா விக்கிரமதுங்கா.

லசாந்தாவின் படுகொலையைப் பற்றி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் கொத்தபய ராஜபக்சேவிடம் பி.பி.சி. செய்தியாளர் கேட்ட போது. ''யார் அந்த லசாந்தா? போரில் பலர் கொல்லப்படுகின்றனர்; இந்த ஒரு உயிர்தானா உங்களுக்கு முக்கியம்?'' எனத் திமிராக பதிலளித்தார்.

''அவுட்ரீச்'' என்ற இதழின் ஆசிரியர் திஸ்ஸ நாயகம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த ஓராண்டாக சிறையிலிருக்கிறார். இவரது உடல்நிலை மிகவும் மோசமாக உள்ள நிலையில், சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும், பத்திரிக்கையாளர் சங்கங்களும் இவரை விடுவிக்கக் கோரிவருகின்றன. ஆனால் இலங்கை அரசு, இவர் மீதுள்ள பொய்க் குற்றச்சாட்டுகளைக் காட்டி, இவரை விடுவிக்க மறுத்து வருகிறது.

''உதயன்'' பத்திரிகையில் வேலை செய்த செல்வராஜா ரவிவர்மன் என்ற இளம் பத்திரிக்கையாளர் கடந்த 2007-ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். ''ஈழ நாடு'' என்ற தமிழ்ச் செய்தித்தாளின் ஆசிரியர் சின்னத்தம்பி சிவ மகராசன் கடந்த 2006-ஆம் ஆண்டு அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ''யாழ் தினக் குரல்'' பத்திரிகையின் நிருபர் சுப்ரமணியம் ராமச்சந்திரன் காணாமல் போய் மூன்று ஆண்டுகளாகியும் அவரைப் பற்றிய தகவல் இல்லை. பி.பி.சி. வானொலியின் தமிழ்சேவைப் பிரிவில் வேலை பார்க்கும் தர்மரத்தினம் சிவராமன் என்ற பத்திரிகையாளர் 2005-ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்டார். இப்படி, தாக்குதலுக்குள்ளான பத்திரிகையாளர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

அரசுக்கு எதிராகப் பேசுபவர்கள், எழுதுபவர்களைத் தாக்குவதற்கும் கடத்திச் சென்று கொல்வதற்கும், அரசு தனிச்சிறப்பான ஒரு இரகசிய கொலைப்படையை வைத்துள்ளது. 'வெள்ளை வேன்' குழு என அழைக்கப்படும் இந்தக் கூலிப் படை, வெள்ளை நிற வேன்களில் வந்து, இதுவரைப் பலரைக் கொலை செய்துள்ளது.

கடந்த மாத இறுதியில், ''சுடர் ஒளி'' என்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் வித்யாதரன் இதே வெள்ளை வேன் குழுவினரால் கடத்தப்பட்டார். கொழும்புவில் அவரது உறவினரின் இறுதிச் சடங்கில் வைத்துப் பட்டப்பகலில் அவர் கடத்தப்பட்டார். அந்த இறுதிச் சடங்கில், கூட்டம் அதிகமாக இருந்ததால், கடத்தலுக்குப் போலீசுக்காரர்களே பகிரங்கமாக உதவினர். வித்யாதரனது உறவினர்கள் உடனே இவ்விசயத்தைச் சர்வதேசப் பத்திரிகையாளர்கள் மூலம் அம்பலப்படுத்தினார்கள். இதனால் நெருக்கடிக்குள்ளான அரசு, வித்யாதரனைக் கைது செய்துள்ளதாக அறிவித்தது.

பட்டப்பகலில் இலங்கை அரசு பயங்கரவாதிகளால் கடத்திச் சிறையிடப்பட்டுள்ள ''சுடர்ஒளி'' என்ற பத்திரிகையின் ஆசிரியர் வித்யாதரன்.



இந்தக் கடத்தல் பற்றி வித்யாதரனது உறவினர் ஒருவர் கூறும் போது, கடத்தலில் போலீசார் உதவியது பற்றி சர்வதேச ஊடகங்களில் தாங்கள் மட்டும் அம்பலப்படுத்தாமல் இருந்திருந்தால் வித்யாதரனும், மற்ற பத்திரிகையாளர்


படிப்பகம்

www.padippakam.com

களைப் போல கொல்லப்பட்டிருப்பார் என்றார். வித்யாதரனைக் கடத்திய உடனே அவரது கண்களைக் கட்டிக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. தற்போது விடுதலைப் புலிகளுக்கு உதவியதாகக் கூறி அவரைச் சிறையிலடைத்துள்ளனர். இதே ''சுடர் ஒளி'' பத்திரிகையின் ஊழியர்கள் ஆறு பேர் இதற்கு முன்பு கடத்திக் கொல்லப்பட்டுள்ளனர்.

பத்திரிகையாளர்கள் மீது தொடுக்கப்படும் இத்தகைய தாக்குதல்கள் குறித்து பல்வேறு தரப்புகளிலிருந்தும் இலங்கை அரசுக்குக் கண்டனங்கள் வந்துள்ள போதும், இது குறித்து வழக்குப் பதிவோ விசாரணையோ நடத்தப்படவில்லை. பத்திரிகையாளர்களைக் கொன்றதாக ஒரு குற்றவாளி கூட இதுவரைக் கைது செய்யப்படவில்லை.




**பத்திரிகைகள், செய்தி ஊடகங்கள் மீதான ராஜபக்சே அரசின் பயங்கரவாத அடக்குமுறையை எதிர்த்து கொழும்புவில் நடந்த ஆர்ப்பாட்டம்.**

பத்திரிகைகள் மட்டுமல்ல, மக்கள் தொலைக்காட்சி, சன் தொலைக்காட்சி போன்ற தமிழ்த் தொலைக்காட்சிகள் அங்கு தடை செய்யப்பட்டுள்ளன. நக்கீரன் உள்ளிட்ட வார இதழ்கள் தடை செய்யப்பட்டுள்ளன, ஆனந்த விகடன் பத்திரிக்கையின் விநியோகஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார், மேலும் யாழ்ப்பாணத்திலிருந்த பி.பி.சி. நிறுவனத்தின் செய்தியாளர்களை உடனே வெளியேறும்படி அரசு உத்தரவிட்டுள்ளது, சி.என்.என். போன்ற வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களுக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. தெரிந்தோ தெரியாமலேயோ இன அழிப்புப் போரை இந்தப் பத்திரிகைகள் அம்பலப்படுத்தி விடுவதுதான் இவ்வளவு தடைகளுக்கும் கைதுகளுக்கும் காரணம்.

இவ்வாறு பல பத்திரிகைகளும், அதன் ஆசிரியர்களும் இலங்கை அரசைக் கண்டித்து அடக்குமுறையைச் சந்தித்து வரும் வேளையில், சிங்கள வெறி பிடித்த அரசை ஆதரித்து, இலங்கைக்கு வெளியிலிருந்து எழுதுகிற பத்திரிக்கை ஒன்று உண்டென்றால், அது ''இந்து'' பத்திரிக்கை மட்டும்தான்!

**முன்னாள் இலங்கை அதிபர் சந்திரிகாவிடமிருந்து நவ. 14, 2005-இல் ''லங்கா ரத்னா'' விருது பெறும் ''இந்து'' நாளேட்டின் ஆசிரியர் என் ராம்: நவீன கோயபல்சு.**



இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படும்போது ''இலங்கையில் நடப்பது இன அழிப்புப் போரல்ல; அது இலங்கை ராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடக்கும் சண்டை'' என்று அது பிரச்சாரம் செய்து வருகிறது. இந்தச் சண்டையில் தமிழர்கள் நடுவில் சிக்கிக் கொள்கின்றனர் என்றும், இதற்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்றும் கூறிவருகிறது. இந்த ஈனப் பிழைப்புக்குத்தான் அதன் ஆசிரியர் ராமுக்கு இலங்கை அரசு ''லங்கா ரத்னா'' விருது வழங்கிக் கவுரவித்துள்ளது.

ராமின் இந்த ஈனத்தனத்தைக் கண்டித்துதான் கடந்த ஆண்டு பெரியார் தி.க.வினரும் தமிழினவாதிகளும் ''இந்து'' பத்திரிக்கையைக் கொளுத்தினர். தனது பத்திரிக்கை கொளுத்தப்பட்ட போதும் அண்மையில் சு.சாமி மீது முட்டையடிபட்ட போதும் கருத்துச் சுதந்திரம் பறிபோய்விட்டதாக ஒப்பாரி வைத்த இதே ''இந்து'' பத்திரிக்கை, இலங்கையில் சக பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்படும்போது மட்டும் வாய் மூடி மவுனமாகிவிட்டது. இந்திய அரசும், இந்து ராம் போன்ற ஊடகத் தரகர்களும் கொடுக்கும் தைரியத்தில்தான், இலங்கைத் தூதுவர் அம்சா, நக்கீரன் பத்திரிகையை மிரட்டத் துணிகிறார்.

இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட லசாந்தாவும் ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர்தான். இலங்கை அதிபர் மகிந்தா ராஜபக்சேவைப் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நெருங்கிய நண்பர். அவர் நினைத்திருந்தால், ராஜபக்சேவுக்குத் துணை போயிருக்கலாம்; ''லங்கா ரத்னா'' விருதென்ன, அதைவிடப் பெரிய விருதுகளெல்லாம் வாங்கியிருக்கலாம்; கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்திருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. விருதுகளை நக்கிப் பிழைப்பதைவிட, உண்மையை எழுதி உயிர் விடுவது மேல் என்று அவர் எண்ணியதால்தான், கொல்லப்படுவோம் எனத் தெரிந்தும், துணிந்து அரசுக்கெதிராக எழுதினார்.

தனது பாசிசத்தை எதிர்த்த லசாந்தாவுக்குத் துப்பாக்கித் தோட்டாக்களைப் பரிசளித்த அதே இலங்கை அரசு, தனக்கு வாலைக் குழைக்கும் இந்து ராமுக்கு பட்டங்களை வாரிக் கொடுக்கிறது.

இட்லருக்கு ஒரு கோயபல்சு! ராஜபக்சேவுக்கு ஒரு ''இந்து'' ராம்!

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# வங்கதேசத் துணை இராணுவக் கலகமும் இந்தியாவைச் சூழ்ந்துள்ள பேரபாயமும்

அண்டை நாடான வங்கதேசத்தில் கடந்த பிப்ரவரி 25-ஆம் நாளன்று துணை இராணுவப் படையினர் நடத்திய கலகமும், இராணுவ உயரதிகாரிகள் — அவர்களது குடும்பத்தாரோடு சேர்த்து கொல்லப்பட்டிருப்பதும் இந்திய துணைக் கண்டத்து நாடுகளில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஷேக் ஹசீனா ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களே ஆகியுள்ள நிலையில், இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கான சதித் திட்டத்தோடு நடந்துள்ள இக்கலகமும் படுகொலைகளும் தற்போதைக்கு முடிவுக்கு வந்துள்ளபோதிலும், அது மீண்டும் நடப்பதற்கான அபாயம் அந்நாட்டைக் கவ்வியுள்ளது.

வங்கதேசத் தலைநகரான டாக்காவில் உள்ள பில்கானா பகுதியில் பங்களாதேஷ் ரைபிள்ஸ் (BDR) எனும் துணை இராணுவப் படையின் தலைமையகம் அமைந்துள்ளது. கடந்த பிப்ரவரி 25-ஆம் நாளன்று அங்கு அப்படையின் ஆண்டு விழாக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, அந்த அரங்கைச் சுற்றி வளைத்த சிப்பாய்கள், அப்படையின் தலைமை இயக்குனரான ஷகீல் அகமதுவை - விழாவுக்கு விருந்தினராக வந்திருந்த அவரது மனைவியோடு சேர்த்து சுட்டுக் கொன்றனர். இவர்கள் தவிர, மேஜர் ஜெனரல், பிரிகேடியர் ஜெனரல் பதவி வகித்த பல உயர் ராணுவ அதிகாரிகளை அவர்களது குடும்பத்தாரோடு சேர்த்து ஏறத்தாழ 140 பேரைச் சுட்டுக் கொன்று, பிணங்களைப் பாதாள சாக்கடையில் தள்ளியும் பெரிய குழி வெட்டிப் புதைத்தும், அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.


இத்துணை இராணுவப் படை, இராணுவ அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் அல்லாமல், உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், இராணுவ அதிகாரிகளே பொறுப்பேற்று இப்படையை இயக்குகின்றனர். இராணுவப் படையினருக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள், சலுகைகள் முதலானவை இத்துணைப் படைக்கு அளிக்கப்படுவதில்லை. மேலும் இராணுவ அதிகாரிகளின் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளால் இத்துணைப் படையினர் சிப்பாய்கள் குமுறிக் கொண்டிருந்தனர். இவர்களின் அதிருப்தியைக் கிளறிவிட்டு, பிற்போக்குக் கும்பல்கள் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்த முயற்சித்துள்ளன.

•••

இன்றைய வங்கதேச நாடு, அன்று பாகிஸ்தானின் ஒரு மாநிலமாக ''கிழக்கு பாகிஸ்தான்'' என்றழைக்கப்பட்டது. பாகிஸ்தானின் ஆதிக்கத்துக்கு எதிராக கிழக்கு பாகிஸ்தான் மக்களின் போராட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, பாசிச இந்திரா ஆட்சிக் காலத்தில் இந்திய அரசு தலையிட்டு, போராட்டத் தலைவரான ஷேக் முஜிபுர் ரஹ்மானை தனது விசுவாசியாக்கிக் கொண்டு, விடுதலைப் படை என்ற பெயரால் இந்திய இராணுவத்தை அனுப்பி ''வங்கதேசம்'' என்ற புதிய பெயரிலான நாட்டை 1971-இல் உருவாக்கியது. இந்திய விசுவாசியான ஷேக் முஜிபுர் ரஹ்மான் அந்நாட்டின் அதிபரானார். மிகக் குறுகிய காலத்திற்குள் பாக். விசுவாச இராணுவக் கும்பல், இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளின் துணையோடு இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி, அதிபர் ஷேக் முஜிபுர் ரஹ்மானைச் சுட்டுக் கொன்று இராணுவ சர்வாதிகார ஆட்சியை நிறுவின. அடுத்தடுத்து அந்நாட்டில் பல முறை இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்து, இராணுவ சர்வாதிகார ஆட்சியே தொடர்ந்து நீடித்து வந்தது.

இராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிரான வங்கதேச மக்களின் போராட்டங்களுக்குப் பின்னர், நாடாளுமன்ற போலி ஜனநாயகம் அந்நாட்டில் மெதுவாகக் காலூன்றத் தொடங்கியது. எனினும், ஜனநாயக சக்திகள் வலுப் பெறாததால், இராணுவக் கும்பலும் இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளுமே ஆதிக்கம் செலுத்தி வந்தன. இக்கும்பல்களுக்கு இணக்கமாகவே நாடாளுமன்ற ஆட்சிகளும் செயல்பட்டன. சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ சர்வாதிகாரி ஜியா உர் ரஹ்மானின் மனைவியாகிய கலீதாஜியா, சுட்டுக் கொல்லப்பட்ட அதிபர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மகளான ஷேக் ஹசீனா ஆகியோர் தலைமையிலான நாடாளுமன்ற போலி ஜனநாயக ஆட்சிகளால் இக்கும்பலை பகைத்துக் கொள்ள முடியவில்லை. இதில் முன்னாள் பிரதமரான கலீதா ஜியாவின் வங்கதேச தேசியக் கட்சி, இஸ்லாமிய அடிப்படைவாத ஜமாத்-இ-இஸ்லாமி கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துதான் ஆட்சி செய்தது. கலீதா ஜியாவின் எதிர்த்தரப்பான

**வங்கதேச இராணுவ-இஸ்லாமிய அடிப்படைவாதக் கும்பலின் பயங்கரம்: சுட்டுக் கொல்லப்பட்டு பெருங்குழியில் புதைக்கப்பட்ட இராணுவ உயரதிகாரிகளின் உடல்களைத் தோண்டியெடுக்கும் போலீசும் தீயணைப்புப் படையும்.**






படிப்பகம்

www.padippakam.com

ஷேக் ஹசீனா, நடந்து முடிந்த தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்துள்ளார்.

1971-இல் பாகிஸ்தானின் ஆதிக்கத்துக்கு எதிராக நடந்த வங்கதேச விடுதலைப் போரின் போது, பாகிஸ்தானுக்கு ஆதரவாக நின்று, போராடிய மக்களை மிருகத்தனமாக ஒடுக்கி போர்க் குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் இராணுவ கும்பல்கள் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மீது விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டும் என்பது வங்கதேச மக்களின் நீண்டகாலக் கோரிக்கை. அக்கோரிக்கையை முன்வைத்துப் பிரச்சாரம் செய்து தேர்தலில் வெற்றி பெற்று இப்போது ஆட்சிக்கு வந்துள்ள ஷேக் ஹசீனா, 1971-இல் நடந்த விடுதலைப் போரின்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக நின்று போர்க்குற்றங்களில் ஈடுபட்டோர் மீது விசாரணை நடத்தப்படும் என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.



**துணை இராணுவப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு வீசியெறியப்பட்ட இராணுவ உயரதிகாரிகளின் உடல்கள்: இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புச் சதியின் கோரம்.**

அவ்வாறு விசாரணை நடத்தப்பட்டால், இராணுவக் கும்பல் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளின் ஆதிக்கத்துக்கு பேரிடியாக அமையும் என்பதால், இச்சக்திகள் ஆத்திரமடைந்தன. மறுபுறம், இத்தகைய விசாரணை நடத்தப்பட்டால் பாகிஸ்தானின் போர்க்குற்றங்கள் உலக அரங்கில் அம்பலமாவதோடு, பாகிஸ்தானிலும் இராணுவ-மத அடிப்படைவாதச் சக்திகளுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் வெடித்தெழும் என்பதால், பாக். அதிபர் சர்தாரி, கடந்த பிப்ரவரியில் இந்த விசாரணையை நிறுத்தி வைக்குமாறு ஷேக் ஹசீனாவிடம் தெரிவித்தார்.

இன்னொருபுறம், பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ., வங்கதேச இராணுவ-மத அடிப்படைவாதக் கும்பல்களுடன் இரகசியமாகத் தொடர்பு கொண்டு, இந்திய விசுவாசியான ஷேக் ஹசீனாவைச் சுட்டுக் கொன்று இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தும் சதித் திட்டத்தில் இறங்கியது. வங்கதேச துணை இராணுவப் படை சிப்பாய்களிடம் நிலவும் அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்ட இக்கும்பல்கள், அவர்களைத் தூண்டி ஹசீனா ஆதரவு இராணுவ உயரதிகாரிகளையும் ஹசீனாவையும் கொன்று, இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தத் திட்டமிட்டன. அத்திட்டப்படி துணை இராணுவப்படை சிப்பாய்கள் உயரதிகாரிகளைச் சுட்டுக் கொன்றபோதிலும், சதிகார கும்பல்களுக்கிடையே ஒருங்கிணைப்பில் ஏற்பட்ட குளறுபடிகளால் இத்திட்டம் தோல்வியடைந்து விட்டது.

கிரிமினல் மாஃபியா கூட்டாளியும், கப்பல் அதிபரும் கலீதா ஜியா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சலாவுதீன் சவுத்திரி என்பவர் ஏறத்தாழ ரூ. 30 கோடி ரூபாய்களை இராணுவக் கும்பல்களிடம் கொடுத்ததாகவும், அவர்கள் கலகத்தில் இறங்குமாறு துணைப்படை சிப்பாய்களுக்கு இத்தொகையைப் பிரித்துக் கொடுத்ததாகவும், ஜமாத்-இ-இஸ்லாமி கட்சியின் முக்கியத் தலைவர் ஒருவர் பாக். உளவாளிகளுடன் இரகசியப் பேச்சு வார்த்தை நடத்தினார் என்றும் செய்திகள் மெதுவாகக் கசிந்துள்ளன. துணை இராணுவப் படையினர் இராணுவ உயரதிகாரிகளைச் சுட்டுக் கொன்றதையடுத்து, ஹசீனாவை வங்கதேசத்திலிருந்து மீட்டுவர இந்திய அரசு தயார் நிலையில் இராணுவப்படை விமானங்களை ஏற்பாடு செய்து, ஹசீனாவுக்குச் செய்தி அனுப்பியது. இருப்பினும் இராணுவ-மத அடிப்படைவாதச் சக்திகளின் சதித் திட்டம் தோல்வியடைந்து அம்பலமானதால், அவை தற்காலிகமாகப் பின்வாங்கி விட்டன. நிலைமை கட்டுக்குள் வந்து விட்டதாக ஹசீனாவும் அறிவித்துள்ளார்.

**இந்தியாவின் விசுவாசியும் வங்கதேசப் பிரதமருமான ஷேக் ஹசீனா.**



மேற்கே ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் அண்மையில் இஸ்லாமிய அடிப்படைவாத தாலிபான்களின் எதிர்த்தாக்குதல்கள் அதிகரித்துள்ள அதேசமயம், அவற்றுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ள வங்கதேச இராணுவ-இஸ்லாமிய அடிப்படைவாத பிற்போக்குக் கும்பல்களும் ஆட்சிக் கவிழ்ப்புச் சதிகளில் இறங்கியுள்ளன. தற்காலிகமாகப் பின்வாங்கியுள்ள இக்கும்பல்கள், மீண்டும் அதிகாரத்துக்கு வந்துவிட்டால் பெயரளவுக்கான ஜனநாயகமும் பறிக்கப்பட்டு அந்நாட்டு மக்கள் மீது மத அடிப்படைவாத காட்டுமிராண்டித்தனமும் ஒடுக்குமுறையும் ஏவிவிடப்படும். இக்கும்பல்கள் தாலிபான்களுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ளதைக் காட்டி, பயங்கரவாத பீதியூட்டி அமெரிக்கா ஆக்கிரமிப்புத் தாக்குதல் நடத்த முற்படும். அதற்கு தெற்காசிய அடியாளான இந்திய அரசு விசுவாசமாகச் சேவை செய்யக் கிளம்பும். இவற்றைக் காட்டி இந்தியாவிலுள்ள இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் பயங்கரவாதச் சதிகளில் ஈடுபடுமாறு தூண்டப்படும். இப்பயங்கரவாத நடவடிக்கைகளைக் காட்டி இந்திய நாட்டு மக்கள் மீது அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படும். இந்தியாவிலும் வங்கதேசத்திலுமுள்ள புரட்சிகர-ஜனநாயக சக்திகள் ஐக்கியப்பட்டு, இஸ்லாமிய அடிப்படைவாத பிற்போக்கு கும்பலையும் இந்திய-அமெரிக்க மேலாதிக்க வெறியர்களையும் தனிமைப்படுத்தி முறியடிக்கும் போராட்டங்களை முன்னெடுக்காவிட்டால், இந்நாடுகளைச் சூழ்ந்துள்ள பாசிச பயங்கரவாத இருளை அகற்றவே முடியாமல் போய்விடும்.

● மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

# திரவியம் தேடிப் போனவர்களின் துயரக் கதை!

## துபாயில் வேலை பார்க்கும் ஏழை நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் கொத்தடிமைகளைவிடக் கீழாக நடத்தப்படுகின்றனர்.

கொளுத்தியெடுக்கும் கடுமையான வெய்யிலில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கூடி நிற்கின்றனர். சாப்பாட்டுக்குக் கூடப் போதாத தங்களது சம்பளத்தை உயர்த்தக் கோரியும், தாங்கள் அடிமைகளை விடக் கேவலமாக நடத்தப்படுவதை எதிர்த்தும் அவர்களது போராட்டம் தொடங்குகிறது. போராட்டத்தை ஒடுக்கக் கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. இராணுவம் வரவழைக்கப்பட்டுத் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகிறது. ஹெலிகாப்டரிலிருந்து கண்ணீர்ப் புகைகுண்டுகள் வீசப்படுகின்றன. கைது செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு 6 மாத சிறைத் தண்டனை. முன்னணியாளர்கள் நாட்டைவிட்டே வெளியேற்றப்படுகின்றனர்.

பல்லாயிரம் தமிழர்களின் கனவு தேசமாக இருக்கும் ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான துபாயில்தான் இவையனைத்தும் நடைபெற்றன. அங்கே போராடி, சிறை சென்ற தொழிலாளர்களில் பலர் தமிழர்கள். துபாயில் வேலை என்பதை மக்கள் மிகவும் பெருமையாகக் கருதுகின்றனர். அதனால்தான் துபாய்க்கு அனுப்புவதாகச் சொல்பவர்களிடம், பணம் கொடுத்து ஏமாறுபவர்கள் இன்னமும் தமிழகத்தில் இருக்கின்றனர்.

துபாயின் ஜொலிக்கும் ஆடம்பர மாளிகைகளுக்குப் பின்னால் பல லட்சம் தொழிலாளர்களின் அயராத உழைப்பு இருக்கிறது. தங்களது இரத்தத்தை வியர்வையாய்ச் சிந்தி, அந்தப் பாலைவன தேசத்தைச் சொர்க்க பூமியாக மாற்றிவரும் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. நாள் முழுவதும் நகரத்தில் கடுமையாக வேலை செய்யும் அவர்கள், அந்நகரத்தில் தங்குவதற்கு அனுமதியில்லை. நகரத்துக்கு வெளியே பாலைவனத்துக்கு அருகேயுள்ள தொழிலாளர் குடியிருப்பில், ஒரே அறையில் பத்து, பன்னிரெண்டு பேர்வரை ஆட்டு மந்தைகளைப் போல அடைக்கப்படுகின்றனர்.

துபாயில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டம்.



அதிகாலை எழுந்து சமைத்துவிட்டு வேலைக்குச் சென்றால், வேலையிலிருந்து திரும்ப நள்ளிரவாகிவிடும். வேலைப் பளுவோ மிகவும் அதிகம். வேலை செய்யும் இடத்துக்கு சென்றுவர போக்குவரத்து வசதியில்லை. அதற்கென அவர்கள் இரண்டு, மூன்று மணி நேரம் காத்திருக்க வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டும் அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளமோ மாதத்திற்கு இந்திய ரூபாயில் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரைதான். பல லட்சங்கள் கடன் வாங்கி அங்கு செல்லும் தொழிலாளர்கள் அந்தச் சம்பளத்தைக் கொண்டு வாங்கிய கடனைக் கூட அடைக்க முடியாது.

குறைந்த பட்சம் நான்கு ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை வேலை செய்தால்தான் ஓரளவுக்காவது சம்பாதிக்க முடியும் என்ற நிலையில், தொழிலாளர்கள் தங்களது குடும்பத்தை அங்கு அழைத்துச் செல்லவும் முடியாது. அப்படிச் செய்யவேண்டுமானால் அவர்கள் 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கவேண்டும். இதனால், வெறும் 5 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் தொழிலாளி ஆண்டுக்கணக்கில் குடும்பத்தைப் பிரிந்து வாழவேண்டும். திருமணமான சில மாதங்களில் குடும்பத்தைப் பிரிந்து போய், குழந்தை வளர்ந்த பிறகு வருபவர்களும் உண்டு.

தங்களது நிலைபற்றி ஒரு இந்தியத் தொழிலாளி கூறும்போது, ''நாங்கள் துபாய்க்கு வருவதற்கு முன்னர் பல கனவுகளோடு வந்தோம். ஆனால் இங்கு எங்களுக்கு வாழ்க்கையே இல்லையென்று இங்கு வந்த பிறகுதான் தெரிந்தது'' எனத் தொழிலாளர்களின் குமுறலை வெளிப்படுத்தினார். இன்னொருவரோ, ''சூப்பர்வைசர் வேலை எனக் கூறினார்கள்; அதனால் ஊரில் வளர்த்து வந்த ஆடு-மாடுகளை விற்று, நிலத்தை அடமானம் வைத்துவிட்டு வந்தேன்; ஆனால் இங்கு வந்தவுடன் ஒட்டகம் மேய்க்க விட்டுவிட்டார்கள்'' என்று வருந்துகிறார். துபாய்க்கு வந்தவுடன், தொழிலாளர்களின் கடவுச் சீட்டை (பாஸ்போர்ட்டு) நிறுவனத்தினர் பிடுங்கிவைத்துக் கொள்கின்றனர். இதன்மூலம் நிறுவனத்தினர் சொல்லுக்குத் தொழிலாளர்கள் கட்டுப்படவேண்டியிருக்கிறது. 8 மணிநேர வேலை, மாதத்திற்கு இரண்டு முறை மட்டுமே ஓவர்டைம் என்று கூறப்பட்டாலும், உண்மையில் 18 மணி நேரம் வரை உழைக்க வேண்டியிருக்கிறது.


இவற்றையெல்லாம் பொறுத்துப் பார்த்தும் பலனில்லாததால், தொழிலாளர்கள் ஒன்றுகூடிப் போராட ஆரம்பித்தனர். கடந்த நவம்பரில் துபாயின் மிகப்பெரிய கட்டிட நிறுவனமான ''அராப் டெக்''கின் 40,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இந்தியர், பாகிஸ்தானியர் என்ற தேச முரண்பாடுகளைக் கடந்து, இந்து, முஸ்லீம் என்ற மதப்பிரிவினைகளைக் கடந்து, தொழிலாளி என்ற உணர்வில் ஒன்று சேர்ந்து அவர்கள் நடத்திய போராட்டம் உலகின் கவனத்தையும் ஈர்த்தது.


படிப்பகம்

www.padippakam.com

விமான நிலைய விரிவாக்கத் திட்டத்தின் போது 3 தொழிலாளர்கள் இறந்ததையடுத்து தொழிலாளர்களின் போராட்டம் தொடங்கியது. இதே போல குவைத்திலும் தொழிலாளர் போராட்டங்கள் வெடித்தன. கடுமையான பாலைவன வெய்யிலில் தொழிலாளர்களை 12 மணி நேரம் வேலை வாங்குவது, பாதுகாப்புக் கருவிகள் எதுவும் தராமல் ஆபத்தான வேலைகளைச் செய்யச் சொல்வது, குறைவான கூலி ஆகியவற்றை எதிர்த்துத் தொழிலாளர்கள் போராடினர்.

போராடிய தொழிலாளர்கள் கைது செய்து சிறையிலடைக்கப்பட்டனர். கசையடி பெற்றனர். முன்னணியாளர்கள் தாக்கப்பட்டனர். போலீசும் இராணுவமும் வரவழைக்கப்பட்டு போராட்டங்கள் கடுமையாக நசுக்கப்பட்டன. தொழிலாளர்கள் பாதிக்கப்படும்போது வாய்மூடி மவுனமாக இருந்த இந்தியத் தூதரகம், தொழிலாளர் போராட்டம் வெடித்தவுடன் அதனைத் திசை திருப்பும் விதமாக, குறைந்தபட்ச கூலி என்ற கருத்தை மட்டும் முன்வைத்தது.



**இனி எதிர்காலம் என்னவாகும்? அடக்குமுறைச் சட்டத்தை எதிர்கொள்வது எப்படி? — இடைவேளை ஓய்வில் கலந்தாலோசிக்கும் இந்திய-பாகிஸ்தானிய தொழிலாளர்கள்.**

இந்த போராட்டத்தினால் உருவான நெருக்கடியினை சமாளிக்க துபாய் அரசாங்கம் தொழிலாளர் நலச்சட்டம் என்ற பெயரில், தொழிலாளர் நலனுக்கே எதிரான ஒரு சட்டத்தை கொண்டு வந்தது. இச்சட்டம் வேலை நிறுத்தத்தை தடை செய்வதோடு, அதில் ஈடுபடுபவர்களையும் கடுமையாக தண்டிக்க வழிவகை செய்கிறது. உழைக்கும் பெண்களுக்கு எதிரான விதிகளை இச்சட்டம் கொண்டுள்ளது. ஐக்கிய அரபு கூட்டாட்சியில் மட்டும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைச் சேர்ந்த அறுபதாயிரத்துக்கும் அதிகமான பெண்கள் வீட்டு வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கான அடிப்படை உரிமையைக் கூட இந்தச் சட்டம் வழங்க மறுக்கிறது.

உலகமயமாக்கலின் பெயரில் தேசம் கடந்து பன்னாட்டு நிதி மூலதனங்கள் துபாயில் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளன. அவற்றைக்கொண்டு பாலைவனத்துக்கு நடுவே மிகப் பெரிய நகரங்களை உருவாக்குவது, உலகிலேயே மிகவும் உயரமான கட்டிடங்களைக் கட்டுவது, கடலுக்கு நடுவில் ஈச்சமர வடிவிலான ஓட்டல்களைக் கட்டுவது என ஒரு மாய உலகைக் கட்டியமைக்கும் பணியில் ஏகாதிபத்தியங்கள் ஈடுபட்டுள்ளன. அதற்கு தெற்காசிய கூலித்தொழிலாளிகளின் அடிமை உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கின்றனர். ஐரோப்பிய நகரங்களுக்கு இணையான தரத்தில், அதே சமயம் மிகவும் மலிவான கூலியில் நகரங்களை உருவாக்க முடிகிறது என்பதால், உலக முதலாளிகள் துபாயில் முதலீடு செய்ய போட்டி போடுகின்றனர். இப்படி மூலதனம் பல்கிப் பெருக, தங்கு தடையற்ற சுதந்திரம் வழங்கியுள்ள ஏகாதிபத்தியங்கள், தொழிலாளர்களது சுதந்திரத்தை மட்டும் கிள்ளுக்கீரையாக்கியுள்ளன.

**சுற்றுலா பயணிகளைக் கவருவதற்காக குளிர் சாதன வசதி செய்யப்படவுள்ள துபாய் கடற்கரை: அருவெறுக்கத்தக்கப் பணக் கொழுப்பு.**



அண்மைக்கால ஏகாதிபத்திய பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு அரபு நாடுகளில் தொழிலாளர்களின் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. விலைவாசி கடுமையாக உயர்ந்திருக்கின்ற நிலையில், பெறுகின்ற சம்பளத்தில் பாதிக்கும் மேற்பட்ட தொகையை உணவுக்கே செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடன் வாங்கி துபாய் சென்று வேலைக்கு சேர்ந்தவர்கள், அந்தக் கடனை எப்படி அடைப்பது எனத் தெரியாமல் பரிதவிக்கின்றனர். விட்டால் போதும் என்று சொந்த நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். கடந்த மூன்று மாதத்தில் மட்டும் பல்லாயிரக்கணக்கான பேர் வரை இந்தியாவுக்கு திரும்ப விமானச் சீட்டுக்குப் பதிவு செய்துள்ளனர்.

மலிவான கூலி கொடுத்து தொழிலாளர்களை சுரண்டி வரும் அரபு நிறுவனங்களோ தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதாக இல்லை. ''இரும்பு, கற்கள், சிமெண்ட்டு என அனைத்துக் கட்டுமானப் பொருட்களின் விலையும் அதிகரித்து விட்டது. ஆனால், தொழிலாளர்களின் விலை மட்டும் அப்படியே மலிவாக இருப்பதுதான் எங்களுக்கு சவுகரியமாக இருக்கிறது'' என்று அங்கிருக்கும் ஒரு நிறுவனத்தின் அதிகாரி கூறுகிறார்.

இந்திய தொழிலாளர்களை கரும்புத் தோட்டங்களில் கசக்கி பிழிந்து, தன்னை வளப்படுத்திக் கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போன்று, தெற்காசிய நாட்டு தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருக்கிறது துபாய். துபாயின் உயர்ந்து நிற்கும் மாளிகைகளுக்கு பின்னால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் துயரம் தோய்ந்த வாழ்க்கை அடங்கியிருக்கிறது. இத்துயரங்களும் குமுறல்களும் எரிமலையாக வெடிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

● மதி


படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.எம்.க்குள் ஒளிந்திருக்கும் மோடியின் ரசிகர்கள்

இந்துவெறி பாசிச பயங்கரவாத மோடிக்கு புதிய ஆதரவாளர் கிடைத்திருக்கிறார். தொழில் வளர்ச்சியைச் சாதிக்க, மோடியை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் உபதேசித்திருக்கிறார். இவர் இந்துவெறி பா.ஜ.க.வைச் சேர்ந்தவரல்ல; மோடியின் தாராள சலுகைகளால் ஆதாயமடைந்த தரகுப் பெருமுதலாளியுமல்ல. மதச்சார்பின்மை, வகுப்புவாத எதிர்ப்பு என்றெல்லாம் வாய்ச்சவடால் அடிக்கும் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர்தான் இவர். கேரளாவின் கண்ணனூர் தொகுதியிலிருந்து சி.பி.எம்.கட்சி சார்பில் தொடர்ந்து இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருவாளர் அப்துல்லா குட்டி என்பவர்தான், மோடிக்குக் கிடைத்துள்ள இப்புதிய ஆதரவாளர்.

கடந்த ஜனவரியில் துபாயில், இந்தியா ஊடக அரங்கம் என்ற அமைப்பின் சார்பில் நடந்த கருத்தரங்கில் பேசிய அப்துல்லா குட்டி, ''தொழில் வளர்ச்சியைச் சாதித்து வரும் குஜராத் முதல்வர் மோடிக்கு முழு மதிப்பெண் தரவேண்டும். தொழில் வளர்ச்சிக்குத் தலைமை தாங்குவதில் அவர் முன்னுதாரணமாகத் திகழ்கிறார். தொழில் முதலீட்டாளர்களுக்கு மிகவும் நம்பகமான - நட்பு ரீதியான முதல்தரமான மாநிலம்தான் குஜராத். ரிலையன்ஸ் நிறுவனம் ரூ. 25,000 கோடி அங்கு முதலீடு செய்ததில் மோடியின் பங்கு முக்கியமானது. மேலும் அவர் டாடாவின் நானோ கார் ஆலையை குறுகிய காலத்தில் நிறுவ திறமையாகச் செயல்பட்டுள்ளார். குஜராத் வழியைக் கேரளமும் பின்பற்ற வேண்டும். அதேசமயம் மோடியின் இந்துத்துவக் கொள்கையை நான் எதிர்க்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சி.பி.எம். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிறப்பால் முஸ்லிமுமாகிய அப்துல்லா குட்டியே இப்படி இந்துவெறி மோடிக்குப் புகழாரம் சூட்டுவதைக் கண்டு வியந்த குஜராத்தின் பா.ஜ.க. மாநிலத் தலைவரான புருசோத்தம் ரூபலா, ''கம்யூனிஸ்டுகளுக்கு இப்போது கண் திறந்துள்ளதை வரவேற்கிறேன். மோடியின் சாதனைகளை கம்யூனிஸ்டுகளும் அங்கீகரிப்பதைப் பாராட்டுகிறேன்'' என்று வெளிப்படையாக அறிவித்தார்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த கேரள சி.பி.எம். கட்சி, அவரிடம் மோடியைத் துதிபாடியதைப் பற்றி விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பியது. அவரோ, ''நான் பேசியதில் எந்தத் தவறும் இல்லை. வளர்ச்சியைச் சாதிக்க கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும் என்று ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடே கூறியுள்ளார். டெல்லியில் ஷீலா தீக்சித்தும், ம.பி.யில் ராமன்சிங்கும் தொடர்ந்து வெற்றி பெற்றதற்கு அவர்கள் தொழில் வளர்ச்சியைச் சாதித்தருப்பதே காரணம்'' என்று விளக்கமளித்ததோடு, ''பாட்டாளி வர்க்க ஆசான் ஸ்டாலின் கூட அமெரிக்கத் திறமையை கட்சி ஊழியர்கள் பின்பற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே!'' என்றெல்லாம் உளறத் தொடங்கினார். கட்சித் தலைமையோ இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, ஓராண்டு காலத்துக்கு கட்சியிலிருந்து அவரை இடைநீக்கம் செய்தது.

கேரளத்தில், நீண்ட காலமாக காங்கிரசின் பிடியிலிருந்த கண்ணனூர் தொகுதியை சி.பி.எம். கட்சியின் கோட்டையாக மாற்றிக் காட்டிய அப்துல்லா குட்டியை, கட்சியில் நிலவும் கோஷ்டிச் சண்டையில் பகடைக் காயாக்கி விட்டது என்றும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க எந்த நியாயமும் இல்லை என்றும் சி.பி.எம் அணிகள் மட்டுமின்றி, முதலாளித்துவப் பத்திரிகைகளும் அங்கலாய்க்கின்றன. உண்மைதான். தொழில் வளர்ச்சியைச் சாதிப்பது; மாநிலத்தை முன்னேற்றுவது என்ற பெயரில் பயங்கரவாத மோடி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும், மே.வங்கத்தின் புத்ததேவ் பட்டாச்சார்யாவும், கேரளத்தின் அச்சுதானந்தனும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா? தனியார்மய-தாராளமயக் கொள்கைகளை விசுவாசமாக நடைமுறைப்படுத்துவதில் மோடி அரசுக்கு இடதுசாரி அரசுகள் சளைத்தவையா? உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளின் சூறையாடலுக்காக சிங்கூரிலும் நந்திகிராமத்திலும் விவசாயிகள் மீது கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டதை மறைக்கத்தான் முடியுமா?

இப்படி தனியார்மய - தாராளமயச் சேவையை தமது கட்சியும் ஆட்சியும் கொள்கையாகக் கொண்டுள்ள நிலையில், அப்துல்லா குட்டி இன்னும் ஒருபடி மேலே சென்று மோடியை விஞ்சும் வகையில், உள்நாட்டு - வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து தொழில் வளர்ச்சியைச் சாதிக்க வேண்டும் என்று பேசிவிட்டார். மோடி பாணியில் அனைத்து ஓட்டுக் கட்சி அரசுகளும் 'இடதுசாரி' அரசுகளும் உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளின் சூறையாடலுக்கு விசுவாசமாகச் சேவை செய்து வரும்போது,


அப்துல்லா குட்டி: இந்துவெறி பயங்கரவாத மோடியின் தொழில் வளர்ச்சியைத் துதிபாடிய 'மார்க்சிஸ்டு' எம்.பி.




படிப்பகம்

www.padippakam.com

மோடியைப் புகழ்ந்த அப்துல்லா குட்டி மீது ஏன் சி.பி.எம். கட்சித் தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும்?




மோடி, நவீன் பட்நாயக், கருணாநிதி, ஷீலா தீக்சித் போல 'இடதுசாரி' அரசுகளும் தனியார்மய - தாராளமயமாக்கலைத் தீவிரப்படுத்தி மாநிலத்தின் 'தொழில் வளர்ச்சியை'ச் சாதிக்கலாம்; ஆனால் இந்துத்துவ மோடியைப் பாராட்டக் கூடாது என்பதுதான் சி.பி.எம். கட்சியின் அறிவிக்கப்படாத கொள்கை. இந்தப் பித்தலாட்டக் கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் அப்துல்லா குட்டி, மோடியை வெளிப்படையாகப் பாராட்டித் தொலைத்து விட்டார். அதுதான் பிரச்சினை.

இப்படி அப்துல்லா குட்டி மீது நடவடிக்கை எடுத்திருப்பதன் மூலம், நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் தாங்கள் இந்துத்துவ எதிர்ப்பில் உறுதியாக இருப்பதுபோல சி.பி.எம். கட்சி காட்டிக் கொள்கிறது. ஆனால், உலகமய எதிர்ப்பு என்ற பெயரில் பா.ஜ.க.வின் தொழிற்சங்கத்தோடு கூட்டு சேர்ந்து அடையாள போராட்டங்கள் நடத்தியதிலிருந்து, இந்துவெறி பாசிச சக்திகளுக்கு அனுசரணையாகவே சி.பி.எம். கட்சி நடந்து கொள்கிறது. மோடியின் பங்காளியும் பார்ப்பன-இந்துவெறியைத் தனது சித்தாந்தமாகக் கொண்டுள்ளவருமான பார்ப்பன-பாசிச ஜெயாவுடன் தேர்தல் கூட்டணி கட்டிக் கொண்டிருக்கிறது சி.பி.எம். கட்சி.

அப்துல்லா குட்டியோ சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறி காங்கிரசில் சேர்ந்து சி.பி.எம்.க்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வருகிறார். அரசியல் - சித்தாந்த உறுதியற்ற இத்தகையோரை வைத்து ஓட்டுப் பொறுக்கி தேர்தல் வெற்றியைச் சாதித்து வந்த சி.பி.எம். கட்சி, இப்போது அவர்களையும் இழந்து, கண்ணனூர் தொகுதியில் மீண்டும் வெற்றிபெற என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்துக் கொண்டிருக்கிறது.

● பச்சையப்பன்


**இப்போது விற்பனையில்...**
**புதிய ஒலி-ஒளிக் குறுந்தகடுகள்**

**தீட்சிதர் ஆதிக்கம் தகர்த்தோம்!**
**தில்லைக் கோயிலை மீட்டோம்!**

பிப்ரவரி 21
**சிதம்பரம் பொதுக்கூட்டம்**
*உரையாற்றியோர்:*
வழக்குரைஞர் ராஜு,
ஒருங்கிணைப்பாளர்,
மனித உரிமைப் பாதுகாப்பு மையம்
தோழர் மருதையன்,
பொதுச்செயலர், ம.க.இ.க.
பேராசிரியர் பெரியார்தாசன்
ஒலிக் குறுந்தகடு (MP 3)
விலை: ரூ.30

வெற்றிப்பேரணி,
பொதுக்கூட்டம்
பிப்ரவரி 21 - சிதம்பரம்
ஒளிக்குறுந்தகடு (DVD)
விலை: ரூ.50

**முதலாளித்துவ பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு**

சென்னை - ஜனவரி 25
*கருத்தரங்க உரைகள்*
தோழர் அ.முகுந்தன்
தோழர் துரை சண்முகம்
வழக்குரைஞர் சி.பாலன்
தோழர் சுப.தங்கராசு
தோழர் பா.விஜயகுமார்
*தொழிலாளிகளின் நேருரைகள்*
பொதுக்கூட்ட உரைகள்
தோழர் வெற்றிவேல் செழியன்,
அமைப்புச்செயலர், பு.ஜ.தொ.மு.
தோழர் சுப.தங்கராசு,
பொதுச்செயலர், பு.ஜ.தொ.மு.
தோழர் மருதையன்,
பொதுச்செயலர், ம.க.இ.க.
ஒலிக் குறுந்தகடு (MP 3)
விலை: ரூ.30

**வழக்குரைஞர் போராட்டத்தை ஆதரிப்போம்!**
**போலீசு இராச்சியத்தை முறியடிப்போம்!**

பொதுக்கூட்டம்
மார்ச் 25, சென்னை
*உரையாற்றியோர்:*
தோழர் முகுந்தன்,
தலைவர், பு.ஜ.தொ.மு.
வழக்குரைஞர் ராஜு,
ஒருங்கிணைப்பாளர்,
மனித உரிமைப் பாதுகாப்பு மையம்.
தோழர் மருதையன்,
பொதுச்செயலர், ம.க.இ.க.
வழக்குரைஞர் சங்கர் சுப்பு,
தலைவர், இந்திய மக்கள் வழக்குரைஞர் கழகம்.
வழக்குரைஞர் திருமலைராசன்,
முன்னாள் செயலர், தமிழ்நாடு-பாண்டிச்சேரி
கீழமைநீதிமன்ற வழக்குரைஞர் சங்கங்களின் கூட்டமைப்பு
ஒலிக்குறுந்தகடு (MP 3)
விலை: ரூ.30

**வெளியிடுவோர்: ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.**

**கிடைக்குமிடங்கள்:**

சீனிவாசன், புதிய கலாச்சாரம்,
எண் 16, முல்லைநகர் வணிக வளாகம்,
அசோக் நகர் 2 வது நிழற்சாலை,
சென்னை - 600 083.
கைபேசி: 9941175876

கீழைக்காற்று நூல் வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை- 600 002.
தொலைபேசி: 044- 28412367

(அஞ்சலில் வேண்டுவோர்க்கு அஞ்சல் செலவு தனி)




படிப்பகம்

www.padippakam.com

## பு.ஜ. மீதான பெரியார் தி.க.வின் விமர்சனம்:

# முரண்பாடுகளின் மூட்டை

**பு.ஜ.வின் விமர்சனங்களுக்குப் பதில் அளிக்க முடியாத பெரியாரிய-தமிழினவாதக் குழுக்கள், அவதூறுகளை அள்ளி வீசுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளன.**

மறைந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் சந்தர்ப்பவாத அரசியலை விமர்சித்து புதிய ஜனநாயகம் இதழ், ''காக்கை குயிலாகாது'' என்ற கட்டுரையைக் கடந்த ஜனவரி இதழில் வெளியிட்டிருந்தது. இட ஒதுக்கீட்டுக்கு மட்டும் இயக்கம் நடத்தும் குழுக்கள் எவையும் இதற்கு மறுப்பு தெரிவிக்க இயலாத நிலையில், பெரியார் தி.க.வின் பத்திரிக்கையான பெரியார் முழக்கம் 'வி.பி. சிங்கை இழிவுபடுத்தும் புதிய ஜனநாயகம்' எனும் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளது.

வி.பி.சிங் பற்றிய பல்வேறு கேள்விகள் எழுவதால் பெ.தி.க. தொண்டர்களைத் திருப்திப்படுத்திடப் பல்வேறு முரண்களோடும் திரிபுகளோடும் அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.


✱ எந்தப் பிரச்சினையிலும் மாற்றுக்கருத்தை வைத்திருப்பவர்களை எல்லாம் பார்ப்பனர் என லென்ஸ் வைத்துத் தேடும் மலினமான மரபு தமிழகத்தில் நிலவுகிறது. நம்மை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள இயலாதபோது ''மறைமுகப் பார்ப்பனியம்'' என அவதூறு செய்வது சில தமிழினவாதக் குழுக்களின் வழக்கம். பெ.தி.க.வும் இதனைச் சுற்றிவளைத்து ''பு.ஜ.வின் பார்ப்பனிய எதிர்ப்பையே சந்தேகிப்பதாக''க் கூறியுள்ளது. வி.பி.சிங்கை விமர்சிப்பதையும், இடஒதுக்கீட்டில் மாற்றுப் பார்வை வைத்திருப்பதையும் மட்டும் வைத்து ஓர் அமைப்பின் பார்ப்பனிய எதிர்ப்பை அளவிடுவதுதான் பகுத்தறிவுப் பார்வையா?

✱ பெரியார்முழக்கம், ''வி.பி.சிங்கின் வாழ்க்கை காங்கிரஸ் அரசியலில் முடங்கிக் கிடந்தபோது, காங்கிரஸ் இழைத்த தவறுகளை எல்லாம் பட்டியலிட்டு அதை வி.பி.சிங் மீது சுமத்தலாமா?'' என்று கேட்டிருக்கிறது.

இந்தக் கட்டுரையை எழுதிய விடுதலை ராசேந்திரனே, வி.பி.சிங்கின் நினைவேந்தல் கூட்டத்தில் ''1969-இல் உ.பி.யில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1971-இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திரா காந்தி அமைச்சரவையில் வர்த்தகத் துறை துணை அமைச்சரானார். ராஜீவ் அவரைத் தொழில் துறை அமைச்சராக்கி, நிதி அமைச்சராக்கினார்'' (பெரியார் முழக்கம் 18/12/2008) என்றெல்லாம் வி.பி.சிங் வகித்த பதவிகளை நினைவுகூர்ந்துள்ளார். எல்லாப் பதவிகளையும் அனுபவித்தவரை 'முடங்கிக் கிடந்தார்' என்று மதிப்பிடுவதே மோசடி இல்லையா?

✱ காங்கிரசு கட்சியால் வி.பி.சிங் அடைந்த புகழையும் பதவிகளையும் பேசலாம். ஆனால் அவர் கடைசிவரை ஆதரித்த அவசரநிலைப் பாசிசத்தை நாம் சுட்டிக் காட்டினால், ''காங்கிரசு செய்த தவறுகளை எல்லாம் அவர்மீது சுமத்தலாமா'' என்று வாதிப்பது, பெ.தி.க.வுக்கும் சமயத்தில் பயன்படக்கூடிய வாதம் தான்.

**பதவிக்காக இந்துவெறியர்களுடன் சமரசமாகப் போன மறைந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங்.**



''தி.க. தலைவர் வீரமணி, ஜெயலலிதா பஜனை பாடிக் கொண்டிருந்தபோது அதனை இன்றைய பெ.தி.க.வினர் ஆதரித்துக் கொண்டு இருந்தார்களே!'' என யாரேனும் சுட்டிக் காட்டினால் தி.க. செய்த தவறுகளை எல்லாம் எங்கள் மீது சுமத்தலாமா? எனக் கேட்டுவிடலாமே!

இந்த வாதத்தை நிரூபிக்கும் வகையில் ராசேந்திரனே, ''ஈழத்தமிழர் பிரச்சினையில் 8 ஆண்டு கால மவுனப் புரட்சி'' (பெ.மு. 08/01/2009) என்றொரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் ''தி.க, 1998-இல் இருந்து 2006 வரை 8 ஆண்டுகளாக ஒரு துரும்பைக்கூட ஈழத்தமிழர் பிரச்சினைக்காக அசைக்கவில்லை'' எனச் சாடி இருந்தார். உண்மையில் ஈழத்தைப் பற்றிப் பேசுவதை தி.க. ராஜீவ் செத்த உடனேயே (1991) நிறுத்தி விட்டது. சுமார் 15 ஆண்டுகள் கழித்து 2006-இல்தான் வாயைத் திறந்தது. 91 முதல் 96 வரை தி.க. தலைமையின் ஈழத் துரோகத்தைத் தாம் ஆதரித்தது கேள்விக்குள்ளாகும் என அஞ்சிய ராசேந்திரன், 15 ஆண்டுகளை 8 ஆண்டுகளாகச் சுருக்கி வரலாற்றையே திருத்தி விட்டார்.


✱ ''காங்கிரஸ் அரசியலில் மூழ்கிக் கொண்டிருக்காமல், அதன் சுயரூபத்தை அறிந்து வெளியேறி, காங்கிரஸ் எதிர்ப்பு அரசியலை தொடங்கியதுதான் வி.பி.சிங்கின் சிறப்பு'' என்று வி.பி.சிங்குக்கு ராசேந்திரன் முட்டுக் கொடுத்திருக்கிறார். ஆனால் இரங்கல் கூட்டத்தில் ''போபார்சு பீரங்கி ஊழலை சிங் அம்பலப்படுத்தியதை அடுத்து 'ராஜீவ் - வி.பி.சிங்கை சந்தித்து, நமக்குள் இடைவெளி விழுந்து விட்டது, இனி இணைந்து செயல்பட முடியாது' என்று கூறியவுடன் வி.பி.சிங் அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார்'' (பெ.மு. 18/12/2008) என்று மட்டும்தான் ராசேந்திரன் சொல்லி இருந்தார். வி.பி.சிங், எந்தக் காலத்திலும் 'காங்கிரசின் பார்ப்பனிய சார்பையும், மண்டல் கமிசனைக் குப்பைக்கு அனுப்பியதையும் - அதாவது காங்கிரசின் சுயரூபத்தை - அறிந்ததால்தான் வெளியேறினேன்' என்று சொன்னது கிடையாது. வி.பி.சிங்கே சொல்லாத விசயம் எல்லாம் ராசேந்திரனுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?

✱ மண்டல் பரிந்துரை ''பார்ப்பன அரசியல் தலைமையையே புரட்டிப் போட்டு பார்ப்பனரல்லாத, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை அணிதிரட்டலுக்கு வழியமைத்த''தாகவும், ''தரகு அதிகார



படிப்பகம்

www.padippakam.com




**''காங்கிரசைத் தேர்தலில் தோற்கடிப்போம்!'' எனும் முழக்கத்துடன் சுவரெழுத்து – பொதுக்கூட்டம் மூலம் பிரச்சாரம் செய்து, பார்ப்பன பாசிச பா.ஜ.க. – அ.தி.மு.க.வுக்கு மறைமுகமாக வாக்களிக்க கோரும் பெரியார் தி.க.வின் பச்சையான சந்தர்ப்பவாதம்.**

வர்க்க முதலாளித்துவ - நிலப் பிரபுத்துவ அரசியலில் இருந்த ஒருவரே அந்த அரசியலில் அதிர்வுகளை நிகழ்த்தியவர்'' என்று வி.பி.சிங்கை மதிப் பிட்டு, அந்த அதிர்வுகளின் தாக்கத்தால் 'சமூக நிலையைக் குலைத்து விட்டாரே' எனப் பார்ப்பனக் கும்பல் புலம்புவ தாகவும் ராசேந்திரன் சொல்கி றார். பார்ப்பன அரசியல் தலை மைகளை அகற்றிவிட்டு முலா யம், லாலு போன்ற புதிய கிரி மினல் தலைமைகள் உருவான தைத் தவிர, வேறு எதனை அந்த அதிர்வு சாதித்தது? ''தனியார்மயம் தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு இடஒதுக்கீடே செல்லாக்காசாகி வரும் சூழலில் மண்டல் அதிர்வு சமூகத்தை தலைகீழாகப் புரட்டியது என்று நம்பச் சொல்லுவது மோசடி'' என நாம் மதிப்பிடுவதும் பார்ப் பனரின் புலம்பலும் ஒன்றாகுமா?

✱ ''அதிகார மையத்தை தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினரை நோக்கித் திருப்பிய ஒரே தலைவர் வி.பி.சிங்'' (பெ.மு. 04/12/2008) என்று மதிப்பிட்டு, வி.பி.சிங் செய்தது புரட்சியோ, மாபெரும் சீர்திருத்தமோ அல்ல என்ப தையும் பெ.முழக்கமே நிறுவியுள்ளது. ஒரு சிலரை அதிகார மையம் நோக்கித் திருப்புவதும், சமூக மாற்றமும் ஒன்றாகு மா? மேலும், மண்டல் அறிக்கை, பிற்படுத்தப்பட்டோர் நலனை மட்டும்தானே பேசியது? இதில் எங்கே தாழ்த்தப்பட்ட-சிறுபான் மையினர் எல்லாம் வருகின்றனர்?

✱ தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் மீது பண்ணை ஆதிக்கம் விதித்திருந்த சாணிப்பால் - சவுக்கடிகளை பொதுவு டைமை இயக்கம்தான் 1940-களிலே ஒழித்துக் கட்டியது. நக் சல்பாரி எழுச்சிக் காலத்திலிருந்தே மா-லெ இயக்கம், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகத் தொடர்ச்சியாக செயல்பட்டு வந்தி ருக்கிறது. பீகாரில் தாழ்த்தப்பட்டோர் மீது தொடர் தாக்குதலை நடத்தி வந்த ஆதிக்க சாதிக் குண்டர் படையான ரண்வீர் சேனையை எதிர்கொள்ள, மா-லெ இயக்கம்தான் மக்கள் போர்ப் படைகளைக் கட்டியது. இவ்வரலாறெல்லாம் தனது அணியினருக்கு எங்கே தெரியப்போகிறது என்று கருதிக் கொண்டு ''அதுவரை பார்ப்பன மேலாதிக்கம், சாதியமைப்பு களைக் கவனத்திலே எடுக்காமல், வர்க்கக் கண்ணோட்டத்தில் 'புதிய ஜனநாயக'ப் புரட்சிகளைப் பேசி வந்த பொதுவுடைமைக் கட்சிகளும் மண்டல் பரிந்துரையின் விளைவாக நெருக்கடிக்கு உள்ளாயின'' என்று ராசேந்திரன் எழுதி இருக்கிறார். மண்டல் கமிசனுக்கும் வி.பி.சிங்குக்கும் முன்பே சாதி ஆதிக்கத்துக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் போராடி வந்துள்ள நிலையில், தனது அணிகளிடமே வரலாற்றைத் திரிப்பதற்கு கம்யூனிஸ்டுகள் மீது அவருக்கிருக்கும் காழ்ப்புணர்ச்சிதானே காரணம்?

✱ மண்டல் பரிந்துரை வந்தபோது புதிய ஜனநாயகம் என்ன நிலைப்பாடு எடுத்தது என்பதை மறைக்கும் நோக்கில் 'அதை நாங்கள் எதிர்க்கவும் இல்லை. ஆதரிக்கவும் இல்லை' என்று பு.ஜ. எழுதியதாக பு.ஜ. கட்டுரையில் இடம்பெற்ற சில வாக்கியங்களை மட்டும் உருவி எடுத்துப் போட்டு பெரியார் முழக்கம் எழுதியுள்ளது. 'கோழி முதலில் வந்ததா? முட்டை முதலில் வந்ததா?' எனக் கேட்கப்படும்போது பகுத்தறிவாளர் கள் என்ன பதில் சொல்வர்? இரண்டில் ஒன்றைச் சொல்லமுடி யாது. பரிணாம வளர்ச்சியின்படியே வந்ததென்றுதான் சொல்ல முடியும். அவ்வாறு சொல்லாமல் ஏதாவது ஒன்றுமட்டுமே பதிலாக இருக்க முடியும் எனக் கருதுவது பகுத்தறிவுதானா? அதேபோல் 'நாங்கள் முன்வைக்கும் இடஒதுக்கீட்டை ஆதரிக்கி றாயா? எதிர்க்கிறாயா? மூன்றாவது ஒன்றெல்லாம் கிடையாது' எனக் கருதுவதும் பகுத்தறிவுதானா?

தங்கள் ஏகபோக உரிமை போய்விடும் எனும் அச்சத்தில் பார்ப்பனக் கும்பல் மண்டலை எதிர்த்தது. இக்கும்பலின் போராட்டத்தை பு.ஜ. எதிர்த்த அதே சமயத்தில், ஆண்ட பரம் பரை என்று தம்மைக் கருதிக் கொண்டு பிற சாதி மக்களைக் கடுமையாக ஒடுக்கும் ஆதிக்க சாதியினரெல்லாம் 'பிற்படுத் தப்பட்டோர்' எனப் பட்டியலிடப்பட்டு இடஒதுக்கீட்டை அனு பவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சொன்னது. மண் டல் ஆதரவு-எதிர்ப்புப் போராட்டங்களை, ஆதிக்க சாதிகளுக் கும் பார்ப்பன கும்பலுக்கும் இடையே ஆதிக்கத்துக்காக நடந்த நாய்ச்சண்டையாகத்தான் பு.ஜ. பார்த்தது.

பு.ஜ.வின் இந்நிலைப்பாட்டை மறைத்து விட்டு, பெரியார் முழக்கம் சில வாக்கியங்களை மட்டும் உருவி எடுத்துப் போட்டு வாதம் செய்வது நேர்மையான செயலா?

✱ ''அருண் ஷோரி, சோ போன்றவர்கள் 'வி.பி.சிங், நாட்டை சாதிவாரியாகக் கூறுபோட்டு விட்டார்' என்று எழுதி யதற்கும் 'சாராம்சத்தில் நாடு ஒரு உள்நாட்டுப்போரில் மூழ்கி விட்டது' என்றெழுதிய பு.ஜ. கட்டுரைக்கும் ஒரே பார்வைதா னுள்ளது'' எனப் பெரியார் முழக்கம் சாதிக்கிறது.

மண்டல் எதிர்ப்புப் போராட்டத்தை பா.ஜ.க., பார்ப்பன சாதிக்கும்பலும், மண்டல் ஆதரவுப் போராட்டத்தை யாதவ்கள் போன்ற ஆதிக்கசாதிக் கும்பலும் தூண்டிவிட்டுக் கொண்டிருந் தபோது, புதிய ஜனநாயகம் எழுதிய ''இரத்த வெள்ளத்தில் இந் தியா'' எனும் கட்டுரையில் ''இப்படிப்பட்ட வெறியாட்டங்கள் இன்னும் பல மடங்கு நடக்க வேண்டும் என்றுதான் இப்போது யாத்திரைகள் போய்க் கொண்டிருக்கும், யாத்திரைகளுக்குத் திட்டமிட்டிருக்கும் சர்வகட்சித் தலைவர்களும் மதத் தலைவர் களும் காத்திருக்கின்றனர்'' என்று எழுதி இருந்தது. (புதிய ஜன நாயகம், நவ.15, அக். 16, 1990) மேலும் மண்டல் கமிசன் எதிர்ப்பு மேல்சாதிக் கலவரத்தில் தாமே தீக்குளித்தனர் என்று காட்டுவதற்காக பலாத்காரமாக கொளுத்தப்பட்ட மாணவ-இளைஞர்கள் பற்றியும் எழுதி இருந்தது. இவையும் சோ, அருண்ஷோரியின் பார்ப்பன வெறிக் கருத்துகளும் ஒன்று தானா?

✱ ''மண்டல் பரிந்துரையை எதிர்த்து நடந்த கலவரத்தை உருவாக்கிய பார்ப்பன சக்திகளைக் கண்டித்து ஒடுக்கப்பட்ட மக்கள் போராடியதாக'' பெ.முழக்கம் எழுதுகிறது. மண்டலை


படிப்பகம்

www.padippakam.com

ஆதரித்துப் போராடிய யாதவ்களும், குர்மிகளும், ஷைலன்வார்களும் தாழ்த்தப்பட்டோரைக் கடுமையாக ஒடுக்குபவர்கள் என்பது ஒருபுறமிருக்க, மண்டல் பரிந்துரையே ஒடுக்கப்பட்டோருக்கானதில்லை. எனவே ஒடுக்கப்பட்ட மக்கள் மண்டல் பரிந்துரையை ஆதரிக்கவில்லை. பார்ப்பனிய, சத்திரிய, வைசிய வழிவந்த சாதிகள்தான் இருபிரிவாகப் பிரிந்து நின்று கலவரம் செய்து மோதிக்கொண்டனர். எனவே ஒடுக்கப்பட்ட மக்கள் போராடியதாகப் பெரியார் முழக்கம் சொல்வதெல்லாம் கற்பனையைத் தவிர வேறில்லை.



ஆர்.எஸ்.எஸ். விசுவாசியான பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு 'உலகப் பெருந்தமிழர்' விருது வழங்கி துதிபாடும் 'மாவீரன்' பழ.நெடுமாறன்: நெடுமாறனின் பிழைப்புவாதத்தை இராசேந்திரனார் கண்டு கொள்ளாதது ஏன்?

★ ''அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மேல்சாதி-மேட்டுக்குடியினரிடையே நடக்கும் சாதிச் சண்டைகளை அம்பலப்படுத்தி முறியடிப்போம்'' என்று பு.ஜ. எழுதியதையும் குற்றச்சாட்டாக பெ.முழக்கம் வைத்திருக்கிறது. அரசின் அதிகாரம் எப்போதுமே உழைக்கும் மக்களுக்கெதிரானது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதால்தான், அரசு ஒடுக்குமுறை எந்திரத்தில் இடஒதுக்கீடு கேட்டு நாம் போராடுவதில்லை. அதேசமயம், பார்ப்பன மேட்டுக்குடி கும்பல் இடஒதுக்கீட்டை எதிர்ப்பதனைக் கடுமையாக எதிர்க்கிறோம். அரசின் அனைத்து ஒடுக்குமுறைக் கருவிகளையும் சாதி ஆதிக்கத்தையும் ஒழித்துக்கட்டி, ஒரு புதிய ஜனநாயக அரசை நிறுவுவதுதான் நமது இலக்கும் கூட. இதில் என்ன குற்றமிருக்கிறது?

★ செல்லும் வழியெங்கும் இரத்தக்களறி ஏற்படுத்திய அத்வானியின் ரத யாத்திரையை வி.பி.சிங் தடுக்கவே இல்லை என்று பு.ஜ.வில் குறிப்பிட்டிருந்தோம் ''பீகாரில் லாலு, அத்வானி யாத்திரையைத் தடுத்து நிறுத்தியது வி.பி. சிங் ஒப்புதல் பெற்றுத்தானே?'' எனப் பெ.முழக்கம். கேள்வியெழுப்புகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் (அத்வானியை) கைது செய்தால் சபாநாயகருக்கு தகவல் தந்தால் மட்டும் போதும் என்பதும், பிரதமருக்கு இதில் சம்பந்தம் ஏதுமில்லை என்பதும் பெ.முழக்கத்துக்குத் தெரியாதா?

★ வி.பி.சிங்கைத் தியாகியாக்குவதற்காக பெ.முழக்கம் செய்திருக்கும் காலவரிசைக் குழப்பமே அதன் தகிடுதத்தங்களை நிரூபித்துக் காட்டுகிறது.

''அத்வானி நடத்திய இரத யாத்திரையை அவர் அனுமதிக்கத் தயாராக இல்லை. அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டை மத்திய அரசுப் பணிகளில் உறுதி செய்யும் மண்டல் பரிந்துரையை ஏற்கும் ஆணையையும் பிறப்பித்தார். பா.ஜ.க.வின் ஆதரவோடு ஆட்சியைத் தக்கவைப்பதைவிட, அதிகாரத்தை சமூகநீதிக்காக இழக்கலாம் என்ற உறுதியான கொள்கை முடிவை எடுத்தார்'' (பெ.மு. 04/12/2008) என்று அது எழுதி இருக்கிறது.

அதாவது, முதலில் வி.பி.சிங் ரத யாத்திரைக்குத் தடைவிதித்தது போலவும், இரண்டாவதாக மண்டல் பரிந்துரை வந்தது போலவும் பெ.முழக்கம் சொல்கிறது. ஆனால், உண்மையில் ஆகஸ்ட் 90-இல் மண்டல் பரிந்துரை வெளிவந்து பலநாட்கள் கழித்துத்தான் ரத யாத்திரையை அத்வானி தொடங்கினார். ''வி.பி. சிங் ரத யாத்திரையை அனுமதிக்கத் தயாராக இல்லை'' எனச் சொல்லும் பெ.முழக்கம்தான் வேறோரிடத்தில் ''பீகாரில் லாலு, அத்வானி யாத்திரையைத் தடுத்து நிறுத்தியது வி.பி.சிங் ஒப்புதல் பெற்றுத்தானே?'' என்றும் கேட்கிறது.

வி.பி.சிங் யாத்திரையை அனுமதிக்கவில்லை என்றால் அது எப்படி நடந்திருக்கும்? நடக்காத யாத்திரையையா லாலு தடுத்தார்? வி.பி.சிங் யாத்திரையைத் தடுக்கவில்லை என்பதுதானே உண்மை. இந்த முரண்பாடே வி.பி.சிங்கின் இந்துமதவெறி சேவைக்கு சாட்சியாகி விடுகிறதே!

மண்டல் கமிசனுக்கும் வி.பி.சிங்குக்கும் முன்பே, சாதி ஆதிக்கத்துக்கு எதிராக பீகாரின் ஜெகனாபாத் மாவட்டத்தில், நக்சல்பாரி புரட்சியாளர்கள் தலைமையில் செங்கொடி ஏந்தி தாழ்த்தப்பட்டோர் நடத்தும் ஆர்ப்பாட்டம். (கோப்புப்படம்).



★ ம.க.இ.க, தனது கட்சித் திட்டத்தில் 'இந்திய மக்களின் அடிப்படை எதிரிகளாக பார்ப்பனர், பார்ப்பனியச் சக்திகள்' என 1998-க்கு முன்பு வரை வைத்திருந்தது போலவும் 1998-இல் திட்டத்தில் இருந்து 'பார்ப்பனியச் சக்திகளை' நீக்கிவிட்டது போலவும் பெரியார் முழக்கம் திரிபுவேலையைச் செய்திருக்கிறது. ''இந்திய மக்கள் மீது மூன்று மலைகளான அமெரிக்கா தலைமையிலான மேல்நிலை வல்லரசுகள், தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம்'' எனும் வரிதான் கட்சித் திட்டத்தில் உள்ளது.

கட்சித் திட்டம் குறிப்பிடும் 'நிலப்பிரபுத்துவத்தை' இந்தியச் சூழலில் 'பார்ப்பனிய சாதி ஒடுக்குமுறை' என விளக்கிக் கட்சி இதழில் வெளியான கட்டுரையில் (1993) ''இந்து



படிப்பகம்

www.padippakam.com

மதத்தின் ஆன்மாவாக இருக்கும் பார்ப்பனியத்தை, சாதிய அடுக்கு முறை மற்றும் ஒடுக்குமுறை அமைப்பை எதிர்த்து நமது போராட்டம் இருக்கும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சி இதழில் வெளியான ஒரு கட்டுரைக்கும், கட்சித் திட்டத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் இரண்டையும் ஒன்றெனக் குழப்பி, அதில் ஏதோ பெரிய கண்டுபிடிப்பு செய்துவிட்டது போல ராசேந்திரன் பெருமைப்படுகிறாரே, அவர் சொல்வது போல 1998-இல் பார்ப்பன சக்திகளை எதிரிப் பட்டியலில் இருந்து நீக்கிவிட்ட(!) ம.க.இ.க. ஏன் 2004-இல் பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டை நடத்தியதாம்? கட்சித் திட்டத்தில் இல்லாத பார்ப்பன எதிர்ப்பை நடைமுறையில் செயல்படுத்திடும் அமைப்பு உள்ளபடியே தீவிர பார்ப்பன எதிர்ப்பு அமைப்பாகத் தானே இருக்கமுடியும்?




**பார்ப்பன-ஆதிக்க சாதிவெறியை எதிர்த்து சமரசமின்றி தொடர்ந்து உறுதியாகப் போராடி வரும் புரட்சிகர அமைப்புகளை அவதூறு செய்வதுதான் புரட்சி பெரியார் முழக்கமா? அல்லது சந்தர்ப்பவாதமா?**

★ பு.ஜ. தோலுரித்த வி.பி.சிங்கின் இந்துமதவெறி ஆதரவுப் போக்குகளுக்கெல்லாம் பதிலேதும் சொல்லாமல் மவுனம் சாதிக்கும் பெ.முழக்கம், ஈழப் பிரச்சினை ஒன்றை மட்டும் முன்னிறுத்தி சி.பி.ஐ., பா.ஜ.க. இரண்டையும் சேர்த்துக் கூட்டணி கட்டிய நெடுமாறன் விசயத்திலும் அதே போக்கைத்தான் கடைப்பிடிக்கிறது. நெடுமாறன், பா.ஜ.க.வுடன் சேர்ந்துகொண்டு ''ஈழத்தில் புத்தமதத்தினர் இந்து மதத்தினரைக் கொல்லுகின்றனர்'' என்று பேசி இனப்பிரச்சினையை மதப்பிரச்சினையாக மாற்ற முயலுவதைக் கண்டிக்காமல் பெ.தி.க. அவரையே மீண்டும் தனது கூட்டங்களுக்கு அழைத்துக் கவுரவிக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். அரை டவுசர் அண்ணாச்சி 'மாவீரன்' பொள்ளாச்சி மகாலிங்கத்தைப் பாராட்டி நெடுமாறன் 'உலகப் பெருந்தமிழர்' எனும் விருது கொடுத்த மாநாட்டில் ஆதித்தமிழர் பேரவையின் நீலவேந்தனும் பெ.தி.க பொதுச்செயலாளர் கோவை ராமகிருஷ்ணனும், மகாலிங்கத்துக்கு விருது கொடுப்பதை விமர்சித்துப் பேசினர். பொங்கி எழுந்த 'மாவீரன்' மேடையிலேயே அவர்களிருவரையும் அவமானப்படுத்திப் பேசியதும், அவர்கள் தொண்டர்களுடன் வெளியேறினர். நெடுமாறனின் இந்த சந்தர்ப்பவாத, பிழைப்புவாத அரசியலை பு.ஜ. கட்டுரையாக வெளியிட்டுத் தோலுரித்திருந்தது. ஆனால் நெடுமாறனின் 'நட்பினால்' தனது பொதுச்செயலாளர் கொடுத்த சரியான பதிலடியைக் கூட பெ.முழக்கம் செய்தியாகப் பதியவில்லை.

★ பெ.முழக்கம், ''பா.ஜ.க.வையும் இடதுசாரிகளையும் கூட்டாளியாக்கிய வி.பி.சிங் 'முரண்பாடுகளை நிர்வகித்தல்' என்று இதற்குப் பேர்சூட்டியதாக'' வும், ''பா.ஜ.க.வின் பிரச்சார மேடையில் வி.பி.சிங் பேச மறுத்ததாகவும், தனது இயல்பான நட்பு சக்தி இடதுசாரிகள்தான் என்று கூறிய வி.பி.சிங் பா.ஜ.க.வை அரசியலுக்கான கூட்டணி என்று கூறியதாகவும்'' (பெ.மு. 25/12/2008) வி.பி. சிங்கின் சந்தர்ப்ப வாதத்தை நியாயப்படுத்தி இருந்தது.

அது என்ன 'இயல்பான நட்பு சக்தி', 'அரசியலுக்கான கூட்டணி'? சந்தர்ப்பவாதத்துக்கு இப்படியும் பொழிப்புரையா?

வி.பி.சிங்கிடம் மட்டுமல்ல பெ.தி.க.விடமும் இதே சந்தர்ப்ப வாதம்தான் உள்ளது. 'இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்' சார்பில் ஈழப்போர் நிறுத்தம் கோரி பிரெஞ்சுத் தூதரகத்தில் மனுக் கொடுக்கச் சென்ற குழுவிலும், தூத்துக்குடி பொதுக்கூட்டத்திலும் பா.ஜ.க.வுடன் பெ.தி.க. கைகோர்த்துள்ளது. பார்ப்பனிய பா.ஜ.க.வுடன் கைகோர்த்துள்ளவர்கள்தான், பு.ஜ.வின் பார்ப்பனிய எதிர்ப்புப் போக்கை சந்தேகிக்கிறார்களாம்!

ஈழப்பிரச்சினையில் துரோகமிழைத்த காங்கிரசையும், அதன் கூட்டணிக் கட்சிகளையும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிப்போம் என்று இவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். காங்கிரசைத் தோற்கடிப்பது என்பது தமிழகத்தில் ஜெயலலிதாவையும் மத்தியில் பா.ஜ.க.வையும் வெற்றிபெறச் செய்வதுதான்! இதுதான் பெரியார் திராவிடர் கழகத்தின் பார்ப்பனிய எதிர்ப்பா? நரேந்திர மோடியை எதிர்க்க முஸ்லிம் அமைப்புகளுடன் கூட்டு. ஈழப் பிரச்சினைக்கு பா.ஜ.க.வுடன் கூட்டு என்பதுதான் பெரியார் பாதையா?

★ தி.க. நாளிதழான விடுதலை, எழுத்தாளர் வ.கீதாவை 'எஸ்.வி.ராஜதுரையின் பார்ப்பனத் தோழி' எனத் தரம்தாழ்ந்து எழுதியிருந்தது. இதனைக் கண்டித்து 'வ.கீதா பிறப்பால் பார்ப்பனர்தான். ஆனாலும் பெரியாரியல்வாதி' என்று பெரியார் முழக்கம் எழுதியுள்ளது. மேலும் சின்னக்குத்தூசி, ஆந்திர நாத்திகர் கோரா, அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரி போன்றவர்களையும் பிறப்பால் மட்டும் பார்ப்பனர்களாகப் பார்க்கவில்லை என்று பெரியார் முழக்கம் அக்கட்டுரையில் உணர்த்தியுள்ளது. (பெரியார் முழக்கம் 19/03/2009) பெ.தி.க.வின் பார்ப்பனியம் குறித்த பார்வை இதுதான் என்றால், பு.ஜ.வின் பார்ப்பனிய எதிர்ப்பை மட்டும் எதன் அடிப்படையில் பெரியார் முழக்கம் சந்தேகிக்கிறது? இடஒதுக்கீட்டில் மாற்றுக் கருத்து ஒன்றை வைத்திருப்பதால் மட்டும் பார்ப்பனியம் என அது கருதுகிறதா?

பார்ப்பனியத்தின் சாயலோ, நிழலோ எங்காவது பு.ஜ.வில் இருந்தால் அதனை பெ.முழக்கம் சுட்டிக்காட்டியிருக்கலாம். அதை விடுத்து, கருவறை நுழைவுப் போராட்டம் முதல் தீட்சிதப் பார்ப்பனர்களுக்கெதிரான போராட்டம் வரை பார்ப்பனியத்துக்கு எதிராகத் தீவிரமாகப் போராடி வருபவர்களின் பார்ப்பனிய எதிர்ப்பை சந்தேகிப்பதாகக் கூறுவது, அதன் நாணயமற்ற சந்தர்ப்பவாதத்தைத்தான் நிரூபித்துக் காட்டுகிறது.

● ஆசிரியர் குழு

www.padippakam.com

# தரகு முதலாளிகளுக்கு மானியம் தொழிலாளிகளுக்குத் திருவோடு

## பொருளாதார நெருக்கடியின் சுமைகளைத் தொழிலாளர்களின் முதுகில் சுமத்தும் சதியை முறியடிப்போம்!

ஜனவரி 26, 2009 அன்று மட்டும் ஏறத்தாழ 85,000 இந்தியத் தொழிலாளர்கள் வேலையில் இருந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி நீக்கப்பட்டதாக செய்தி வெளியாகி இருக்கிறது. அவர்களின் எதிர்காலம் கருக்கப்பட்ட அதேநேரத்தில்தான், இந்திய அரசு தனது 60-ஆவது ''குடியரசு'' தினத்தை உற்சாகமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தது. இச்சம்பவம் நடந்து பத்து-பதினைந்து நாட்கள் கழித்து நாடாளுமன்றத்தில் இடைக்கால வரவு-செலவு அறிக்கையைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, ''உலகமே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வேளையிலும் இந்தியா ஏழு சதவீதப் பொருளாதார வளர்ச்சியை நோக்கி நடைபோடுவதாக''த் தனது உரையில் பீற்றிக் கொண்டார். இதைக் காணும்பொழுது, ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்தபொழுது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதைதான் நம் நினைவுக்கு வருகிறது.

ஒவ்வொரு நாளும் பங்குச் சந்தையில் ஏற்படும் இழப்புகள் பற்றி கவலைப்படும் மைய அரசு, கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக வேலையிழப்பு ஒரு சுனாமி போல இந்திய உழைக்கும் மக்களைத் தாக்குவது பற்றி அக்கறை கொள்ள மறுக்கிறது. அமெரிக்கா உருவாக்கிய இப்பொருளாதார நெருக்கடியால் இந்திய தகவல்-தொழில்நுட்பத் துறையிலும், வங்கி-காப்பீடு போன்ற நிதி நிறுவனங்களிலும் ஏற்பட்டுவரும் வேலையிழப்புகளைப் பற்றி ஊளையிட்டு வரும் முதலாளித்துவ பத்திரிகைகள், அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை இந்நெருக்கடியால் சின்னாபின்னமாகிப் போவதைப் பெரிதாகக் கண்டுகொள்வது கிடையாது.

இப்பொருளாதார நெருக்கடியால் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி ஆராய, மைய அரசால் சமீபத்தில் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதாம். எனினும், தொழிலாளர் நல அமைச்சருக்கு இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அழைப்பு அனுப்பப்படவில்லை எனக் கூறப்படுகிறது. மன்மோகன் - ப.சிதம்பரம் கும்பல் இந்திய உழைக்கும் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறைக்கு இதுவொரு சிறிய எடுத்துக்காட்டு.

மைய அரசின் தொழிலாளர் நலத் துறை வேண்டாவெறுப்பாக நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி, இப்பொருளாதார நெருக்கடியால் கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குள் இந்தியாவில் ஐந்து இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்திருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளது. ''அசோசாம்'' என்ற முதலாளிகளின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரத்தில் சுயவேலைவாய்ப்பு, அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத தொழில்கள் அனைத்தையும் உள்ளடக்கி ஏறத்தாழ ஒரு கோடி வேலையிழப்புகள் அடுத்த ஓராண்டுக்குள் ஏற்படும் எனக் கூறியிருக்கிறது. 'மார்க்சிஸ்டு' கட்சியின் தொழிற்சங்கத் (சி.ஐ.டி.யு.) தலைவர் எம்.கே. பாண்டே, வேலையிழப்பு ஒரு கோடியைவிட அதிகமாகவே இருக்கும் என உடுக்கை அடித்திருக்கிறார். 2010 வரை இந்நெருக்கடி நீடிக்கும் என முதலாளிகளே ஒப்புக் கொள்வதால், இந்த அபாயம் எதில் போய் நிற்கும் என்று இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. இப்பொருளாதார நெருக்கடியால் இந்தியப் பொருளாதாரத்திற்குப் பெரிய பாதிப்பு எதுவும் கிடையாது எனக் காட்டிக் கொள்வதற்காகவே இவ்வேலையிழப்புகள் பற்றி வாய் திறக்க மறுக்கிறது, மன்மோகன் சிங் கும்பல்.

திவாலாகிப் போன நிறுவனங்களைக் கைதூக்கி விடுவதற்காக அமெரிக்க அரசு அளிக்கும் மானியத்தைப் பெறும் நிறுவனங்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது, அமெரிக்க அரசு. இந்தியாவிலோ கடந்த ஆறு மாதங்களுக்குள் எளிதான வங்கிக் கடன், வட்டிக் குறைப்பு என்ற பெயரில் ஏறத்தாழ ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் தரகு முதலாளிகளுக்காக வாரி வழங்கப்பட்டாலும், அம்மானியத்தைப் பெற்ற முதலாளித்துவ நிறுவனங்களின் மீது எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. குறைந்தபட்சம், உற்பத்தியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றுகூட அவர்கள் கேட்டுக் கொள்ளப்படவில்லை. இதனால் அவர்கள் ஒருபுறம் அரசின் மானியத்தைப் பெற்றுக் கொள்வதோடு, மறுபுறம் வேலைநீக்கம், சம்பள வெட்டு, பணிச்சுமை போன்ற தாக்குதல்களைத் தொழிலாளிகளின் மீது திணித்துத் தங்களின் இலாபம் சரிந்து போய் விடாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

வைரம் பட்டை தீட்டும் தொழிலுக்குப் பெயர் பெற்ற குஜராத்தின் சூரத்தில் இந்நெருக்கடிக்கு முன்பாக ஒரு வைரக் கல்லைப் பட்டைத் தீட்டுவதற்குக் கூலியாக ரூ.6.75 தரப்பட்டது.

**தமிழகத்தில் இயங்கி வரும் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் தொழிற்சங்கம் அமைக்க அனுமதி கோரி, பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து சென்னையில் நடத்திய சாலை மறியல்.**




படிப்பகம்

www.padippakam.com



நடைபாதை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளைத் தடையின்றி நடைமுறைப்படுத்தக் கோரி, அமைப்புசாரா தொழிலாளர்கள் கூட்டமைப்பினர் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.


நெருக்கடிக்குப் பிறகு கூலி ஐந்து ரூபாயாகக் குறைக்கப்பட்டது. ''நெருக்கடிக்கு முன்பாக வைரக் கல்லைப் பட்டைத் தீட்டும் பொழுது ஏற்படும் சின்ன சின்னத் தவறுகளைக்கூடக் கண்டு கொள்ளாத முதலாளிகள், இப்பொழுது தொழிலாளிகளை வேலையில் இருந்து துரத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சின்ன தவறுகளைக்கூட ஊதிப் பெருக்குவதாக''க் கூறுகிறார், ராம் என்ற தொழிலாளி.

நெருக்கடிக்கு முன்பாக சூரத்தில் மட்டும் ஏறத்தாழ ஐந்து இலட்சம் தொழிலாளர்கள் வைரம் பட்டை தீட்டும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இந்த நெருக்கடியால் சூரத்தில் மட்டும் இரண்டு இலட்சம் தொழிலாளர்களின் வேலை பறி போய்விட்டதாகக் கூறப்படுகிறது. 35 தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய்விட்டனர். தொழிலாளர்களின் இந்த அவலம் பெரிதாகப் பேசப்படவில்லை. மாறாக, அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் நரேந்திர மோடியின் சாதனைகள்தான் டாம்பீகமாக விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் சிறிதும் பெரிதுமாக 12,000 நூற்பாலைகளும், இன்ஜினியரிங் தொழிலகங்களும் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகளில் தற்பொழுது உற்பத்தி பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளதால், ஏறத்தாழ 25 சதவீதத் தொழிலாளர்கள் வேலையிழந்துவிட்டதாக கோயம்புத்தூர் மாவட்ட சிறுதொழில் சங்கத் தலைவர் இளங்கோ கூறுகிறார். ஆயுத்த ஆடை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சரிவால் திருப்பூரில் மட்டும் 2.5 இலட்சம் தொழிலாளர்கள் நேரடியாகவும் 1.5 இலட்சம் தொழிலாளர்கள் மறைமுகமாகவும் பாதிப்படைந்துள்ளனர். திருப்பூரில் செயல்பட்டு வரும் 3,000 ஆயுத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்களுள், பல நூற்றுக்கணக்கான சிறிய நிறுவனங்கள் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் மூடப்படுவது தொடர்வதால், குறைந்தபட்சம் 1.5 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழக்கக் கூடும் என்கிறார், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் சக்திவேல்.

திருப்பூரைப் போலவே, ஆயத்த ஆடை ஏற்றுமதித் தொழிலில் கொடிகட்டிப் பறந்த அரியானா மாநிலத்தின் குர்கான் பகுதி தொழிற்பேட்டை இன்று மயானம் போலக் காட்சியளிப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. கூலி குறைவாகக் கிடைத்தால் கூட பரவாயில்லை; வேலை கிடைத்தால்போதும் என்ற நிலைக்

இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் தலைநகராகக் கருதப்படும் பெங்களூருவின் மறுபக்கம்: உள்நாட்டிலேயே அகதிகள் போல வாழ வேண்டிய கட்டாயத்தில் கூலித் தொழிலாளர்கள்.



www.padippakam.com

குத் தொழிலாளர்கள் வந்துவிட்டபோதும், வேலை கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக இருப்பதாகவும்; இந்நெருக்கடியைத் தாக்குப் பிடித்து நிற்கும் பெரிய நிறுவனங்கள், நிரந்தரத் தொழிலாளர்களைத் தினக்கூலிகளாக மாற்றி வருவதோடு, சேமநல நிதி, மருத்துவ ஈட்டுறுதி போன்ற சலுகைகளைத் தொழிலாளர்களுக்கு வழங்க மறுப்பதாகவும் குர்கான் பகுதி தொழிலாளர்கள் வேதனையோடு குறிப்பிடுகின்றனர்.

300 தொழிலாளர்கள் வேலை பார்த்துவந்த "பாத்திமா ஃபேப்" என்ற நிறுவனத்தில் தற்பொழுது 30 தொழிலாளர்கள்தான் வேலை பார்க்கின்றனர். வேலையிழப்பு எந்தளவிற்குத் தீவிரமாக இருக்கிறது என்பதற்கு மட்டுமல்ல, தொழிலாளர்கள் மீது எந்தளவிற்குப் பணிச் சுமை ஏற்றப்படுகிறது என்பதற்கும் இதுவொரு சிறிய எடுத்துக்காட்டாகும். தமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உயர்த்தப்பட்ட அடிப்படை ஊதியத்தைக் குறைக்க வேண்டும் என குர்கானைச் சேர்ந்த பெரிய நிறுவனங்கள் அரியானா மாநில அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன. "தொழில் அமோகமாக நடந்தபொழுது கிடைத்த இலாபத்தை எங்களுடனா பங்குபோட்டுக் கொண்டார்கள்?" எனத் தொழிலாளர்கள் இதற்கு முகத்தில் அறைந்தாற்போல பதில் கொடுத்துள்ளனர்.




**ஜெர்மனியில் உள்ள கார் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் வேலை பாதுகாப்பு உள்ளிட்ட உரிமைகளை வலியுறுத்தி ஸ்டட்கர்ட் நகரில் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி. ஜெர்மனியில் தொழிற்சங்கத்தில் சேர மறுத்த தொழிலாளர்கள்கூட, இப்பொழுது தொழிற்சங்கங்களைத் தேடி வந்து உறுப்பினராகச் சேருகிறார்களாம்.**

தாராளமயத்தால் விவசாயம் நாசமாக்கப்பட்டதால், கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்த விவசாயிகளைக் கட்டுமானத் தொழில்தான் கவர்ந்து கொண்டது. தற்பொழுது இத்தொழிலும் படுத்துவிட்டதால், தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 30 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தியக் கட்டுமானத் தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சிங்காரவேலு குறிப்பிடுகிறார். இத்தொழிலாளர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் வேலை கிடைத்தாலே அதிருஷ்டம்தான் என்கிறார் அவர்.

அசோக் லேலண்ட் போன்ற பல்வேறு பெரிய நிறுவனங்களில்கூட தற்பொழுது மூன்று நாட்களுக்குத்தான் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. "நிலைமை சரியான பிறகு, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில்கூட வேலை செய்து இந்த இழப்பை ஈடு செய்து கொள்ளலாம்" என அந்நிறுவன முதலாளிகள் தொழிலாளர்களுக்கு நிலைமையைப் புரிய வைக்கிறார்களாம்.

கேரள மாநிலத்தின் பொருளாதாரமே மிளகு, ரப்பர் போன்ற வர்த்தகப் பயிர்களின் ஏற்றுமதியையும், அரபு நாடுகளில் வேலை பார்க்கும் கேரளத் தொழிலாளர்கள் அனுப்பி வைக்கும் அந்நியச் செலாவணியையும்தான் நம்பியிருக்கிறது. இப்பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள்கூட இறக்குமதிக்குப் பல்வேறு தடைகளை விதித்துள்ளன. ஆனால், மன்மோகன் சிங் கும்பலோ விவசாய விளைபொருட்களின் இறக்குமதிக்குத் தற்காலிகத் தடைகூட விதிக்க மறுத்து வருவதால், கேரளாவின் வர்த்தகப் பயிர் விவசாயம் முற்றிலுமாக நிலைகுலைந்து போய் விட்டது.

இந்த ஆண்டு இறுதிக்குள் துபாய் போன்ற அரபு நாடுகளில் வேலைபார்க்கும் கேரளத் தொழிலாளர்களுள் 2 இலட்சம் பேர் வேலையிழந்து இந்தியாவிற்குத் திரும்பிவிடுவார்கள் என அம்மாநில அரசே ஒப்புக்கொண்டுள்ளது. இப்படித் திரும்பும் தொழிலாளர்களுக்கு உள்ளூரில் வேலை கிடைக்காது என்பது ஒருபுறமிருக்க, வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் பொருட்டு வாங்கியிருந்த கடனையும் அடைக்க முடியாமல் அவர்கள் சிக்கிக் கொள்வார்கள். கேரளாவின் முக்கியமான இந்த இரண்டு வருவாய்களும் அடிபட்டுப் போனதால், அம்மாநிலத்தின் வீட்டு மனை வியாபாரம் "ஃப்யூஸ் போன பல்பு" போலாகிவிட்டது.

தாராளமயத்தின் பின் இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை "வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி" என்றுதான் பொருளாதார அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏற்கெனவே, விவசாயம் சீரழிந்துவிட்ட நிலையில், புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படாத நிலையில் இந்த நெருக்கடி இந்தியாவைத் தாக்கியிருக்கிறது என்பதுதான் இங்கே கவனிக்கத்தக்கது. இதனால் இந்த நெருக்கடி கிராமப்புற விவசாயிகள் மீதும், கிராமங்களிலிருந்து வேலை தேடி நகரங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள கூலித் தொழிலாளர்கள் மீதும் ஏற்படுத்திவரும் தாக்கம் நினைத்துப் பார்ப்பதற்கே அச்சமூட்டுவதாக இருக்கிறது.

ஆளும் காங்கிரசு கூட்டணியிலுள்ள கட்சிகளோ பொருளாதார நெருக்கடி இருப்பதாகவே ஒப்புக் கொள்ள மறுக்கின்றன. போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளோ சடங்குத்தனமான எதிர்ப்புகளுக்கும், வாய்ச்சவடால்களுக்கும் மேல் எதுவும் செய்யாமல் ஒதுங்கிக் கொள்கின்றன. இது, நெருக்கடியின் சுமைகளை மேலும் மேலும் மக்கள் மீது சுமத்தும் துணிவை அரசுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

ஓட்டுக்கட்சிகள், அவற்றின் தொழிற்சங்கங்கள், தேர்தல் என்ற வழமையான வழியில் இந்த நெருக்கடிக்குத் தீர்வு கண்டுவிட முடியுமா? அல்லது தனியார்மயம் - தாராளமயத்திற்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் திரண்டு தெருப் போராட்டங்களில் இறங்கப் போகிறோமா? - இதுதான் இப்போது இந்திய மக்களின் முன்னுள்ள கேள்வி.

• செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

குணத்துடன் இப்புரட்சிகர அமைப்புகள் இப்பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, கடந்த மார்ச்-23 ம் நாளன்று தமிழகம் தழுவிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டங்களை இப்புரட்சிகர அமைப்புகள் நடத்தியுள்ளன.

**சென்னை**யில் மெமோரியல் அரங்கம் எதிரிலும்; **தஞ்சை**யில் பனகல் மாளிகை எதிரிலும் **தருமபுரி**யில் ராஜ கோபால் பூங்கா அருகிலும்; **திருச்சி**யில் புத்தூர் நான்கு ரோடு அருகிலும்; **மதுரை**யில் தலைமை தபால் நிலையம் அருகிலும்; **புதுச்சேரி**யில் பழைய பேருந்து நிலையம் அருகிலும்; **கோவை**யில் மையப் பேருந்து நிலையம் அருகிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு பெருந்திரளான மக்கள் பேராதாரவுடன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் வழக்குரைஞர்களும் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

போலீசின் பல கழுத்தறுப்பு வேலைகளை முறியடித்து, மார்ச்-25ந் தேதி சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் அ.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில், கீழமை நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் பி.திருமலைராசன்; மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் சி.ராஜு, அனைத்திந்திய மக்கள் வழக்குரைஞர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.சங்கரசுப்பு மற்றும் ம.க.இ.க. மாநிலப் பொதுச்செயலர் தோழர் மருதையன் ஆகியோர் உரையாற்றினர். ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் தோழர் முகிலனின் ஓவியக்கண்காட்சியும் பார்வையாளர்களிடம் போராட்ட உணர்வூட்டுவதாக அமைந்தன.




-பு.ஜ.செய்தியாளர்கள்.

# இந்திய-சிங்கள அரசுகளின் ஈழத்தமிழின அழிப்புப் போர்!
# தமிழகமே, விழித்தெழு! போராடு!

**— தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் தொடர்பிரச்சாரம்**

ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஆதரித்தும், சிங்கள பாசிச அரசு நடத்திவரும் இன வெறிப் போரை எதிர்த்தும், அந்தப்போரில் சிங்கள அரசுடன் கைகோர்த்து நிற்கும் மேலாதிக்க இந்திய அரசை அம்பலப்படுத்தியும் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தொடர்பிரச்சார இயக்கங்களை மேற்கொண்டு வருகின்றன.

சீர்காழியில் வி.வி.மு சார்பில் 09.03.09 அன்று பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வி.வி.மு. மாவட்ட அமைப்பாளர் தோழர் ந.அம்பிகாபதி சிறப்புரையாற்றினார். ம.க.இ.க. மையக்கலைக் குழுவின் நாடகமும் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன.

காங்கேயத்தில் பு.ஜ.தொ.மு. சார்பில் 17.03.09 அன்று ஊர்வலமும், பேருந்து நிலையம் அருகே பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. வி.வி.மு. தோழர் அ.ஜெயகாந்த்சிங்கின் சிறப்புரையும், ம.க.இ.க. மையக்கலைக்குழுவின் கலைநிகழ்ச்சியும் நாடகமும் இனவெறிப்போருக்கு எதிராகப் போரிட அறைகூவின.

திருச்சியில் ம.க.இ.க., பு.மா.இ.மு., பெ.வி.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய அமைப்புகளின் சார்பில் 19.03.09 அன்று சத்திரம் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். ம.க.இ.க. தோழர்களின் கவிதை வாசிப்பும், நாடகமும், மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி-நாடகமும் ஈழ மக்களின் அவலத்தைக் கண்முன் நிறுத்தின.




பு.மா.இ.மு சார்பில் 05.03.09 அன்று திருச்சி மரக்கடை சந்தன மகால் அரங்கில் கல்லூரி மாணவர்களை அணிதிரட்டி நடத்தப்பட்ட அரங்குக்கூட்டத்தில் தோழர் அ.ஜெயகாந்த் சிங் சிறப்புரையாற்றினார்.

ஓசூரில் வி.வி.மு., பு.ஜ.தொ.மு., சார்பில் 21.03.09 அன்று ஓசூரில் இராம் நகரில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் அ.ஜெயகாந்த்சிங் சிறப்புரையாற்றிய பின் ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை, உடுமலை, பட்டுக்கோட்டை உள்ளிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இப்புரட்சிகர அமைப்புகள் தெருமுனைக்கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

-பு.ஜ.செய்தியாளர்கள்.


படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# மூலதனத்திற்கு எதிராக பாட்டாளிகளின் போர்: குலுங்கியது பிரான்சு!




அமெரிக்கா உருவாக்கிய பொருளாதார நெருக்கடியின் சுமைகளை உழைக்கும் மக்களின் தலையில் சுமத்தும் சதித்தனத்திற்கு எதிராக ஐரோப்பிய தொழிலாளி வர்க்கம் களத்தில் இறங்கியிருக்கிறது. போலீசுக்கு எதிரான இளைஞர்களின் போராட்டமாக கிரீஸ் நாட்டில் வெடித்த இந்தக் கலகம், ஸ்பெயின், அயர்லாந்து, போர்த்துகல், ஜெர்மனி, இத்தாலி, பிரிட்டன் எனப் பரவி, பிரான்சில் சர்கோஸி அரசாங்கத்தை நிலைகுலையச் செய்யும் அளவிற்குத் தீவிரமடைந்துள்ளது.

நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள பிரெஞ்சு முதலாளிகளைக் காப்பாற்றுவதற்காக, தொழிலாளர்களையும் இளைஞர்களையும் காவு கொடுக்கும் சர்கோஸி அரசின் ''பெயில்-அவுட்'' கொள்கைக்கு எதிராக பிரான்சில் கடந்த ஜனவரி 29 அன்று நடந்த பொது வேலைநிறுத்தத்தில் 10 இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். மார்ச் 19-இல் நடந்த இரண்டாவது பொது வேலை நிறுத்தத்தில் 30 இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளி மாணவன் முதல் பல்கலைக்கழக மாணவன் முடிய, அஞ்சல் துறை ஊழியர் தொடங்கி விமானப் போக்குவரத்து அதிகாரி வரை, பொதுத்துறை - தனியார் துறை என்ற எந்த வேறுபாடுமின்றித் தொழிலாளி வர்க்கம் ஒற்றுமையோடு நடத்திய இவ்வேலை நிறுத்தங்கள் பிரான்சையே உலுக்கி எடுத்துவிட்டன. விசுவாசமான போலீசாரையும், இராணுவத்தினரையும், அதிகார வர்க்கக் கும்பலையும் தவிர, வேறு யாரும் சர்கோஸி அரசை ஆதரிக்கவில்லை. 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட பிரெஞ்சு மக்கள் இப்பொது வேலைநிறுத்தத்தை ஆதரித்ததோடு, 213 இடங்களில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் குடும்பம் குடும்பமாகக் கலந்து கொண்டனர்.

''அடிப்படை ஊதியத்தை அதிகரிக்க வேண்டும்; தொழிலாளர்களை வேலையிலிருந்து அதிரடியாக நீக்கக் கூடாது; புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்''— இவை தான் பிரெஞ்சு தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகள்.

அடிப்படை ஊதியத்தை உயர்த்த மறுத்து வரும் சர்கோஸி அரசாங்கம், பிரெஞ்சு முதலாளிகளுக்குத் அள்ளிக் கொடுத்துள்ள மானியமோ 1,79,400 கோடி ரூபாய். தொழிலாளிகளை அதிரடியாக வேலையில் இருந்து தூக்கியடிக்கும் சுதந்திரம் பிரெஞ்சு முதலாளிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதால், இந்த ஆண்டு இறுதிக்குள் பிரான்சில் வேலையற்றோரின் எண்ணிக்கை 30 இலட்சத்தைத் தாண்டும் என அரசின் புள்ளி விவரங்களே கூறுகின்றன.

இத்தீவட்டிக் கொள்கையால் பிரெஞ்சு இளைஞர்களின் எதிர்காலம் கருகிப் போய்விட்டதால், மாணவர்கள் தான் போராட்டத்தின் முன்னணியில் உள்ளனர். பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லாமல் வகுப்புளைப் புறக்கணித்துள்ள பிரெஞ்சு மாணவர்கள்தெருப் போராட்டங்களின் மூலம் வர்க்கப் போராட்டத்தைக் கற்று வருகின்றனர்.

''எனது உரிமைகளை, எனது குடும்பத்தின் உரிமைகளை மீட்காமல் ஓயமாட்டேன்'' என்கிறார் ஆலெய்ன் என்ற உருக்காலைத் தொழிலாளி. தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தால், அயர்லாந்தில் அரசாங்கமே பதவியை விட்டு ஓடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

''அரசாங்கம் மாறினால் மட்டும் போதாது; உழைப்புச் சக்தி சுரண்டலின் மீது நிறுவப்பட்டுள்ள இம்முதலாளித்துவ அமைப்பு முறையே மாற வேண்டும்; சோசலிசமே ஒரே மாற்று'' என்பதை இப்போராட்டங்களின் ஊடாக ஐரோப்பிய தொழிலாளி வர்க்கம் மட்டுமல்ல, அனைத்துலகத் தொழிலாளர்களும் உணர்ந்து கொள்ளும் நாள் வெகுதொலைவில் இல்லை!




படிப்பகம்